33°/29°c

# உதயன்

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.30
கொழும்பு : ரூபா.30

பக்கம் 44

சுடர் 28
கதிர் 146

வள்ளுவர் ஆண்டு 2044
சித்திரை 8, ஞாயிறு 21.04.2013

UTHAYAN - A Lively National Tamil Daily
Website: www.onlineuthayan.com

# திட்டம் தயார்

## காணிகளை சுவீகரிக்க

### ஆள்களை அழைத்து அடையாளப் படுத்தி வலி. வடக்கில் காணிகள் சுவீகரிக்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணம், ஏப்ரல் 21

யாழ். மாவட்டத்திலேயே அதிக விவசாய மற்றும் மீன்பிடி வளமிக்க வலி. வடக்கில் 24 கிராம சேவையாளர் பிரிவுகளை சுவீகரிக்கும் நடவடிக்கைகளை அரசு ஆரம்பித்துள்ளது. நாளை திங்கட்கிழமை முதல் இதற்கான பணிகள் முழுவீச்சில் ஆரம்பிக்கப்பட உள்ளன. யாழ். மாவட்டக் காணி அபிவிருத்தித் திணைக்களம் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

**நாளை அறிவிப்பு**

சுவீகரிக்கப்படுவது தொடர்பான அறிவிப்பு காணிகளில் நாளை முதல் ஒட்டப்படவுள்ளன. இதற்காக 24 கிராம சேவகர்கள் இன்று விடுவிக்கப்படாத முகாம் பகுதிகளுக்கு (உயர் பாதுகாப்பு வலயம்) அழைத்துச் செல்லப்படவுள்ளனர். இந்தப் பகுதிகளுக்கு இதுவரையில் மக்களோ அதிகாரிகளோ அனுமதிக்கப்பட்டதேயில்லை.

1990ஆம் ஆண்டிலிருந்து இந்த 24 கிராம சேவகர் பிரிவுகளையும் சேர்ந்த மக்கள் இடம்பெயர்ந்து வாழ்கின்றனர். சொந்த இடங்களில் மீளக்குடியமர்வதற்காக 23 வருடங்களாக அவர்கள் காத்திருக்கின்றனர். தமது காணிகளை விடுவிக்கக் கோரி அவர்கள் பல போராட்டங்களையும் நடத்தியிருந்தனர்.

விடுவிக்கப்படாத கி. சே. முழுமையாக 16, பகுதியாக 8. மீளக்குடியமர வேண்டியவர்கள் 22,515.

இந்தப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த 4,000 பேர் இன்னமும் நலன்புரி முகாம்களிலேயே அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் வாழ்கின்றனர்.

**வழக்கு நிலுவையில்**

தனது சொந்த இடத்திற்குத் திரும்பிச் செல்ல அனுமதிக்குமாறு கேட்டு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்திருந்தார். அது நிலுவையில் உள்ளது. மே 13ஆம் திகதி அந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு வருகிறது.

இதற்கிடையே, வலி. வடக்கில் காணிகளை சுவீகரிப்பது தொடர்பாக அதிகாரிகள் நேற்றுமுன்தினம் யாழ். செயலகத்தில் கூடி ஆராய்ந்தனர். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், மாவட்ட காணி சுவீகரிப்பு அலுவலர் ஆ.சிவசுவாமி, வலி. வடக்கு மற்றும் கோப்பாய் பிரதேச செயலர்கள், இராணுவ அதிகாரிகள் ஆகியோர் காணி சுவீகரிப்புத் தொடர்பில் கூட்டத்தில் தீவிரமாகப் பரிசீலித்தனர். திங்கட்கிழமை முதல் பணிகளை விரைவுபடுத்துவதற்குக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

**அடையாளம்**

அத்துடன், நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை முதல் காணிச் சொந்தக்காரர்களை அழைத்துச் சென்று காணிகளை அடையாளப்படுத்தி அவற்றைச் சுவீகரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.(உ-5)

மேலும் : பக். 03




போர் முடிந்தாலும் போராட்டம் முடியவில்லை.

## வன்னி மக்கள் கிளர்ந்து போராட்டம்

### தமது காணிகளை சிங்களவர்களுக்கு பகிர்ந்தளித்ததை எதிர்த்து நேற்று பேரணி

கொக்கிளாய், கருநாட்டுக்கேணி, கொக்குத்தொடுவாய் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையான மக்கள் நேற்று கிளர்ந்தெழுந்து ஆர்ப்பாட்டம் நடத்தினர். தமது வயல் நிலங்கள் சிங்கள மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே அவர்கள் கிளர்ச்சி செய்தனர். மணலாறு என அழைக்கப்பட்ட தமிழ்க் கிராமத்தை வெலி ஓயா எனப் பெயர் மாற்றம் செய்த அரசு, அங்கு எண்பதுகளில் சிங்களவர்களைக் குடியேற்றியது. போரால் அவர்கள் வெளியேறி இருந்தனர். இப்போது அவர்கள் அரசாலும் இராணுவத்தாலும் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர். அவர்களுக்கே ஜனாதிபதி நிலங்களை நேற்றுக் கையளித்தார். தமிழர்கள் அதனை எதிர்க்கின்றனர்.

விரிவான செய்தி: பக்.02

## காணிக் கச்சேரியில் புறக்கணிப்பு

முல்லைத்தீவு,ஏப்.21

தமக்கு காணிகள் பகிர்ந்து வழக்கப்படாத நிலையில் முஸ்லிம்களுக்கு முல்லைத்தீவு கரைதுறைப்பற்றில் தனியான காணிக் கச்சேரி நடத்தப்படுவதாக தமிழ் மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

கடந்த செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் காணிக்காக விண்ணப்பித்த முஸ்லிம் மக்களுக்கு ஆரம்பகட்ட விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்காக புத்தளத்திலிருந்து 1,500 முஸ்லிம் குடும்பங்கள் அழைத்து வரப்பட்டன.

இதேவேளை, கடந்த 8ஆம் திகதி முல்லைத்தீவு தமிழ் மக்களுக்கான காணிக்கச்சேரி நடத்தப்பட்டு, அவர்களுக்கு காணி பகிர்ந்தளிக்கப்படாத நிலையிலேயே முஸ்லிம்களுக்கு காணி தொடர்பான விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.(த-5-400-402)

## பொலிஸார் மீது அமெ. பாய்ச்சல்

### சித்திரவதை செய்கிறார்கள் என தீவிர குற்றச்சாட்டு

கொழும்பு,ஏப்.21

தடுப்புக் காவலில் வைத்திருப்பவர்களை இலங்கைப் பொலிஸார் சித்திரவதை செய்கிறார்கள் என்று அமெரிக்கா குற்றஞ்சாட்டி உள்ளது.



மனித உரிமைகளின் நிலை தொடர்பான கடந்த வருடத்துக்கான தனது வருடாந்த அறிக்கையை அமெரிக்கா நேற்று வெளியிட்டது. அதில் இலங்கைப் பொலிஸாரின் மனித உரிமை மீறல்கள் குறித்துக் காட்டமாக விமர்சித்துள்ளது.

பொலிஸார் செய்யும் இத்தகைய மனித உரிமை மீறல்கள் குறைந்தபட்சம் 7 ஆண்டுகள் முதல் அதிகபட்சம் 10 ஆண்டுகள் வரையான தண்டனை விதிக்கக் கூடியவை என்று அது தெரிவித்துள்ளது. பொலிஸாரும் படையினரும் சித்திரவதைகளில் ஈடுபட்டார்கள் என்பதை நம்பக்கூடிய அறிக்கைகள் இருக்கின்றன என்றும் அமெரிக்கா கூறியுள்ளது.

ஆதாரங்களையும் வாக்குமூலங்களையும் சித்திரவதை மூலம் பொலிஸார் பெறுவதற்கு பயங்கரவாதத் தடைச் சட்டம் இடமளிக்கிறது என்றும் அமெரிக்க அறிக்கை தெரிவிக்கிறது. (உ)

விரிவான செய்தி: பக்.02



தொகுதிகளிலும் தில்லுமுல்லா?

## இரகசியமாக எல்லை நிர்ணயம்

### உள்ளூர் ஊடகங்களின் விளம்பரங்கள் எதுவுமின்றி

யாழ்ப்பாணம், ஏப்.21

வடக்குமாகாண சபைத் தேர்தல் தொகுதிவாரிமுறைமையில் நடைபெறவுள்ளதாக எதிர்பார்க்கப்படும் நிலையில், யாழ். மாவட்ட எல்லை நிர்ணயச் செயற்பாடுகள் இரகசியமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தச் செயற்பாடுகள் தொடர்பில் உள்ளூர் ஊடகங்களில் எதுவித விளம்பரங்களும் செய்யப்படாமல் அரச ஊடகங்களில் மாத்திரமே விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

விரிவான செய்தி: பக்.02

பேக்கரி மற்றும் கேற்றரிங் உபகரணங்கள் தற்போது யாழ்ப்பாணத்தில
12 மாத உத்தரவாதம்
இலகுதவணை கொடுப்பனவு முறை
பேக்கரி அவன்
பேக்கரி மிக்ஷர்
றைஸ் குக்கர்
றைஸ் ஸ்டீமர்ஸ்
க்ளீனிங் உபகரணங்கள்

From JYSPER Catering equipment
ஏப்பிரல் மாதம் முழுவதும் 10% விலைக்கழிவு
Call Hotline 0773 600812
59.தர்மாராம வீதி(கொலன்னாவ வீதி).தெமட்டகொடை.கொழும்பு 09
Tel: 011 4 820 331 Mobile: 077 3 600 812 Fax : 011 2 678 369
E-mail: bakerysection@jysper.com
320/ C ,பிரதான வீதி,யாழ்ப்பாணம்
Tel: 011 7 220 085 Fax : 011 2 678 369
E-mail : jaffna@jysper.com
3158,தஹய்யாகம,டீ.எஸ்.சேனாநாயக்க மாவத்தை,அநுராதபுரம
Tel: 025 2 226 939Fax : 025 2 226 939
E-mail : apura@jysper.com

## வடக்குத் தேர்தல் செப்ரெம்பரில் தான்

ஜனாதிபதி மீண்டும் உறுதி

வடமாகாண சபைத் தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் இடம்பெறும். இதில் எந்த மாற்றமும் கிடையாதென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று மீண்டும் தெரிவித்துள்ளார்.

வெலி ஓயா பொதுநோக்கு மண்டபத்தில் சிங்கள மக்களுக்கு காணிகள் பகிர்ந்தளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடமாகாண மக்கள் கடந்த 30 வருட காலமாக இடம்பெற்ற உள்நாட்டுப் போரில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட மக்களது பிரச்சினைகளை தீர்க்கும் பொருட்டு வடமாகாண சபைத் தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடத்தப்படும்- என்றார்.

இதேவேளை வடமாகாண சபைத் தேர்தல் நடத்தக்கூடாதென அரசின் பங்காளிக் கட்சிகள் வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-5)

# நல்லிணக்கம் குறித்துப் பேச பாலிதவுக்கு என்ன அருகதை?

### சுரேஷ் பிரேமச்சந்திரன் கொதிப்பு



யாழ்ப்பாணம்,ஏப்.21

தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைக்கு எதிர்மறையாக அந்த மக்களை அழித்தொழிக்கும் வகையில் செயற்படும் இந்த அரசுக்கோ, பாலித கொஹன்னவுக்கோ நல்லிணக்கம் பற்றி பேசுவதற்கு எந்த யோக்கியதையும் கிடையாது. இவர்கள் இனவாதத் திமிரில் பேசுகின்றனர்.

இதனால் புரிந்துணர்வு ஒரு போதும் உருவாகாதென்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

'குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுக் கொடுப்பதன் ஊடாக நல்லிணக்கம் ஏற்படப் போவதில்லை' என்று ஐ.நா.வுக்கான இலங்கையின்நிரந்தர வதிவிடப் பிரதிநிதி பாலித கொஹன்ன தெரிவித்திருந்தார்.

இந்த விடயம் தொடர்பாகக் கேட்டபோதே சுரேஷ் பிரேமச்சந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எத்தனையோ தமிழ் இளைஞர்- யுவதிகளை விசாரணைகள் எதுவுமின்றி சிறைச்சாலைகளில் வைத்திருக்கிறீர்கள். தொடர்ந்து இவர்களை தடுத்து வைத்திருப்பதன் மூலம் நல்லிணக்கம் வரும் என்று பாலித எண்ணுகின்றாரா? கைது செய்த சரணடைந்த பலரின் நிலை என்னவென்று தெரியாமல் உள்ளது. இது பற்றி அரசு மௌனமாக உள்ளது. குறைந்தபட்சம் அவர்கள் உயிருடன் இருக்கின்றனரா? அல்லது இல்லையா என்று கூடச் சொல்லாமல் நல்லிணக்கம் பற்றிப் பேசுவதில் என்ன அர்த்தம் இருக்கின்றது. போர் முடிந்து 4 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் நல்லிணக்கம் ஏற்படுவதற்கு அரசு என்ன செய்துள்ளது? தமிழரின் பூர்வீக நிலப்பரப்பில் சிங்களக் குடியேற்றம் மேற்கொள்வது, பௌத்த கோயில் அமைப்பது, காணிகளை அடாத்தாகப் பிடித்து இராணுவ முகாம் அமைப்பது தான் நல்லிணக்கத்தின் வெளிப்பாடா? - என்றார். (த-5)

## படைகளுக்கு நிலங்கள் பறிப்பதே யாழ்.காணி அலுவலகத்தின் பணி

யாழ்ப்பாணம்,ஏப்.21

யாழ்ப்பாணத்தில் காணி அலுவலகம் திறக்கப்பட்டு ஒரு மாத காலத்துக்குள்ளேயே தமிழ் மக்களின் காணிப்பிரச்சினைகள் எதுவும் தீர்க்கப்படாமல் படையினருக்குக் காணி சுவீகரிக்கும் நடவடிக்கைகளையே அது மேற்கொண்டு வருகிறது.

கடந்த மார்ச் மாதம் 11 ஆம் திகதி யாழ்.மாவட்டக் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.

இதன் போது கருத்துத் தெரிவித்திருந்த காணி அமைச்சர், ''வலி.வடக்கின் 24 கிராம சேவையாளர் பிரிவுகளைக் கைப்பற்றி இராணுவத்திடம் ஒப்படைக்கவுள்ளதாக 'உதயன்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. இந்தச் செய்தி முழுப்பொய். நாம் எமது இந்த அலுவலகத்தினூடாக யாழ்.மாவட்டத்தில் உள்ள தமிழ் மக்களின் காணிப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கவுள்ளோம்.

மீளக்குடியமர்த்தப்பட்ட மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவும் அரசின் தேவைகளுக்குப் பெறப்பட்ட காணிகளில் விடுவிக்கக் கூடிய காணிகளை விடுவிப்போம்' என்று கூறியிருந்தார்.

இதன்போது உடனிருந்த யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்கவும், ''நாம் மக்களின் காணிகளை விடுவித்து வருகின்றோம்'' எனத் தெரிவித்திருந்தார்.

இவர்கள் இவ்வாறு தெரிவித்து ஒரு மாத காலத்தினுள்ளேயே, திறக்கப்பட்ட யாழ்.மாவட்டக் காணி அலுவலகம் ஊடாக இராணுவத்தினருக்கான காணிகள் சுவீகரிக்கப்பட்டு வருகின்றன. (த-5)

# பெரும்பான்மை இனத்தவருக்கு எமது நிலங்களை வழங்குவதா?

### முல்லைத்தீவு மக்கள் கொதிப்பு



முல்லைத்தீவு, ஏப்.21

தமது வயல் காணிகள், ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைவாகப் பெரும்பான்மை இன மக்களுக்கு வழங்கப்படுவதை எதிர்த்து கொக்கிளாய், கருநாட்டுக் கேணி, கொக்குத்தொடுவாய் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 500க்கும் மேற்பட்ட மக்கள் கொக்குத்தொடுவாய் அ.த.க. பாடசாலை முன்பாக நேற்றுக் காலை போராட்டம் நடத்தினர்.

1984 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் மேற்படி கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இராணுவத்தினரால் அங்கிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர். அத்துடன் அந்தப் பிரதேசம் உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது.

இந்த நிலையில் கடந்த 2011 ஆம் ஆண்டு மேற்படி 3 கிராமங்களையும் சேர்ந்த மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டனர். இவர்களின் விவசாய நிலங்கள் இதுவரை விடுவிக்கப்படவில்லை.

மணலாற்றில் முந்திரிகைக் குளம் பகுதியில் முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவினால் வயல் காணிகள் இந்த மக்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. அதற்கான உறுதிகளும் அந்த மக்களிடம் உள்ளன.

தற்போது இந்த வயல் காணிகளுக்குச் சிங்களப் பெயர்கள் சூட்டப்பட்டு, வெலிஓயாவிலுள்ள சிங்கள மக்களுக்கு ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய நேற்று இவை பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. (த-5)

# இலங்கை அரசின் தவறுகளை பட்டியல்படுத்தியது அமெரிக்கா



நியூயோர்க்,ஏப் 21

அமெரிக்க இராஜாங்கச் செயலர் வெளியிட்டுள்ள 'மனித உரிமை நடைமுறைகள் தொடர்பான நாடுகளின் அறிக்கையில் இலங்கை மீது மீண்டும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஆண்டு தோறும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தொழிலாளர், ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகள் விவகாரப் பிரிவினால் மனித உரிமைகள் நடைமுறைகள் தொடர்பான நாடுகளின் அறிக்கை வெளியிடப்பட்டு வருகிறது.

2012 ஆம் ஆண்டுக்கான இந்த அறிக்கை நேற்று முன்தினம் அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரியால் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில், ஆரம்பத்திலேயே இலங்கையில் ராஜபக்ஷ குடும்பத்தின் அதிகாரம், ஆட்சி நிர்வாகத்தில் மேலோங்கியிருப்பது குறித்து சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆள்கள் காணாமற்போனது தொடர்பாக விசாரணைகளோ அதற்குப் பொறுப்பானவர்கள் தண்டிக்கப்படவோ இல்லை என்றும், பொலிஸாரின் சித்திரவதைகள், தாக்குதல்கள் தொடர்வதாகவும், ஊடகத்துறை மற்றும் நீதித்துறை மீதான தாக்குதல்கள் தொடர்ந்து இடம்பெறுகின்றதாகவும் அமெரிக்காவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தீவின் பெரும்பாலான எல்லா இடங்களுக்கும் செல்ல முடிகின்ற போதிலும் வடக்கில் தொடர்ந்தும் இராணுவ, பொலிஸ் சோதனைச் சாவடிகளில் சோதனைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகவும், உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்கள் நடமாட முடியாமல் தடுக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசை விமர்சிக்கும் ஊடகவியலாளர்கள் தாக்கப்படுவதால், சுயதணிக்கையை அவர்கள் பின்பற்ற வேண்டிய நிலை உள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பெண்களும், சிறார்களும் துன்புறுத்தப்படுவதாகவும், தமிழர்கள் மீதான இனரீதியான பாகுபாடுகள் தொடர்வதாகவும் இந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்களில் பெரும்பாலும், ஆயுதப்படையினர், பொலிஸார், படையில் இருந்து தப்பியோடியோர், ஆயுதக்குழுக்களின் உறுப்பினர்களே தொடர்புபட்டுள்ளதாக அமெரிக்க அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

போரின்போது இடம்பெற்ற நீதிக்குப் புறம்பான படுகொலைகள், காணாமற்போதல்கள், பொதுமக்கள் மீதான தாக்குதல்கள் உள்ளிட்ட பரந்தளவிலான மனித உரிமை மீறல்களில் இலங்கையின் முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா தொடர்புபட்டுள்ளதாக மனித உரிமை அமைப்புகள் குற்றஞ்சாட்டுவதாகவும் இந்த அறிக்கை கூறியுள்ளது. (த)

# கிணற்றில் குளித்த சிறுவன் தவறிவிழுந்து சாவு

### வேலணையில் நேற்று துயரச் சம்பவம்

யாழ்ப்பாணம், ஏப்.21

தனியே குளித்துக்கொண்டிருந்த 10 வயதுச் சிறுவன் கிணற்றில் தவறி விழுந்து நீரில் மூழ்கி உயிரிழந்தான்.

பெற்றோரின் கவனயீனமான செயற்பாடே இதற்குக் காரணம் என்று விசாரணையில் தெரிய வந்துள்ளதாக ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் வேலணையில் நேற்று மதியம் இடம்பெற்றது. சம்பவத்தில் அதேயிடத்தைச் சேர்ந்த சச்சிதானந்தன் டன்சன் என்ற சிறுவனே உயிரிழந்தான்.

வீட்டில் உள்ள கிணற்றில் குளித்துவிட்டு வருமாறு டன்சனுக்கு அவரது தாயார் கூறித் தனியே அனுப்பியுள்ளார். சிறிது நேரத்தில் சிறுவனைக் காணாது கிணற்றில் பார்த்தபோது சடலமாகக் கிடக்கக் காணப்பட்டார்.

கிணற்றில் துலா, கப்பி எதுவுமின்றி கையால் அள்ளியே சிறுவன் குளித்துள்ளான். எனினும் வாளியின் கயிற்று நீளமும் போதுமானதாக அமைந்திருக்கவில்லை.

கிணறு சுற்றிச் சிமெந்தினால் கட்டுகட்டப்பட்டபோதும், அது பதிவானதாகவே காணப்பட்டது.

சம்பவ இடத்தில் ஊர்காவற்றுறை நீதிவான் ஆர்.எஸ். மகேந்திரராஜா விசாரணை மேற்கொண்டார். (ஒ-4)

## நேற்று தலைகீழாக பறந்தது தேசியக்கொடி

யாழ்ப்பாணம், ஏப்.21

மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் இலங்கையின் தேசியக் கொடி தலைகீழாகப் பறந்தது.

அதனை அவதானித்த பொலிஸார் பின்னர் கொடியை இறக்கி உரிய முறையில் ஏற்றி வைத்தனர்.

மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் நேற்று முற்பகல் புதுவருட நிகழ்வு நடைபெற்றது.

இதன் போதே தேசியக்கொடி தலைகீழாகப் பறந்து, பின்னர் சரி செய்யப்பட்டது. (ஒ-4)

# காங்கேசன் துறைமுகத்தின் இரண்டாம் கட்டப் புனரமைப்பு

### இந்திய அதிகாரிகள் ஆரம்பித்து வைத்தனர்

யாழ்ப்பாணம்,ஏப்.21

இந்திய அரசின் நிதியுதவியுடன் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்ற காங்கேசன்துறை துறைமுகத்தின் இரண்டாம் கட்டப் புனரமைப்புப் பணிகள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இந்தியத் துணைத் தூதுவர் வி.மகாலிங்கம் தெரிவித்தார்.

காங்கேசன்துறை துறைமுகத்தை வர்த்தக நடவடிக்கைகளுக்காகப் புனரமைப்புச் செய்யும் நடவடிக்கைகள் 2011 ஆம் ஆண்டு இந்திய அரசினால் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

முதல்கட்டமாக துறைமுகப் பகுதியில் மூழ்கியிருந்த கப்பல்களை அகற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இந்தப் பணிகள் கடந்த ஆண்டு ஜனவரி மாதம் நிறைவடைந்திருந்தன.

இந்த நிலையில் இரண்டாம் கட்டமாக துறைமுகத்தை ஆழமாக்கும் நடவடிக்கைகள் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தியாவிலிருந்து வருகை தந்த அதிகாரிகள் நேற்றுமுன்தினம் மாலை இந்தப் பணிகளைத் தொடக்கி வைத்தனர். (த-5)

# எல்லை நிர்ணயக் குழுவுக்கு முறையற்ற நியமனங்கள்



யாழ்ப்பாணம், ஏப்.21

யாழ்.மாவட்ட எல்லை மீள் நிர்ணயக் குழுவுக்கு சட்டத்துக்கு முரணான வகையில் உறுப்பினர்கள் அரசியல் ரீதியாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

2012 ஆம் ஆண்டு 22 ஆம் இலக்க, உள்ளூர் அதிகார சபை தேர்தல்கள் திருத்தச் சட்டத்தினூடாக மாவட்ட மட்டத்தில் மாவட்ட எல்லைகள் மீள் நிர்ணயம் செய்யப்பட்டு வருகின்றன.

உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் வட்டார முறைமையைக் கொண்டே நடத்தப்பட்டு வருகின்றன. இதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் எல்லை மீள்நிர்ணயக் குழு அமைக்கப்படுகின்றது. இதன் தவிசாளராக மாவட்ட அரச அதிபர் செயற்படுவதுடன் அவருக்குக் கீழே 5 பேர் பதவி வழியாக உள்ளூராட்சி அமைச்சினால் நியமிக்கப்படவேண்டும்.

ஆனால் யாழ். மாவட்டத்தில் சட்டத்துக்கு முரணான வகையில் 6 பேர் அமைச்சர் அதாவுல்லாவினால் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். தேர்தல்கள் திணைக்களத்தின் சார்பில் எஸ். அச்சுதனும், மாவட்டம் அமைந்துள்ள மாகாண சபையின் உள்ளூராட்சி அமைச்சின் பிரதிநிதியாக க. வரதீஸ்வரனும், நில அளவையாளர் தலைமையதிபதித் திணைக்களத்தின் சார்பில் ஐ.ஈஸ்வரமூர்த்தியும், தொகை மதிப்புப் புள்ளி விவரத் திணைக் களத்தின் சார்பில் எஸ். உதய குமாரனும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதனைவிட அமைச்சரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட பகிரங்க அலுவலராக ஒருவரை நியமிக்க முடியும். ஆனால் யாழ். மாவட்டக் குழுவில் இருவர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கமும், சமுர்த்தி உதவி ஆணையாளர் க. மகேஸ்வரனும் இதற்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் குழுவின் தவிசாளர் என்ற வகையில் மாவட்ட செயலரிடம் கேட்டபோது, இந்த நியமனங்கள் அமைச்சர் அதாவுல்லாவினால் நேரடியாக வழங்கப்பட்டன. யார் யார் பதவி வழியாக நியமனம் பெற்றனர் என்பது தொடர்பில் எதுவும் தெரியாது- என்றார். (த-5)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# இன நல்லிணக்கத்தைப் பிளக்கும் சூட்சுமப் போக்கு.....

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பயிலும் முஸ்லிம் மாணவர்களின் தொழுகை அறை மீது, கழிவு ஒயில் வீசித் தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் குறித்து கிழக்கு மாகாண சபையின் உறுப்பினரான சட்டத்தரணி ஆரிப் சம்சுதீன் வெளியிட்டுள்ள கருத்து ஆழமாக நோக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

சமூகங்களுக்கு இடையில், முரண்பாடுகளைத் தோற்றுவித்து, தங்கள் [சொந்த] இலக்குகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக நாட்டில் காலத்துக்குக் காலம் உருவானது போன்று–

இப்போது உருவாகியுள்ள ஒரு கூட்டத்தினரின் செயற்பாடே மேலே குறிப்பிடப்பட்ட சம்பவம்– என்று அவர் அச்சொட்டாக எடுத்து விளக்கியுள்ளார், விவரித்துள்ளார்.

முஸ்லிம் மக்களின் உடை மற்றும் உணவு விடயங்களில், யதார்த்தத்துக்கு முரணான கருத்துக்களை சிங்கள மக்கள் மத்தியில் பரப்பிய சமூக விரோதிகளே–

வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ்– முஸ்லிம் மக்களிடையே பகைமையைத் தூண்டி விடுவதற்கு முயற்சிகளை முன்னெடுக்க உள்ளார்களா என்று சிந்திக்க வேண்டியுள்ளது– எனவும் அவர் கணித்துள்ளார்; கருத்து உரைத்துள்ளார்.

அவருடைய கணிப்பும் கருத்தும் சரியானவை என்பதனை இந்த நாட்டு நடப்புகளை நன்கு ஊன்றி உணர்ந்தவர்கள் புரிந்து கொள்வர்.

தென்னிலங்கையில், சிங்கள– முஸ்லிம் மக்கள் இடையே நிலவும் நல்லுறவைச் சீர்குலைத்துத் தவிடு பொடியாக்குவதற்கும், வர்த்தகத் துறையில் முஸ்லிம் மக்கள் உயர்ந்து நிற்பதைத் தறுக்கணிக்கச் செய்யவும்–

தமது பெரும்பான்மை இன பலத்தை இறுக்கி முறுக்கி (Reinforce) முடுக்கிவிடவும் திட்டமிட்ட ரீதியில் மதத்தின் பெயரால் மேலாண்மை கொள்ளவும், ஒவ்வாத செயற்பாடுகள் தீவிரமாக அரங்கேற்றப்பட்டு வருவது பரகசியமே. அதற்கு, அரசின் வல்லமை உள்ளோரின் ஆதரவும் ஆசீர்வாதமும் உண்டென்பதாக மிகப் பரவலாகக் குற்றம் சாட்டப்படுவதை கருத்தில் கொள்ளாமல் தவிர்க்க இயலாது.

அதே வழியில், இன்னொரு வகை வாய்ப்பாட்டில் தமிழ்– முஸ்லிம் மக்களிடையேயான உறவைச் சிதைக்க, சீர்குலைத்து விடுவதற்கான திட்டமிட்ட சதியின் ஓர் அங்கமே, யாழ்.பல்கலைக் கழகத்தில் முஸ்லிம் மாணவர்களின் தொழுகை அறை சேதமாக்கப்பட்ட சம்பவம் என்பதில் சந்தேகம் இருக்க இயலாது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலவிய போர்க் காலச் சூழலை ஒழித்து அமைதியும், சகஜ வாழ்வு நிலையும் முகிழ்த்து நான்கு ஆண்டுகள் கடந்தேகவுள்ளன.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அரசு இன்னமும் ஓர் அங்குலம் தானும் காலை முன்னகர்த்தாமல் இருப்பினும், இயல்பு நிலை பூத்துக் காய்த்துள்ளது. ஆனால் அது முற்றிப் பழுப்பதற்கு இன்னும் எத்தனை ஆண்டுகள் செல்லும் என்பதனை எந்த அரசியல் வித்தகராலும் எதிர்வு கூற, நினைத்துப் பார்க்கவும் முடியாத பாங்கு மிக நீண்டு செல்கிறது. அது நாட்டின் இருண்ட பக்கமாகவே இன்னமும் உள்ளது....!

ஆனால், அதன் மத்தியிலும் கிழக்கு மற்றும் வடக்கில், தமிழ், முஸ்லிம் மக்கள் போருக்கு முந்திய காலத்தில் சகோதரர்களாக வாழ்ந்த நிலை குறிப்பிடத்தக்க அளவில் மீள்விக்கப்படுகிறது. அந்த உறவைச் சீர்குலைக்கும் முயற்சிகளின் ஓர் அங்கமே, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முஸ்லிம் மாணவர்களின் தொழுகை அறை மீது நடத்தப்பட்ட கழிவு ஒயில் வீச்சுத் தாக்குதல்.

வடக்கில் குடாநாட்டிலும் சரி, வன்னிப் பிரதேசத்திலும் சரி கழிவு ஒயில் வீச்சுத் தாக்குதல் புதிய வன்செயல் நாகரிகமாக்கப்பட்டு விட்டது எனலாம். அத்தகைய தாக்குதலில் ஈடுபடுவோர் மீது, எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாத, மேற்கொள்ளப் படாத நிலை தொடர்கிறது.

காலத்துக்குக் காலம் 'கிறீஸ் பூத விவகாரம்' கழிவு ஒயில் வீச்சு என்று பல்வேறு வடிவங்களில், பரிமாணங்களில் மக்கள் ஏதோ வகையில் அச்சுறுத்தப்படுகிறார்கள்; பாதிப்புறுகிறார்கள்.

அத்தகைய சமூக விரோதிகளின் அச்சுறுத்தல்கள், வடக்கில் வாழும் தமிழ் மக்கள் மீது மட்டுமன்றி முஸ்லிம் மாணவர்கள் மீதும் பாய்ந்துள்ளமை–

சகோதரர்களாக வாழும் தமிழ்– முஸ்லிம் மக்களிடையே சந்தேகங்களையும், அவை வழி பிளவுகளையும் செயற்கையாக உருவாக்கி 'கூத்துப் பார்க்கும்' சூழ்ச்சி அன்றி வேறல்ல.

சிறுபான்மை இனங்கள் இரண்டுக்கும் இடையில் முன்னர் இருந்த ஐக்கியத்தையும்– ஒற்றுமையையும், புரிந்துணர்வையும் மீண்டும் கட்டி எழுப்ப வேண்டும். மொழி, கலை, கலாசாரம் என்பனவற்றை முன்னிறுத்தி அதனை ஆற்ற வேண்டும்; ஆற்ற முடியும் என்ற கிழக்கு மாகாண சபை அமைச்சர் ஹபீஸ் நஸீர் அகமத்தின் குரல், கழிவு ஒயில் ஊற்றுவதற்கு தூண்டியவர்களுக்கும், தூண்டப்பட்டவர்களுக்கும் ஒவ்வாமையை உண்டாக்கி இருக்கவும் பெரும் வாய்ப்புண்டு. எப்போதோ ஒருநாள் இவற்றின் சூத்திரதாரிகள் யார் என்பது வெளிவராமலா போகும்?

இன நல்லிணக்கத்தை வளர்ப்பதற்குப் பதிலாக அதனை வெட்டிப் பிளக்கும் சூட்சுமப் போக்குத் தொடரலாமா?

# 24 கிராம அலுவலர் பிரிவுகள் வலி.வடக்கில் பறிபோகும்

யாழ்ப்பாணம், ஏப்.21

வலி.வடக்கில் படைகளுக்குக், காணி சுவீகரிக்கும் நடவடிக்கைகள் நாளை திங்கட்கிழமை முதல் முழு வீச்சில் ஆரம்பமாகவுள்ளன. இதன் மூலம் அங்குள்ள 24 கிராம சேவையாளர் பிரிவுகளும் முழுமையாகப் பறிபோகும் என்று தெரியவருகிறது.

இதுவரை விடுவிக்கப்படாத பகுதிகளுக்குள் அடங்கும் கிராம சேவையாளர் பிரிவுகளில் சுவீகரிக்கப்படும் தனியார் காணிகளுக்குரிய சுவீகரிப்பு அறிவித்தல்கள் கிராம சேவையாளர்களால் ஒட்டப்படவுள்ளன.

இராணுவப் பாதுகாப்புடன் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அழைத்துச் செல்லப்படும் கிராம சேவையாளர்கள், மாவட்டக் காணி மற்றும் காணி அபிவிருத்தி திணைக்களத்தினர் இந்த நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளனர்.

1990 ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்நாட்டுப் போர் காரணமாக வலி.வடக்குப் பிரதேச மக்கள் இடம்பெயர்ந்தனர். இடம்பெயர்ந்து 23 வருடங்கள் கடந்த நிலையிலும் அந்தப் பகுதி மக்கள் இன்னமும் மீளக்குடியமர அனுமதிக்கப்படவில்லை.

இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்கள் தமது வாழ்விடங்களுக்குச் செல்ல அனுமதிக்குமாறு கோரிப் பல போராட்டங்களைச் சாத்வீக வழியில் முன்னெடுத்தனர். அத்துடன் இந்த விடயம் தொடர்பில் உயர் நீதிமன்றிலும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு அந்த வழக்கும் விசாரணையில் உள்ளது.

இந்த நிலையில் கடந்த மார்ச் மாதம் 11 ஆம் திகதி, காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் யாழ்.பிராந்திய காரியாலயம் திறந்து வைக்கப்பட்டது. இந்த அலுவலகத்தின் ஊடாக வலி.வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் விடுவிக்கப்படாமலுள்ள 24 கிராம சேவையாளர் பிரிவுகளும் சுவீகரிக்கப்படப் போவதாகச் செய்திகள் வெளியாகியிருந்தன.

இதனை மறுத்த காணி அம்மச்சர் ஜானக பண்டார தென்னக்கோன், யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க ஆகியோர், மக்களின் காணிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கே பிராந்திய காரியாலயம் திறக்கப்படுகிறது என்று தெரிவித்தனர்.

ஆனாலும் காணி மற்றும் காணி அபிவிருத்தி திணைக்களத்தின் யாழ்.பிராந்திய அலுவலகம் திறக்கப்பட்டு ஒரு மாத காலத்துக்குள்ளேயே யாழ்.மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் இராணுவத்தினர் கோரிய தனியார் காணிகளைச் சுவீகரிப்பதற்குரிய அறிவித்தல்கள் ஒட்டப்பட்டன.

வலி.வடக்கில் 24 கிராம சேவையாளர் பிரிவுகள் உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக விடுவிக்கப்படாத நிலையில் உள்ளமையால் அந்தப் பகுதிகளுக்குரிய சுவீகரிப்பு அறிவித்தல்கள் ஒட்டப்படாமல் இருந்து வந்தன.

இந்த நிலையில் யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றிருந்தது. இந்தக் கலந்துரையாடலில் யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், யாழ்.மாவட்ட காணி சுவீகரிப்பு அலுவலர் ஆ.சிவசுவாமி, வலி.வடக்கு மற்றும் கோப்பாய் பிரதேச செயலர்கள், இராணுவ அதிகாரி ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்தக் கலந்துரையாடலின் பின்னர், உயர்பாதுகாப்பு வலயப் பிரதேசத்தினுள் அடங்கும் கிராம சேவையாளர்க்ளுக்கு விசேட அறிவித்தல்கள் யாழ்.மாவட்ட செயலரால் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

நாளை திங்கட்கிழமை கிராம சேவையாளர்கள் காணி சுவீகரிப்பு மேற்கொள்வதற்காக இராணுவத்தினரால் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

அங்கு தனியார் காணிகள் ஒவ்வொன்றிலும் காணி சுவீகரிப்பு அறிவித்தல்கள் ஒட்டப்படவுள்ளன.

அத்துடன் உயர் பாதுகாப்பு வலயத்துக்கு வெளியேயும் காணி சுவீகரிப்பு தொடர்பான அறிவித்தல்கள் மக்கள் பார்வைக்காக ஒட்டப்படவுள்ளன.

இந்த அறிவித்தல்கள், யாழ். மாவட்டக் காணி அலுவலகத்தினால் பிரத்தியேக இடமொன்றில் வைத்து அச்சிடப்பட்டு வருவதாகவும் இந்த நடவடிக்கைகளுக்காக 30 லட்சம் ரூபா வரை செலவு செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

உயர் ப்ாதுகாப்பு வலயப் பிரதேசத்தினுள் சுவீகரிப்பு அறிவித்தல்கள் ஒட்டப்பட்ட பின்னர், மக்களை இராணுவப் பாதுகாப்புடன் அங்கு அனுமதிப்பதற்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த் விடயங்கள் தொடர்பில் உறுதிப்படுத்துவதற்காக நேற்று முன்தினம் விசேட கலந்துரையாடலில் கலந்துகொண்ட அலுவலர்களை தொலைபேசி மூலமாக தொடர்பு கொள்ளப் பலமுறை முயற்சித்த போதும் அது பயனளிக்கவில்லை. (த-5)

# முஸ்லிம் தொழுகை அறை தாக்கப்பட்டது குறித்து உரிய நடவடிக்கைகள் அவசியம்

## யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்திடம் இலங்கை உயர் தேசிய கணக்கியல் பட்டதாரிகள் தொழிற்சங்கம் கோரிக்கை

அம்பாறை, ஏப்.21

யாழ். பல்கலைக்கழகத்தில் முஸ்லிம் மாணவர்களுக்கென இயங்கிய தொழுகை அறை மீது ஒயில் வீசப்பட்டும் அதன் பெயர் பலகை சேதமாக்கப்பட்டுமுள்ளமை குறித்தும் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இந்த விடயங்களில் காத்திரமான நடவடிக்கைகள் மேற்கொள்ள பல்கலைக்கழக நிர்வாகம் முன்வரவேண்டும்.

இவ்வாறு இலங்கை உயர் தேசியக் கணக்கியல் பட்டதாரிகள் தொழிற்சங்கப் பொதுச் செயலாளர் எம்.ஹூசைன் முபாரக் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழக முஸ்லிம் மாணவர்களுக்கென ஏற்பாடு செய்யபப்பட்டிருந்த தொழுகை அறை மீது ஒயில் வீசி பெயர்ப் பலகையையும் சேதப்படுத்திய சம்பவத்தைக் கண்டித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். பல்கலைக்கழகத் தொழுகை அறை மீது இனம் தெரியாதவர்கள் ஒயில் வீசியதுடன் பெயர் பலகையையும் சேதப்படுத்தி உள்ளனர்.

இந்தச் சம்பவம் பலரையும் அதிர்ச்சியடையச் செய்துள்ளது.

நாட்டில் தலைவிரித்தாடும் இனவாத அட்டகாசங்களை அடியொற்றி பல்கலைக்கழகங்களிலும் ஈனச் செயல்கள் முளை விடத் தொடங்கியுள்ளதா என இந்தச் சம்பவம் எண்ணத்தை ஏற்படுத்தியுள்ளது.

மூன்று தசாப்த காலங்களின் பின்னர் சமாதானம் தோற்றுவிக்கப்பட்டு விட்டதாக மார் தட்டும் காலப் பகுதியில் நாடு இன வாதிகளின் விசப் பற்களுக்குள் அகப்பட்டு சமாதானத்துக்குச் சமாதி கட்டப்படுமா என்ற கேள்வியும் இப்பொழுது எழுப்பப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில்தான் யாழ். பல்கலைக் கழகத்திலும் வேண்டத்தகாத இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை கவனத்தில் கொள்ளத்தக்கதாகும்.

பல்கலைக்கழகங்களிலும் உயர் கல்வியைத் தொடரும் மாணவர்கள் தமது மார்க்கக் கடமைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக இத்தகைய இடங்களை ஏற்பாடு செய்து கொள்வது வழமையானது.

இந்த வகையில் யாழ். பல்கலைக்கழக உபவேந்தரின் அனுமதியுடனேயே முஸ்லிம் மாணவர்கள் தொழுகை அறையைப் பெற்றிருக்கின்றனர்.

ஒயில் வீசும் கலாசாரமொன்று யாழில் அண்மைக் காலமாக இடம்பெற்று வரும் சூழ்நிலையில், உயர்ந்த நிலையில் நோக்கப்படும் பல்கலைக்கழகத்தினுள்ளும் இந்தக் கலாசாரம் புகுந்திருப்பதுதான் வேதனையளிக்கின்றது.

இந்த சம்பவத்துக்கு எமது பட்டதாரிகள் தொழிற்சங்கம் சார்பில் கண்டனத்தையும் வருத்தத்தையும் தெரிவிக்கின்றோம்.

அதேவேளை, யாழ். பல்கலைக் கழகத்தில் இடம்பெற்ற போன்று இனிமேலும் இத்தகைய கசப்பான சம்பவங்கள் இடம் பெற இடமளிக்கப்படாது முற்றுப்புள்ளி வைக்கப்படவேண்டும்.

யாழ். பல்கலைக்கழக உரிய துறை சார்ந்த அதிகாரிகள் இந்த விடயத்தில் காத்திரமான நடவடிக்கைகளை எடுக்க முன்வரவேண்டும்.

மத சுதந்திரம் பாதிக்கப்படுவதை எவரும் நியாயப்படுத்தவும் முடியாது. அவ்வாறு நியாயப்படுத்துவது மனித சுதந்திரமும் ஆகாது.- என்றுள்ளது. (ம-30)

## பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் - 2013

மு/ குமுழமுனை மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர்சங்க வருடாந்தப் பொதுக்கூட்டமானது எதிர்வரும் 23.04.2013 அன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவிருப்பதனால் அனைத்து பழைய மாணவர்களும் கலந்து கொண்டு சிறப்பிப்பதோடு எமது வித்தியாலயத்தின் எதிர்கால அபிவிருத்தி தொடர்பான கருத்துக்களையும் ஆலோசனைகளையும் முன்வைக்குமாறு அன்பாக வேண்டுகின்றோம்.

செயலாளர், பழைய மாணவர் சங்கம், குமுழமுனை ம.வி.

மேலதிக விபரங்களுக்கு:
0773698254 (பொருளாளர்), 0778543887 (செயலாளர்),
0779362643 (அதிபர், K.M.V. காலகாந்தன்) (சி/9347) (2.6.7)

## காணி விற்பனை

உரும்பிராய் இந்துக்கல்லூரிக்கு அருகில் காணப்படும் ஒழுங்கையில் 2 பரப்பு காணி விற்னைக்கு உண்டு தொடர்பு:

**0779 442 687**

## REALMATRIMONY

வழங்கும் சித்திரை 30 ம் திகதி வரை

~~முழுமையான அங்கத்துவ கட்டணம்~~ → 50%

# விலைக்கழிவு

**சித்திரை 21 ம் திகதி தொடக்கம் 30ம் திகதி வரை மட்டுமே!!**

ரியல் மற்றிமோனியின் அங்கத்துவகட்டணம் 50 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது இச்சலுகை சித்திரை 30 ம் திகதி வரை மட்டுமே !!

மேலதிக தகவல்களுக்கு அருகில் உள்ள கிளையை நாடுங்கள் அல்லது தொலைபேசியில் அழையுங்கள்

021-4923738, 021-4923739,
011-4380900, 011-4346130

உங்கள் பிள்ளைகளுக்கு ஒரு

# sms

ஊடாக வரன் தேடலாம் வாங்க..

**Type SMS get FREE Premium Service For1 Month**

SMS ஊடாக பதிவினை மேற்கொண்டு ஒரு மாதத்திற்கான FREE PREMIUM சேவையினை பெறுவதற்கு........

<பெயர்><பிறந்த திகதி>ரைப் பண்ணி

**0777 111 786** இலக்கத்திற்கு **sms** பண்ணுங்கள்

## REALMATRIMONY

மேலதிக தகவல்களை பெறுவதற்கு அழையுங்கள்

021-4923738 | 021-4923739
011-4380900 | 011-4346130

Finlays

### நிறைவேற்றதிகாரப் பிரிவு - யாழ்ப்பாணக் / மட்டக்களப்பு கிளை

Finlays Insurance Brokers (Pvt) Ltd நிறுவனம் மாலைதீவுகள் மற்றும் இலங்கை நாட்டில் காப்புறுதி இடைத்தரகராக இயங்கும் பிரதானமான ஒரு நிறுவனமாகும். இந்நிறுவனம் பல்லின மக்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் காப்புறுதிச் சேவைகள் சம்பந்தமான ஒரு உறுதியான சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கின்றது.

இதற்கு உரித்தான சேவைகளை நாடுவோர்களுக்கு வர்த்தக தேவைகளுக்கான மிகவும் பொருத்தமான காப்புறுதிப் பொறிமுறைகளை மற்றும் சந்தைப் படுத்துதல் ஆகியனவற்றை தகுந்த முறையில் வழங்குவதற்கான திறமையுள்ள விண்ணப்பதாரிகளை, சாதனை நோக்குடையவர்களை தெரிவு செய்ய எண்ணியுள்ளதுடன் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் காப்புறுதித் தொழில்நுட்ப வழிவகைகள் மற்றும் முகாமைத்துவ வழிமுறை நடவடிக்கைகள் பற்றிப் பயிற்றப்படுவார்கள்.

**தேவையான ஆரம்பத் தகைமைகள் :-**

- க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் சித்தி.
- 25 வயதையுடையவர்களாக இருக்க வேண்டும்.
- காப்புறுதித் தேர்ச்சியின் IT அறிவில் முன்னணி தொழில் துறைத் தகைமைகளைக் கற்க ஆர்வமுள்ளவராக இருக்க வேண்டும்.
- கட்டாயமான ஆங்கிலத் தேர்ச்சியுடன் தரமான தொடர்பாடல் திறமையுள்ளவராக இருக்க வேண்டும்.
- காப்புறுதித் தொழில் பிரிவில் முன்னனுபவம் பெற்றிருத்தல் விஷேட தகைமையாகக் கருதப்படும்.
- காப்புறுதியாளர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்துதல், வாடிக்கையாளர்களுடன் நளினமாகத் தொடர்பாடல் மற்றும் வர்த்தக அபிவிருத்தியில் உதவி ஒத்தாசையாக இருத்தல் இத்தொழிலுக்காக வேண்டப்படும் மற்றுமொரு தகைமையாகும்.

இதில் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் இத்தொழில் துறையில் வழங்கப்படும் போட்டி ரீதியிலான வேதனத்தைப் பெறும் தகுதியைக் கொண்டிருப்பார்கள்.

இதில் ஆர்வமுள்ளோர் தமது சுயவிபரங்கள், தகைமைகளுடன் தம்மைப் பற்றி விசாரித்தறிந்து கொள்வதற்காக உறவினரல்லாத இருவரின் விபரங்களையும் உள்ளடக்கியதாக தமது விண்ணப்பங்களை careers@finlays.lk என்ற முகவரிக்கு இவ்விளம்பரம் பிரசுரமாகி 10 நாட்களுக்குள் அனுப்பி வைக்க வேண்டும்.

தலைவர் மனிதவள அபிவிருத்தி
பின்லேஸ் கொழும்பு PLC
186 வொக்ஸோல் வீதி, கொழும்பு - 02.

## தவறிவிட்டது

NPVP 1155 இலக்கம் கொண்ட மோட்டார் சைக்கிள் பின் தகடு தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தொடர்பு: 077 857 3362 சன்மானம் வழங்கப்படும். (36242) (45.6.7)

## பெண்வேலையாள் தேவை

யாழ். நகரில் இயங்கி வரும் தனியார் வைத்திய நிலையத்திற்கு பெண் வரவேற்பாளர் (Receptionest) உடனடியாகத் தேவை.
யாழ். நகரப் பகுதியில் வசிப்பவர்கள் மாத்திரம் தொடர்பு கொள்ளவும்.

**075 526 2548** (36244)(6.7.11)

## LANDSCAPING

வீடுகள், ஹோட்டல்கள், பூங்காக்கள் ஆகியவற்றுக்கான பூந்தோட்ட அமைப்பு, சொட்டு நீர்ப்பாசனம்(Dripirrigation), என்பன சிறந்த முறையில் அமைத்து தரப்படுவதோடு, மாதாந்த, வாராந்த அடிப்படையில் பராமரிப்பும் மேற்கொள்ளப்படும்.பயன்பாடில்லாத காணிகளில் துப்புரவு செய்தல், வேலி அமைத்தல் (Fencing) பயன்தரு மரங்கள் நடுதல் போன்றவையும் மிகச்சிறந்த முறையில் செய்துதரப்படும்.

(26233) (2.6.7) V4 Greenz
077-9684284, 077-4430364

# நன்றி நவிலலும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னை மடியில் 28 . 04 . 1946



இறைவன் அடியில் 11 . 03 . 2013

அன்புடையீர் !
நந்தன வருஷம் மாசி மாதம் 27ஆம் நாள் திங்கட்கிழமை ( 11 . 03 . 2013 ) சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்

# ஆறுமுகம் செல்லையா

[ வேதரடைப்பு காரைநகர் ]

அவர்களின்

பிரிவின் போது எமக்கு முன்னின்று உதவிகள் புரிந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் மலர் வளையம் வைத்தோர் தொலை பேசிமூலம் அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறியவர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு தோளோடு தோள் நின்று உதவிகள் செய்த அனைவருக்கும் எமது நன்றிகளை தெரிவிப்பதோடு அன்னாரின் அந்தியேஷ்டி கிரியைகள் 22.04.2013 திங்கட்கிழமை காலை முகத்துவாரம் அந்தியேஷ்டி மண்டபத்தில் நடைபெற்று 24.04.2013 புதன்கிழமை அன்று வீட்டுக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11.00 மணிக்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும், கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

38/1, காலி வீதி, கொழும்பு - 06
தொ . பே : 0112597269

மனைவி, மக்கள்
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்

# மரண அறிவித்தல்

## திருமதி நடராஜா நிலாம்பாள்

(புளியங்கூடல், ஊர்காவற்றுறை)



புளியங்கூடலைப் பிறப்பிட மாகவும் வதிவிட மாகவும் தற்போது கொழும்பில் வசித்து வந்த வருமாகிய திருமதி நடராஜா நீலாம்பாள் கொழும்பில் காலமானார்.

அன்னார் சின்னப்பு நடராஜாவின் (ஆசிரியர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப் பிள்ளை - நாகமுத்து தம்பதியரின் அன்பு மகளும், ஞானேஸ்வரி (சாந்தா- பிரான்ஸ்), சிறிதரன் (கனடா), சிறிரஞ்சன் (சுங்கப் பிரதி அத்தியட்சகர்) ஆகியோரின் அன்புத் தாயும், தனபால சிங்கம் (பிரான்ஸ்), வாசுகி (கனடா), காலஞ்சென்ற குணநிதி, கலைமதி ஆகியோரின் அன்பு மாமியும், மயூரன், பாலன், குசன், உத்தமி, அனிதா, அஜிதா, அஸ்விதா, வினோதன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் (ஆசிரியர்), நாகம்மா, திருநாவுக்கரசு (மகாதேவா) மற்றும் சத்தியபாமா ஆகியோரின் அன்புச் சகோதரியும் செல்லம்மா (இளைப்பாறிய ஆசிரியை - ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற கணேசு மற்றும் மகேஸ்வரிதேவி (இளைப்பாறிய பிரதிக் கல்விப் பணிப்பாளர்), காலஞ்சென்ற தியாகராஜா (கிராமசேவகர்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (21.04.2013) ஞாயிற்றுக்கிழமை புளியங்கூடல் தெற்கு, ஊர்காவற்றுறையிலுள்ள அவரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு,

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.04.2013) திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு தகனக்கிரியை முற் பகல் 10 மணியளவில் புளியங்கூடல் இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

66.3/3, டேவிட்சன் வீதி,
கொழும்பு: 04,
புளியங்கூடல் தெற்கு,
ஊர்காவற்றுறை.

தகவல்:
என். சிறிரஞ்சன் (மகன்)
011 259 2853, 077 737 7384
(சி/9217) (45.6.7)

தருவது வித்தியா

## இன்றைய நாள்
### உங்களுக்கு எப்படி?

**மேடம்:** சகோதரரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் புதிய முதலீடு செய்யலாம். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைகள் தருவார்கள். நீண்ட நாள் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள்.

**இடபம்:** வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். தைரியமாகச் சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உத்தியோகத்தில் வேலைச் சுமை குறையும். உயரதிகாரி ஆதரிப்பார். நட்பு வட்டம் விரிவடையும். தாழ்வு மனப்பான்மை நீங்கும்.

**மிதுனம்:** உறவினர்களின் அன்புத் தொல்லைகள் விலகும். புண்ணிய தலங்கள் சென்று வருவீர்கள். எதிர்பாராத பணவரவு உண்டு. வழக்குகள் சாதகமாகும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**கடகம்:** மனதில் தெளிவுடன் செயற்படுவீர்கள். திட்டமிட்ட பணி எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும். பணவரவு அதிகரிக்க அனுகூல காரணி பலம் பெறும். வழக்கு விவகாரத்தில் சாதகமான தீர்வு கிடைக்கும்.

**சிங்கம்:** குடும்பத்தினருடன் வீண் விவாதங்கள் ஏற்படும். உடல் நலத்தில் கவனம் தேவை. உறவினர்களுடன் பகைமை ஏற்படும். வியாபாரத்தில் கடினமாக உழைத்து லாபம் பெறுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் நிம்மதியிழப்பீர்கள்.

**கன்னி:** குடும்பத்தில் அமைதி நிலவும். வெளிவட்டாரத்தில் கௌரவம் கிடைக்கும். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**நாளை**

சித்திரை-09 திங்கட்கிழமை 22.04.2013
திதி: ஏகாதசி காலை 06.24 வரை
துவாதசி பி.இ. 06.01 வரை
நட்சத்திரம்: பூரம் மாலை 06.24 வரை
சுபநேரம்: 12.01- 01.31 வரை
இராகுகாலம்: 07.31- 09.01வரை

**துலாம்:** அரசால் அனுகூலம் உண்டு. உங்கள் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். வியாபார ரீதியாக பிரபலங்களைச் சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார்.

**விருச்சிகம்:** உறவினர்கள் ஒத்துழைப்பார்கள். சிலர் இங்கிதமாகப்பேசி கடினமான காரியங்களையும் சாதிப்பீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் வியக்கும்படி நடந்து கொள்வீர்கள்.

**தனுசு:** மறைமுக விமர்சனங்களும், எதிர்ப்புக்களும் வந்து நீங்கும். சின்னச் சின்ன அவமானங்கள் ஏற்படலாம். அயலில் இருப்பவர்களை அனுசரித்துப் போங்கள். சில விடயங்களுக்கு அனுபவ அறிவை பயன்படுத்துவது நல்லது. உத்தியோகத்தில் யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள்.

**மகரம்:** உறவினர்கள் பாராட்டுவார்கள். எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். நண்பர்களால் ஆதாயமடைவீர்கள். வியாபாரத்தில் அனுபவம் உள்ள வேலையாள்கள் அமைவார்கள். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள்.

**கும்பம்:** புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். நல்ல நண்பர்களைச் சந்திப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். மாணவர்கள் பரபரப்புடன் காணப்படுவார்கள்.

**மீனம்:** எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்திகள் வந்து சேரும். உடன்பிறந்தவர்களால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள்.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 8 | | 5 | | | | |
| 9 | | 7 | 8 | 1 | 2 | | | |
| | 6 | | 4 | | 9 | | | |
| 4 | | 3 | | | | | 2 | |
| | 9 | 6 | | | | 8 | 1 | |
| | 7 | | | | | 5 | | 6 |
| | | | 3 | | 5 | | 8 | |
| | | | 1 | 9 | 4 | 3 | | 7 |
| | | | | 2 | | 9 | | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 1 | 4 | 3 | 9 | 5 | 8 | 7 | 2 |
| 3 | 8 | 7 | 1 | 2 | 6 | 9 | 5 | 4 |
| 2 | 9 | 5 | 7 | 8 | 4 | 1 | 6 | 3 |
| 1 | 3 | 9 | 6 | 5 | 2 | 4 | 8 | 7 |
| 5 | 6 | 2 | 8 | 4 | 7 | 3 | 9 | 1 |
| 7 | 4 | 8 | 9 | 1 | 3 | 5 | 2 | 6 |
| 8 | 7 | 6 | 5 | 3 | 1 | 2 | 4 | 9 |
| 4 | 5 | 1 | 2 | 7 | 9 | 6 | 3 | 8 |
| 9 | 2 | 3 | 4 | 6 | 8 | 7 | 1 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

**பெயர் மாற்றம்**

சங்கரப்பிள்ளை செல்வபாலன் ஆகிய நான் இன்றிலிருந்து சங்கரப்பிள்ளை சிவநாதபிள்ளை என பெயர்மாற்றம் செய்கிறேன் என்பதை இத்தால் சகலருக்கும் அறியத் தருகின்றேன்.
சங்கரப்பிள்ளை சிவநாதபிள்ளை
(36219)(5-6-7)

**மணமகள் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1978 அவிட்டம், 4ஆம் பாதம் செவ்வாய் குற்றமற்ற, மொத்த கிரகபாவம் 20¾ பொறியியலாளர்(சிங்கப்பூர்PR) உயரம்5'10'' உடைய மணமகனுக்கு Doctor, Engineer, விரிவுரையாளர்,கணக்காளர் மற்றும் உயர் பதவியில் உள்ள தகுதியான மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்புக்கு: 077 961 8728
kavithasurash@yahoo.com
(36210)(5-6-7)

**வீடு வாடகைக்கு**

யாழ்ப்பாணம்,ஸ்ரான்லி வீதியில் இணைந்த குளியல் அறையுடன் 4 படுக்கை அறை களைக் கொண்ட முற்றாக மாபிள் பதிக் கப்பட்ட வீடு வாகனத் தரிப்பிட வசதிகளுடன் வாடகைக்குண்டு.
(நிறுவனங்களுக்கும் உகந்தது)
(36232)(5-6-7) தொடர்பு:077 316 1617

**கடை வாடகைக்கு**

கே.கே.எஸ். வீதியில் விக்னா ஹோட்டல் அருகில் கடை வாடகைக்கு உண்டு.

**வேலையாள் தேவை**

தையல் மிசினில் உரப்பை தைப்பதற்கு வேலையாள் தேவை.
தொ.பே.: 075 999 2900/ 021 222 5986
(36228)(5-6-7)

**மணமகள் தேவை**

இந்து கௌரவ குடும்பம், 1982, அனுசம் 2ஆம் பாதம், கிரகபாவம் 13 மற்றும் 1983 பரணி, 3ஆம் பாதம் உடைய பிரான்ஸ் PR உடைய மணமகன்களுக்கு தகுந்த மணமகள்கள் தேவை. தொடர்பு: 077 224 0186
0044 2086 956426
(36227)(5-6-7)

**வாடகைக்குத் தேவை**

கொக்குவில், கோண்டாவில் பகுதியில் கே.கே.எஸ். வீதிக்கு அண்மையாக, அலுவலகப் பாவனைக்கு கடை/அறை வாடகைக்குத் தேவை.
தொடர்பு:077 921 3700 (36234)(5-6-7)

**அறைகள் வாடகைக்கு**

யாழ். பல்கலைக்கழகத்துக்கு மிக அண்மையில் மூன்று அறைகள் வாடகைக்கு உண்டு. பல்கலைக்கழக மாணவர்கள் உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு:071 856 5662/071 430 5646
(36224)(5-6-7)

**வீடு வாடகைக்கு**

யாழ். விதானையார் வீதி, சுண்டிக்குளியில் 6அறைகள், 2ஹோல், சாப்பாட்டு அறை, சமையலறை, 2 குளியலறை,வேலையாள் குளியலறை உடைய மாடி வீடு, வாகனத்தரிப்பிட வசதியுடன் வாடகைக்கு உண்டு. தங்குவதற்கோ அல்லது அரச,தனியார், NGO அலுவலகமாகப் பாவிக் க உகந்தது. (சி.9207)(5-6-7)
தொடர்பு: 011 263 6692/077 299 1176 / 072 956 7536

**காணி விற்பனைக்கு**

சுழிபுரம்-காரைநகர் பிரதான வீதியில் நெல்லியான் சந்திக்கு அருகில் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. வர்த்தகப் பாவனைக்கு உகந்தது. தொடர்பு: 077 774 9174
(சி/9211)(5-6-7)

**விற்பனைக்கு**

நல்ல நிலையில் உள்ள Mountain Bike (1) (Gear).Japan ladies Bike, (Gear) Soney Wega 21" T.V.உடன் விற்பனைக்கு உண்டு.
(36222)(5-6-7) Contact: 077 711 1254

**CAR விற்பனைக்கு**

வைத்தியரின் பாவனையில் உள்ள ALTO (K10) கார் விற்பனைக்கு உண்டு. 2012MODEL Low Milage (Japanese) MINT CONDITION. 10LKS to HAND + LEASE.
(36226)(5-6-7) Mobile: 077 489 6046

**தேவை**

றெஜிபோம் எழுத்துக்கள் உருவங்கள் வெட்டுவதற்கு அனுபவமுள்ள பெண்கள் தேவை.
தொடர்பு: 077 261 9409
(சி/9211)(5-6-7)

**LL.B ( UK) கற்கை நெறி**

யாழில் சட்டக் கல்வியை வழங்கும் ஒரே கல்வி நிறுவனம்
Prince City Campus இன்
EdHat IHD in Law leading to LL.B (UK)

Batch - 5 இற்கான பதிவுகள் தற்போது நடைபெறுகின்றன.
(கிழமை நாள்களிலும், வார இறுதி நாள்களிலும்)



- ★ உலக தரம் வாய்ந்த கற்கை நெறி.
- ★ இலங்கை மற்றும் UK பாட விதானங்களை உள்ளடக்கியது.
- ★ யாழ்ப்பாணத்தில் 3 வருடங்களையும் பூர்த்தி செய்யலாம்.
- ★ இலகு தவணை கொடுப்பனவு முறை
- ★ இலவசமான ஆங்கிலம் , மற்றும் தகவல் தொழில் நுட்ப கற்கை திட்டங்கள்.

(சி/8157)

**Prince City Campus**
இல 275 மணிக்கூட்டு கோபுர வீதி (Clock Tower Road), யாழ்ப்பாணம்
தொ. பே. 021 492 3855 Hotline: 0775 949 272

**வான் விற்பனைக்கு**

முழுமையாகத் திருத்தி அமைக்கப்பட்ட TOYOTA LH 20 வான் விற்பனைக்குண்டு.
(36217)(5-6-7) தொடர்பு: 077 762 6313

**காணி விற்பனைக்கு**

அல்லைப்பிட்டி, 1ஆம் வட்டாரத்தில் 100 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. பகுதிகளாக பிரித்தும் கொடுக்கப்படும்.
(35708)(5-6-7) தொடர்பு: 077 180 7078

**வீடு விற்பனைக்கு**

யாழ். பிரப்பங்குளம் வீதியில், (பன்றிக் கோட்டுப் பிள்ளையார் அருகில்) 1½ பரப்பில் அமைந்துள்ள 6 அறைகள் கொண்ட சகல வசதிகளுடன் கூடிய மாடி வீடு ஒன்று விற்பனைக்கு உண்டு.
(36221)(5-6-7) 077 737 6924, 077 737 6922

**மரண அறிவித்தல்**

செல்வி **நாகமணி இராஜேஸ்வரி** (மாம்பழம்)



மயிலிட்டி வீரமாணிக்க தேவன்துறையைப் பிறப்பிடமாகவும் சாத்தாவத்தை வைரவர் கோயிலடி மூத்ததம்பி ஒழுங்கை மானிப்பாயை வதி விடமாகவும் கொண்ட செல்வி நாகமணி இராஜேஸ்வரி நேற்று (20.04.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமணி - சுகிர்தவதியம்மா தம்பதியரின் அன்பு மகளும், ஜெகதீஸ்வரி, ஜெகதீஸ்வரன் (நில அளவையாளர் - வவுனியா), வடிவேஸ்வரன் (ஓய்வுபெற்ற பாதுகாப்பு உத்தியோகத்தர், சிமெந்து கூட்டுத்தாபனம் - காங்கேசன்துறை), பரமேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.04.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சாத்தாவத்தை வைரவர் கோயிலடி,
மூத்ததம்பி ஒழுங்கை, மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.
021 225 5320
(36230)(45.6.7)

## கார் பெர்மிட் விற்பனைக்கு

அரச உத்தியோகத்தரின் வாகன இறக்குமதி தீர்வைச் சலுகைப் பத்திரம் (கார் பெர்மிட்) நேரடியான வாடிக்கையாளருக்கு விற்பனைக்குண்டு. (36149)(6.2)

தொடர்பு: 077 684 5712, 077 371 5798

## வீடு விற்பனைக்கு உண்டு

கஸ்தூரியார் வீதியில் இந்து ஆரம்ப பாடசாலை முன்பாக மாடி வீடு விற்பனைக்குண்டு.
விலை பேசித் தீர்மானிக்கலாம்
தொடர்பு: 077 2106 155 (36165) (45.8)

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள LI - XXXX தொடர் இலக்கமுடைய, TATA ரிப்பர் 3 கியூப். தனியார் கம்பனி ஒன்றின் குத்தகையிலுள்ளது. விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 371 9176 (36151)(6.2)

## விற்பனைப் பிரதிநிதி தேவை

யாழ், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களுக்கு விற்பனைப் பிரதிநிதி உடன் தேவை. ஒரு வாரத்திற்குள் சமுகமளிக்கவும்.
தொடர்பு:
M.M.Salahudeen.
DARLEY BUTLER&COM.
Super Shoes
No. 154, Navlar Road, Jaffna.
077 313 6731 (36207) (5-6-7)

## கிராம சேவகர் போட்டிப் பரீட்சை விசேட கருத்தரங்குகள் பல இடங்களில்

விரிவுரையாளர்கள்: த.தவசேகரும் முக்கிய விரிவுரையாளர்களும்.

- கடந்த கால வினாத்தாள்களையும், எதிர்பார்க்கை வினாக்களையும் கொண்ட கருத்தரங்கு தொடர்
- இடநெருக்கடியைக் கருத்திற்கொண்டு முன்பதிவு முக்கியமானது.
- யாழ் நகரில் 50 மணித்தியாலங்களும் ஏனைய இடங்களில் 30 மணித்தியாலங்களும் நடைபெறும்.

யாழ்ப்பாணக் கல்லூரி, பட்டப்படிப்புக்கள் பிரிவு
சனி(20.04.2013), ஞாயிறு (21.04.2013) 12.30- 4.30 வரை
25,26,27,28 ஆம் திகதிகளில் காலை 9.00-4.00 மணி வரை
சித்தன்கேணி, சுப்றாவில்.
ஞாயிறு தொடக்கம் தினமும் பி.ப.5.00 மணி
Sigama Solution நெல்லியடி.
திங்கள் (22.04.2013) பி.ப. 3.00 மணி
ஞானோதயா, சாவகச்சேரி.
செவ்வாய் (23.04.2013) பி.ப. 3.00 மணி
CBA வைரவப்புளியங்குளம், வவுனியா.
புதன் (24.04.2013) பி.ப. 2.30மணி
NLH ஆஸ்பத்திரி சந்தி, மன்னார்.
வியாழன்(25.04.2013) மு.ப. 10.00 மணி
எடிசன் கல்லூரி, கிளிநொச்சி.
ஞாயிறு (21.04.2013) காலை 9.00 மணி
மேலதிக தொடர்புகளுக்கு: 075 416 4564

## வேலைவாய்ப்புடன் கூடிய கற்றல்

New Era Academy (UK)இனால் வழங்கப் படுகின்ற பயிற்சி நெறிகளை கற்றுக் கொண்டே கற்பிப்பதற்கான வழிகாட்டுதல்களை மேற்கொள்ள இருப்பதனால், சகல இடங்களிலிருந்தும் ஆங்கில ஆசிரியர்கள் மற்றும் ஆங்கில ஆர்வலர்கள் தேவை.
(பகுதி நேரமாகவும் மேற்கொள்ளலாம்)
மேலதிக தகவல்களுக்கு: திருமதி தர்ஷனி புவிராஜசிங்கம்
இணைப்பாளர், New Era Academy (UK)
யாழ்.மாவட்டம். 077 211 6733. (36218)(5-6-7)

## WANTED

Parcic N.G.O needs a talented experienced **Sewing Teacher** immediately.
English knowledge is essential.
*Apply before 29.04.2013*
**Parcic**
**28, Temple Road, Jaffna.**
**T.P No- 021 222 1699**
**E mail- sloffice@parcic.org** (36163)(5,7,11)


## 90ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 25.08.1965
மறைவு 22.01.2013

அமரர்
**கணபதிப்பிள்ளை சிவராசா (தங்கன்)**

அன்பனே!
"தோன்றிற் புகழொடு தோன்றுக அன்றேல் தோன்றாமை நன்று"
என்பது சான்றோன் வாக்கு. இவ்வணிகலனை இலக்கணமாய் கொண்ட எம்மினிய நண்பனே! உம்மோடு தாய் மண்ணில் நாம் உறவாடிய நாள்கள், நினைவுகள் எல்லாம் இன்றும் எம் மனத் திரையில் நிழலாடிக் கொண்டே இருக்கின்றன.

எம்மைவிட்டு தாய் மண்ணைவிட்டு தனியாக அன்னிய தேசம் அன்று சென்றாயே! மீண்டும் என்றுதான் எமைக் காண வருவாயோ என எண்ணி நாமெல்லாம் காத்திருந்தோம். ஆனால் நிஜமாக எமைவிட்டுப் பிரிந்ததை அறிந்து துடியாய்த் துடித்து விட்டோம்.

பிறப்பென்றால் இறப்பென்பது நிஜமாகும் என எம் மனதைச் சாந்தப் படுத்திக் கொண்டு உம் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

புலோலி வடகிழக்கு,
பருத்தித்துறை.

உத்தியோகத்தர், உறுப்பினர்,
அங்கத்தவர்
சமூக பொருளாதார அபிவிருத்தி மன்றம். (36223)(30,6,7)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 02*02*1916
ஆண்டவன் அடியில் 13*05*2011

**திருமதி பராசக்தி இராஜரட்ணம்**

திரும்பிப் பார்க்கின்றோம்
காலங்கள் கரைந்து ஆண்டுகள் கடந்தன இரண்டு
நாம் மறந்தாலன்றோ உமை நினைப்பதற்கு
என்றென்றும் உம் நினைவாய் வாழ்கின்றோம்
அன்னாரின் ஆத்ம சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கும்.

"இராஜ சக்தி",
வண்.வட மேற்கு, ஆனைக்கோட்டை. குடும்பத்தினர்.


## வான் வாடகைக்கு

ஹைஏஸ் வான் வாடகைக்கு
தொடர்பு: 077 373 4109 (36209)(5-6-7)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 11*05*1947 மறைவு 22*03*2013

அமரர்
**சரவணமுத்து சிவபாலேந்திரன் (சாரதி)**

கடந்த 22.03.2013 சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் அந்தியேட்டி கிரியைகள் இன்று (21.04.2013) ஞாயிற்றுக்கிழமை காலை 4.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும், மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வெளிச்சமா, அல்வாய்.
T.P: 0771880167. (35334)(10,6,7) குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



எமது யாழ். மாவட்ட வெதுப்பக உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க உறுப்பினரும், யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்க முன்னாள் தலைவரும், பெருந்தெரு திணைக்கள இளைப்பாறிய உத்தியோகத்தரும், மீசாலை வடக்கு ஸ்ரீ விநாயகர் பேக்கரி உரிமையாளருமாகிய

**செல்லத்துரை பரமலிங்கம்**

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் எமது கண்ணீர் அஞ்சலிகளையும் காணிக்கையாக்குகின்றோம்.

181, 2 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

அங்கத்தவர்களும் பணியாளர்களும்
யாழ். மாவட்ட வெதுப்பக
உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம். (36212)(5,7,11)

## மரண அறிவித்தல்

### மயில்வாகனம் தர்மலிங்கம்



வாதரவத்தை, புத்தூரைப் பிறப்பிடமாகவும் இராமநாதன் லேன், கோப்பாய் தெற்கு, கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் தர்மலிங்கம் 17.04.2013 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - சின்னத்தங்கம் தம்பதியரின் மகனும் நல்லபிள்ளையின் கணவரும், காலஞ்சென்றவர்களான சின்னையா (திருகோணமலை), மாணிக்கவாசகர் (வாதரவத்தை), தெய்வானை (வாதரவத்தை), சின்னப்பிள்ளை (திருகோணமலை), இளையபிள்ளை (திருகோணமலை) ஆகியோரின் சகோதரனும், தவமலர் (கனடா), சத்தியசீலன் (சுவிஸ்), நந்தினி (கோப்பாய்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சோமசுந்தரலிங்கம் (கனடா), ராகினி (சுவிஸ்), ராஜ்மோகன் (சுவிஸ்) ஆகியோரின் மாமனும், நிருக்குமரன், சகிலா, சுதர்ஷன், ஜெயதர்சினி, செந்தூரன், கார்த்திகா, கார்த்திகன், கிருஷன், கரிஷன் ஆகியோரின் பாட்டனும் ஹெவினின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பெறாமகனான மாணிக்கவாசகர் தங்கத்துரையின் (வாதரவத்தை - புத்தூர்) இல்லத்தில் இன்று (21.04.2013) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று முற்பகல் 10 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் வாதரவத்தை பொது மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

வாதரவத்தை. (36213) (45,6,7) 077 669 3195.

# மரண அறிவித்தல்

## செல்வி மனோன்மணி சோமசுந்தரம்

(இளைப்பாறிய ஆசிரியர், வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம், முன்னாள் ஆசிரியர், வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை)



தெல்லிப்பழை விராங்கொடையைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி மனோன்மணி சோமசுந்தரம் நேற்றுமுன்தினம் (19.04.2013) வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

கடன் பெறுவதற்கு அனுமதிக்கப்பட்ட பயிர்கள்
- நெல்
- மிளகாய்
- வெங்காயம்
- தானிய வகைகள்
- எண்ணெய் விதைகள்
- கிழங்கு வகைகள்
- மரக்கறிகள்
- இஞ்சி




கடன் வழங்கும் வங்கிகள்
- இலங்கை வங்கி
- மக்கள் வங்கி
- பிரதேச அபிவிருத்தி வங்கி
- ஹற்றன் நஷனல் வங்கி
- கொமர்ஷல் வங்கி
- யூனியன் வங்கி
- செலான் வங்கி
- லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி
- சம்பத் வங்கி
- சனச அபிவிருத்தி வங்கி
- தேசிய அபிவிருத்தி வங்கி
- டி.எப்.சி.சி வங்கி

2013 சிறுபோக பயிர்ச்செய்கை கடனுக்கான விண்ணப்பங்கள் தற்பொழுது ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

மேலதிக விபரங்களுக்கு

மேற்கூறப்பட்ட வங்கிகளின் கிளைகளை அல்லது இலங்கை மத்திய வங்கியின் மாகாண அலுவலகங்களை அல்லது கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களினூடாக இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தினை தொடர்பு கொள்ளவும்.


பிரதேச அபிவிருத்தி திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல.30, சனாதிபதி மாவத்தை
கொழும்பு 01.
தொலைபேசி இலக்கம் : 011 2477447, 011 2477451, 011 2398748

அமெரிக்க கழுகுப் பார்வை இலங்கை மீது



02

மகாவம்சக் குருதி



03

முள்ளியவளையும் முடியாத முடிவும்



21

புதிய தடத்தில் தமிழ் சினிமா




06

ஒரு குற்றம் இரு தண்டனைகள்



22


# சூரியகாந்தி

உதயன்

ஞாயிறு சிறப்பம்சம்

01

உதயன் 21 ஏப்ரல் 2013 ஞாயிற்றுக்கிழமை பக்கங்கள்: இருபத்துநான்கு


# குரல் வளையில் கொள்ளி வைப்பு



தாக்குதல் நடப்பதற்கு ஒரு வாரத்துக்கு முன்பிருந்தே இனந்தெரியாதோரின் நடமாட்டம் உதயனைச் சூழ அதிகரித்திருந்தது.

**உதயன் அச்சிடல் தளம் மீதான தாக்குதல் ஒரு பதிவு**



மீட்கப்பட்ட வெற்றுத் தோட்டாக்கள்

ஔண்யன்

இரவின் சோம்பல் தொலைந்து விடியலின் பரபரப்பு எங்கும் தொற்றத் தொடங்கியிருந்தது. சூரியன் எட்டிப் பார்ப்பதற்கிடையில் விநியோகப்பணிகளைப் பூர்த்தி செய்யவேண்டும் என்ற அவசரம் எல்லோரிடத்தும் உற்பத்தியாகியிருந்தது. அரக்கப்பரக்க ஒவ்வொருவரும் தம் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது பிரதான வாசல் கதவை திறந்து கொண்டு மூவர் உள்நுழைந்தனர். மூன்று பேரின் கைகளிலும் பைகள்.

அவர்களை யாரும் வித்தியாசமாகப் பார்க்கவில்லை. விநியோகப்பணியில் ஈடுபடுபவர்களாக இருக்கலாம் என்ற நினைப்போடு தம் வேலைகளைத் தொடர்ந்தனர். வந்தவர்களில் ஒருவர் வீதியைப் பார்த்தவாறு நிற்க, இருவர் பிரதான அச்சிடல் தளம் நோக்கி மெதுவாக நடந்து சென்றனர். ஞாயிற்றுக்கிழமை இதழுக்குரிய சில பக்கங்களைப் பேரிரைச்சலோடு அடித்து, மடித்து வெளியே அடுக்கடுக்காக துப்பிக்கொண்டிருந்தது அந்த இயந்திரம். இயந்திரத்தின் இரைச்சலில் தன்க்குப் பக்கத்தில் இருவர் வந்த சத்தம் கேட்காததால் அச்சிடல் பணியாளர் சாவகாசமாக தேநீரைக் குடித்துக் கொண்டிருந்தார். அவரை இன்னும் நெருங்கிச் சென்றனர் அந்த இருவரும்.

வந்தவர்களின் முகங்கள் வெளித் தெரியாதவாறு ஹெல்மட் மறைத்துக் கொண்டிருந்தது. "ஒடுங்கோடா எல்லாரும்" ஹெல்மட் அணிந்திருந்தவர்களில் ஒருவன் உரக்கக் கத்தினான். அப்போதும் அந்தப் பணியாளர் அசையவில்லை. யாரோ தன்னை வேண்டும் என்றே பயமுறுத்துவது போல நடிக்கிறார்கள் என்றே நம்பிக் கொண்டிருந்தார். அந்த நம்பிக்கை அடுத்து வந்த கணங்களில் சிதைந்து போனது. மூவரும் சொல்லி வைத்தாற் போல ஏக காலத்தில் தாங்கள் கொண்டு வந்திருந்த பைகளுக்குள் இருந்த 'பொருள்களை' வெளியே எடுத்தார்கள். இப்போது அவர்களின் கைகளில் ஏ.கே- 47 துப்பாக்கி, 9 மில்லிமீற்றர் பிஸ்டல், டீசல் நிறைந்த கான் என்பன முளைத்திருந்தன. வாசலில் நின்றவர் தனது ஏ.கே-47ஐ தூக்கி ஏதோ செய்தான்.

'சடக்' என்ற சத்தம் வாசலில் நின்ற பாதுகாப்பு உத்தியோகத்தரின் காதில் விழுந்தது.

'லோட் பண்ணுறான். எட! உது உண்மையான துவக்குத்தான்.' என்று நினைத்தபோது தான் பயம் உருவாகத் தொடங்கியது.

இதே பயம் சற்றுத்தள்ளி நின்றிருந்த அச்சிடல் பணியாளருக்கும் தோன்றியிருந்தது. அவரை நோக்கி 'பிஸ்டலை' நீட்டிக் கொண்டிருந்தவன், தான் வைத்திருந்தது உண்மையான துப்பாக்கி தான் என்பதை நிரூபிப்பதற்காக மேல் வெடி வைத்தான்.

அதிகாலைக் கருக்கலில் மெல்லிய தீக்கோடு ஒன்று வான் நோக்கி விரைந்தது. இனியும் நடப்பது நாடகம் என்று பார்த்துக் கொண்டிருக்கப் பணியாளர்கள் தயாராக இல்லை. ஏனெனில் இவர்களைப் போன்று கரங்களில் உயிர் தின்னும் ஆயுதங்களோடு உட்புகுந்தவர்கள் இருவரை இதே இடத்தில் காவு கொண்டிருந்தார்கள். அதே கதி தமக்கும் நேர்ந்து விடுமோ என்ற அச்சம் அவர்களின் கால்களுக்கு அசுர சக்தியை அந்த நேரத்தில் கொடுத்திருந்தது. ஒரே கணத்தில் உதயனின் முன்புற வளாகம் வெறிச்சோடிப்போனது. இப்போது அங்கே ஹெல்மட் அணிந்து கைகளில் ஆயுதங்களுடன் உலவிக் கொண்டிருந்த மூவர் மட்டும் தான். கேட்பதற்கு யாரும் இல்லை.

**ஒரே கணத்தில் உதயனின் முன்புற வளாகம் வெறிச்சோடிப் போனது. இப்போது அங்கே ஹெல்மட் அணிந்து கைகளில் ஆயுதங்களுடன் உலாவிக்கொண்டிருந்த மூவர் மட்டும் தான். கேட்பதற்கு யாரும் இல்லை.**

பிரதான அச்சிடல் தளத்துக்குள் நுழைந்தவர்கள் அங்கே வாய்பிளந்து வரிசைவரிசையாக அச்சிட்ட பிரதிகளை வெளித்தள்ளிக் கொண்டிருந்த இயந்திரத்தின் மீதும்.. அச்சிடப்பட்டு அடுக்கி வைக்கப்பட்டிருந்த பிரதிகள் மீதும் டீசலை வேண்டியமட்டும் ஊற்றினர். உருளை வடிவில் மூலையில் இருந்த வெற்றுக் காகிதாதியும் அவர்கள் கண்ணில் இருந்து தப்பவில்லை. எல்லாவற்றுக்கும் சேர்த்துக் கொள்ளி வைத்தவர்கள், தம் வேலை முடிந்ததும் பறந்து போயினர்.

கிட்டத்தட்ட இரண்டு கோடிரூபாவுக்கு மேல் இழப்பை ஏற்படுத்திய இந்தச்

(சூரியகாந்தி 04ஆம் பக்கம் பார்க்க)



அமெரிக்காவுக்குள் நுழைந்து தாக்குதல்களை மேற்கொள்வதற்காக அல்- குவைதா இயக்கத்தினர் இலங்கையையும் பங்களா தேஷையும் தளங்களாகப் பயன்படுத்துகின்றனர் என்றும் அமெரிக்க இணையத்தளங்கள் சுட்டிகாட்டியிருந்தன.

# அமெரிக்காவின் கழுகுப் பார்வை இலங்கை மீது

■ அதிரன்

இலங்கையின் மீது அமெரிக்காவின் பார்வை இப்போது புதிய கோணத்தில் திரும்பியிருக்கிறது.

இதுவரை காலமும் ஈழத் தமிழர்களின் இனப்பிரச்சினை, இறுதிப் போரில் இழைக்கப்பட்ட குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் என இலங்கை அரசுக்கு அதிக அழுத்தங்களை வழங்கி வந்த அமெரிக்காவுக்கு இப்போது இலங்கை குறித்து மேலும் கவனத்தை கூர்மையாக்க மற்றொரு விடயம் கிடைத்திருக்கிறது.

இதன் மூலம் இலங்கையின் மீது தனது கழுகுக் கண் பார்வையை மேலும் கூர்மையாக்குவதற்கான திட்டங்களை அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத் தரப்புக்கள் வகுத்து வருவதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றச்சாட்டுக்கள் என்பன தொடர்பில் அமெரிக்காவின் அழுத்தங்களையும் கருத்துக்களையும் கணக்கில் எடுக்காமல் இருந்து வரும் இலங்கைக்கு எதிராக தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முயற்சியில் அமெரிக்கத் தரப்பு இப்போது மும்முரமாகச் செயற்பட்டு வருகிறது.

அதற்கு ஏற்றால் போல் இலங்கை மீது தனது கவனத்தை மேலும் அதிகரிக்கும் வகையில் அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் மூத்த - பழுத்த ராஜதந்திரியான மிச்செல் ஜே.சிசனை இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராக நியமித்தது வெள்ளை மாளிகை. சிசன் அமெரிக்கத் தூதுவராக நியமிக்கப்படப் போகிறார் என்ற தகவல் வெளியான உடனேயே இலங்கை மீது அமெரிக்கப் பார்வை கூர்மையாக்கப்பட்டுள்ளது என ஊடகங்களும் ராஜதந்திரிகள் பலரும் கருத்துக்களை வெளியிட்டிருந்தனர். அந்தளவுக்கு அமெரிக்காவின் ராஜதந்திர செயற்பாடுகளில் அனுபவமும் திறமையும் கொண்டவராகவிளங்கியவர்சிசன்.

ஈராக், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளிலும் தூதுவராகச் செயற்பட்டு அங்கு அமெரிக்க அரசின் ராஜதந்திர நடவடிக்கைகளைத் திருப்திகரமாக நிறைவேற்றுவதில் வெற்றிகரமாகச் செயற்பட்டவர் மிச்செல் ஜே சிசன். அங்கு அமெரிக்காவின் ராஜதந்திர நடவடிக்கைகள் வெற்றி பெற்றதையடுத்து அவர் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராக சில மாதங்களின் முன்னர் நியமனம் பெற்றார்.

அவர் இலங்கைத் தூதுவராக நியமனம் பெற்று சிறிது காலம் கடப்பதற்கு முன்னமே ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஒன்றை கொண்டு வந்து நிறைவேற்றியது அமெரிக்கா. இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்காக உழைத்த அமெரிக்க ராஜதந்திரிகளில் சிசனும் உள்ளடங்கியிருந்தார் என ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. அவ்வாறான முக்கியத்துவம் வாய்ந்த ஒருவர் இலங்கையில் தூதுவராக இருக்கும் வேளையில் இலங்கைக்கு மற்றுமொரு தலையிடி இப்போது ஏற்பட்டிருக்கிறது.

அமெரிக்காவில் பயங்கரவாத நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முயற்சிகளை அல்-குவைதா இயக்கத்தினர் இலங்கையிலிருந்தே திட்டமிட்டு மேற்கொள்கின்றனர் என்றும் அந்த இயக்கத்தின் கிளை ஒன்றும் இலங்கையில் செயற்படுகிறது எனவும் அமெரிக்க ஊடகங்கள் அதிர்ச்சித் தகவலை வெளியிட்டு சர்ச்சையைக் கிளப்பியுள்ளன. அமெரிக்க ஊடகங்களின் இந்த தகவல் எந்தளவுக்கு உண்மையானது என்பது பற்றி இதுவரை தகவல் எதுவும் வெளியாகவில்லை.

அமெரிக்காவுக்குள் நுழைந்து தாக்குதல்களை மேற்கொள்வதற்காக அல்- குவைதா இயக்கத்தினர் இலங்கையையும் பங்களாதேஷையும் தளங்களாகப் பயன்படுத்துகின்றனர் என்றும் அமெரிக்க இணையத்தளங்கள் சுட்டிகாட்டியிருந்தன. கடந்த 2006 ஆம் ஆண்டு மாலைதீவைச் சேர்ந்த 7 பேர் இலங்கையில் கைதுசெய்யப்பட்டிருந்தனர் என்றும் அவர்களுக்கும் அல்-குவைதா இயக்கத்தினருக்கும் நெருங்கிய தொடர்புகள் இருந்தன என்றும் அந்த நேரத்திலேயே இலங்கையில் அல்-குவைதா செயற்படத் தொடங்கிவிட்டது என்றும் அமெரிக்க இணையத்தளங்கள் தமது செய்தியில் குறிப்பிட்டிருந்தன.

அமெரிக்க இணையத்தளங்களில் இந்தச் செய்தி அமெரிக்காவினால் ஏற்கனவே இலங்கைக்குக் கொடுக்கப்படும் அழுத்தங்களுக்கு மேலும் வலுவூட்டுவனவாக அமைந்துள்ளன என்று மூத்த ராஜதந்திரிகள் பலர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

ஏற்கனவே தனது கருத்துக்களையும் ஆலோசனைகளையும் இலங்கை தொடர்ந்து புறந்தள்ளி வருவதால் கடுப்பிலுள்ள அமெரிக்கா தனது வழமையான ராஜதந்திர நடவடிக்கைகளை பயன்படுத்தி இலங்கையையும் மிரட்டி தன் வழிக்கு கொண்டு வருவதற்காகவே இந்த அல்-குவைதா இயக்கத்தினர் தொடர்பான செய்தியைக் கசியவிட்டிருப்பதாக கூறுகின்றனர் மற்றொரு தரப்பினர்.

ஈராக், ஆப்கானிஸ்தான், லிபியா ஆகிய நாடுகளில் தனது காலை ஆழ ஊன்றியுள்ள அமெரிக்கா இலங்கையிலும் அதனைச் செய்வதற்கு ஒரு வழியைத் தேடுகிறது எனவும் அதற்காக இந்தச் செய்தி அவிழ்த்துவிடப்பட்டுள்ளது என்றும் வேறொரு தரப்பினர் கருதுகின்றனர்.

எது எவ்வாறாயினும் இலங்கையின் மீதான தனது கவனத்தை அமெரிக்கா மேலும் அதிகரிக்கப் போகின்றது என்பதை இந்தச் செய்தி தெளிவாக வெளிப்படுத்துகின்றது.

அல்-குவைதாவின் செயற்பாடுகள் இலங்கையில் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை அமெரிக்கா ஏற்கனவே தமக்கு அறிவிக்கவில்லை என இலங்கை அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல கூறியிருந்தார்.

ஆயினும் உலகப் பொலிஸ்காரனான அமெரிக்கா எப்போதும் செய்யப்போவது எதனையும் முன்னரே சொல்வதில்லை. செய்து முடிந்த பின்பே அது தெரியவரும். பின்லேடனின் கதையையும் அவ்வாறே முடித்தது அமெரிக்கா.

இலங்கை விடயத்திலும் அவ்வாறுதான் நடக்குமோ என்கின்றனர் அரசியல் ஆய்வாளர்கள்.

# மகாவம்சக் குருதி


■ ஜெரா

இடையறாத போர்களும், வறுமையும் அதனால் விளைந்த கலாசார விளைவுகளும் பௌத்தம் என்ற உயரிய வாழ்க்கைத் தத்துவத்தை பிறப்பித்தன. நற்காட்சி, நல்லெண்ணம், நன்மொழி, நற்செய்கை, நல்வாழ்க்கை, நன்முயற்சி, நற்கடைப்பிடி, நற்தியானம் முதலான எட்டுக் கொள்கைகளையும் வலியுறுத்தி சமூகத்தை வழிப்படுத்தும் நெறியாக அது அறிமுகமானது. காலமும், சூழலும் தீர்மானித்த பாமரர்களின், அடிநிலை வகுப்பாரின் குழந்தையாக அதன் வரவு நிகழ்ந்தது. கருத்தரிப்பிலேயே அதிகாரத்தரப்பினால் கட்டமைக்கப்பட்ட பண்பாட்டு உற்பத்திச் சாலையாக அது இருக்கவில்லை. மாறாக, பிறப்பின் பின்னரே சக்திவாய்ந்த மதத்தத்துவமாக வளர்த்தெடுக்கப்பட்டது. அசோகனும், அவனுக்குப் பின்னரான சில மன்னர்களும் அப்பாவி மக்களுக்கு எதிராக தாம் நிகழ்த்திய போரின் காயங்களை மாற்றிக் கொள்வதற்கான கழிம்பாக பௌத்தத்தைப் பயன்படுத்திக் கொண்டனர். ஆனால் அந்த நிலை கால நீட்டிப்புப் பெறவில்லை. ஏற்கனவே உயர் குலத்தினரின் ஆயுதமாக இருந்த இந்து மதம் விரைவாகவே பௌத்தத்தை விழுங்கி ஏப்பம் விட்டுக் கொண்டது.

ஆதலால் வெளித் தேசங்களிலாவது உயிர்வாழவேண்டிய தேவை அந்தத் தத்துவத்துக்கு எழுந்திருக்கையில், அது மதநிலை மாற்றத்தையடைந்தது. அவ்வாறு உருமாற்றம் பெற்றாலே தப்பிப் பிழைக்க முடியும் என்ற யதார்த்தத்தையும் பௌத்தம் எதிர்கொண்டது. அதற்காக பௌத்த தத்துவத்தின் தந்தையான சித்தார்த்தன் தேர்ந்தெடுத்த நிலமே இலங்கை என்கிறது மகாவம்சம். அதாவது பௌத்தம் மதமாகி அது ஒரு பண்பாட்டு உற்பத்திச்சாலையாக மாற்றம் பெற்றதன் விளைவு அந்த "வரலாற்று இலக்கியத்தினை" எழுத வைத்தது.

ஒருவகையில், பௌத்தம் அதிகார மயப்பட்டு அதன் இருப்பைத் தக்க வைத்துக் கொள்ள தேர்ந்தெடுத்த மார்க்கமாக கலாசாரமயமாதலைத் தழுவியது. அதற்குத் தயாரானவர்களாக சிங்கள மன்னர்களும், மக்களும் இருந்தனர். அந்தக் காலத்தில் சிங்கள மக்கள் மத்தியில் உருத்திரண்ட பண்பாட்டுருவாக்கம் நிகழாமல் இருந்தமையால் பௌத்தம் இலகுவாக தனியிருப்பையும், விருப்பையும் பெற்றுக் கொண்டது. ஆகவே அந்த சமூகத்தின் முக்கிய வழிநடத்துனர்களாக பௌத்தத்தைப் போதிப்பவர்கள் பொறுப்பெடுத்துக் கொண்டனர். மன்னர்களைத் தெரிவு செய்வதிலிருந்து, ஆட்சியை நிலைப்படுத்துவது வரையில் இந்தப் "பொறுப்பாளர்களின்" பணி முக்கியத்துவப்பட்டது.

அவர்களின் வழிநடத்தல் எப்போதும் பௌத்த மதத்தினதும், அதனை பின்பற்றும் மக்கள் கூட்டத்தினதும் நலன்சார்ந்த நிலையில் நின்றே செயற்பட்டது. இந்த நலன்சார்ந்த எண்ணம் வலுப்பெற, மத, இன வெறியாகவும் ஆங்காங்கே வெளிப்பட்டிருக்கின்றது. இந்த வெறி பௌத்தத்தை முற்றாக தத்துவநிலையிலிருந்து நழுவி மத குட்டையினுள் விழ வைத்தது. அதன்விளைவாக சிங்களவர்களை முதன்மைப்படுத்தியும், அவர்களுக்கு மட்டுமே இலங்கை சொந்தமானது என்பதையும், அவர்கள் மட்டுமே வாழத் தகுதியுள்ளவர்கள் என்பதையும் பௌத்தப் போதனையாளர்கள் காலம் தோறும் நிறுவி வந்திருக்கின்றனர். "சிங்கள வரலாற்று இலக்கியம்" என போதிக்கப்படும் புனைவுகள் கலந்த மகாவம்சத்தின் பல அத்தியாயங்கள் இதனைத் தெளிவுறுத்துகின்றன.




கிறிஸ்துவுக்கு முன் இரண்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் நடந்த துட்டகாமினி- எல்லாளன் போரை, தமிழ் - சிங்கள இனங்களுக்கிடையிலான இனப் போராக வர்ணிக்கும் மகாவம்சத்தில் இருந்து ஓர் ஆதாரத்தை எடுக்கலாம். லட்சக்கணக்கான தமிழர்கள் மடியும்படி நேரிட்டது தனக்குக் கவலையளிப்பதாக மன்னன் துஷ்டகாமினி கூறுவதாகவும், அப்போது மன்னனை ஆற்றுப்படுத்துவதற்காக பௌத்த துறவிகள் பின்வருமாறு ஆறுதல் கூறுவதாகவும் ஓர் உரையாடல் வருகின்றது.

"இந்த செய்கையின் காரணமாக நீ சொர்க்கத்திற்குப் போகும் பாதையில் எவ்வித தடையும் ஏற்படாது என்று துறவிகள் மன்னனுக்கு கூறுவதுடன் அவ்வாறு கொல்லப்பட்ட லட்சக்கணக்கான தமிழர்கள் நமது மார்க்கத்தை நம்பாதவர்கள். தீய வாழ்வை மேற்கொண்டவர்கள். மிருகங்களை விட உயர்வாக மதிக்கப்பட கூடாதவர்கள்"

என பௌத்த துறவிகள் மன்னனுக்கு எடுத்துரைத்தனர், என்று மஹாவம்சம், அத்தியாயம் 25, பந்தி 110இல் கூறப்படுகின்றது. இங்கு போரில் லட்சக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டார்கள் என்று மஹாவம்சத்தில் கூறப்படுவது எவ்வளவு தூரம் சரிபிழையென்பதற்கு அப்பால், அவ்வாறு கூறப்படும் கருத்தை சிங்கள மக்கள் நம்புகிறார்கள் என்பதே கவனத்தில் கொள்ளத்தக்கதாகும். ஆயிரக்கணக்கான ஆண்டுகாலமாக சிங்கள மக்களின் மனங்களில் இக்கருத்து வேரூன்றி, தமிழர்கள் மிருகங்களைவிட கீழானவர்கள் என்றும், அவர்கள் கொல்லப்பட வேண்டியவர்கள் என்றும் ஒரு வரலாற்று மனவுணர்வு அவர்களிடம் உருவாகியுள்ளது.


அதன் தொடர்ச்சியை இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து ஈழத்தமிழர்கள் உணர்ந்து வருகின்றனர். ஒவ்வொருமுறையும் ஈழத் தமிழருக்கான உரிமையை பெறும் வாய்ப்பு உருவாகின்ற வேளையிலும் பௌத்தத் துறவிகள் தலையிட்டு குழப்பிவிடுகின்றனர். சிங்கள- தமிழ் இனங்களுக்கிடையில் பரஸ்பர புரிதலோடு நல்லிணக்கம் ஏற்படும் சந்தர்ப்பங்களின் மீதும் அவர்களின் கல்லெறி தொடர்ச்சியாக விழுந்துகொண்டேயிருக்கின்றது. சமாதானத்தை போராக்கவும், இயற்கைப் பேரிடரொன்றின் பின் நிகழும் ஆத்ம ரீதியான இன உறவை முரணாக்கவும் இந்தப் பௌத்தத் துறவிகளால் மட்டுமே முடிகின்றது. நீண்டகாலமாகப் பொருதிக் கொள்ளும் இரு இனங்களும் கூடி வாழ்வதற்கான சந்தர்ப்பத்தை

> "இந்த செய்கையின் காரணமாக நீ சொர்க்கத்திற்குப் போகும் பாதையில் எவ்வித தடையும் ஏற்படாது என்று துறவிகள் மன்னனுக்கு கூறுவதுடன் அவ்வாறு கொல்லப்பட்ட லட்சக் கணக்கான தமிழர்கள் நமது மார்க் கத்தை நம்பாதவர்கள். தீய வாழ்வை மேற்கொண்டவர்கள். மிருகங்களை விட உயர்வாக மதிக்கப்பட கூடாதவர்கள்"
>
> –பௌத்த துறவிகள்

(04ஆம் பக்கம் பார்க்க)

# மகாவம்சக் குருதி

(சூரியகாந்தி 03ஆம் பக்கத் தொடர்ச்சி)




மேற்கண்ட இரு சந்தர்ப்பங்களும் ஏற்படுத்திக் கொடுத்தன. மக்கள் அதற்குத் தயாராகிய போதிலும் துறவிகள் அதற்கு எதிராக அணிதிரண்டார்கள். சிங்கள மக்களை இலகுவாக மனமாற்றம் செய்தனர். தொடர்ந்தும் தமிழர்களை சிங்களவர்களின் எதிரிகளாக்கிப் பரப்புரைப் படுத்துவதில் வெற்றி கண்டனர்.

இந்த நிலைப்பாட்டை புறந்தள்ளிய புத்திஜீவிகளின், மனித நேய நேசிப்பாளர்களின் இன ஐக்கிய செயற்பாடுகளையும் பௌத்தத் துறவிகள் விட்டுவைக்கவில்லை. 2003 ஆம் ஆண்டு சிங்கள- தமிழ் கலைக் கூடல் என்ற இனவுறவை வலுப்படுத்தும் நிகழ்வொன்றை இரு இனங்களையும் சார்ந்த புத்திஜீவிகள் நடத்தினர். ஆனால் அதைக் கூட பௌத்தத்தை போதிப்பவர்கள் விட்டுவைக்கவில்லை. பௌத்தத்தின் எட்டுப் பிரதான கொள்கைகளையும் காலில் போட்டு மிதித்துக் கொண்டு கலவரம் செய்தனர். அங்கிருந்தே இலங்கை, பௌத்தத்தின் அடையாளமாக கலவரமும், வன்முறையும், இனக் குரோதமும், மதவெறியும் மாற்றம் பெற்றது.

சமூக வாழ்வொழுங்கில் ஜீரணிக்க முடியாத அடையாளங்களாகிய இவைகள் சிங்கள மக்களை வழிப்படுத்தின. அந்த மக்கள் தேர்ந்தெடுத்த ஆட்சியாளர்களும் அதனை மேலும் ஆழ நிலைப்படுத்தினர். அதன் விளைவு நந்திக்கடல் அவலங்களையும், இந்த நூற்றாண்டின் மிகப்பெரிய அவமானத்தையும் உலகத்துக்கு தந்தது. அதுவே தமிழ் - சிங்கள இனங்கள் மத்தியில் இருந்த பிரிகோட்டை கடக்க முடியாத ஆழியாக்கி விட்டுப்போனது.

இந்த அடக்குமுறைக்குப் பின்னரான காலத்தில் பௌத்தப் போதனையாளர்களுக்கு அரசியலில் இடமற்றுப் போனது. சிறிதுகாலம் அமைதிகாத்தனர். தமிழின அடிமைப்படுத்தலின் வெற்றியை நாடெங்கிலும் கொண்டாடினார்கள். சிங்கள மக்களை ஓரினமாதல் என்ற கொள்கைப் பிரியர்களாக மாற்றினர். அந்தக் காலப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட அடுத்த ஆபத்தே இலங்கை முஸ்லிம்கள்.

தமிழருக்கு அடுத்த நிலையில் இருக்கும் சிறுபான்மையினரான முஸ்லிகளின் விரைவாக சனப்பெருக்கமும், பொருளாதார விருத்தியும் இந்த ஆபத்துநிலையை உருவாக்கின. இன விருத்தி நிலையில் குறைந்துவரும் சிங்கள மக்களும் முஸ்லிம்களின் இனவிருத்தி எதிர்காலத்தில் பெரும் ஆபத்தை தோற்றுவிக்கும் என்ற எண்ணம் இன இருப்புக்கான பீதியாக மாறிவருகின்றது. அந்தப் பீதியின் வெளிப்பாடாகவே இலங்கை முஸ்லிம்கள் மீதான தாக்குதல்கள் அமைகின்றன. பொது பல சேனாவின் வரவும் இதன் பாற்பட்டதே.

பௌத்தத் துறவிகளின் எந்தக் கூற்றையும் தலைமேற் கொள்ளும் சிங்கள மக்களும் ஆட்சியாளர்களும் பொதுபல சேனாவை நிராகரிப்பார்கள் என்று எண்ண முடியாது. மறைமுகமாக இந்த அமைப்பை எதிர்ப்பதாகக் காட்டிக் கொள்ளும் ஆளும்தரப்பு, அரச அங்கீகாரமின்றி நாட்டில் எந்த அமைப்பும் செயற்படலாமா என்ற கேள்விக்கு மௌனத்தைப் பதிலளிக்கின்றது. இந்த மௌனமும், சொதப்பல்களும் இலங்கையில் மேலுமொரு இரத்தம் பாயும் வரலாற்று அத்தியாயத்தை தொடக்கி வைக்கப் போகின்றது.

# குரல் வளையில் கொள்ளி வைப்பு

(சூரியகாந்தி முதலாம் பக்கத் தொடர்ச்சி)


கருகிக் கிடக்கும் காகித உருளைகள்

> உதயன் பிரதான வாசலை நோக்கி அமைக்கப்பட்டிருந்த கண்காணிப்புக் கமராவை அகற்றுமாறு சில மாதங்களுக்கு முன்னர் படைத்தரப்பினர் கண்டிப்பான தொனியில் சொல்லியிருந்தனர்.

சம்பவம் மிகத் திட்டமிடப்பட்டே நடத்தப்பட்டிருக்கின்றது.

ஏனெனில் தாக்குதல் நிகழ்ந்த நாள் புதுவருடத்துக்கு முந்திய தினம் வழமையாகவே புதுவருடம், பொங்கல் போன்ற விசேட பண்டிகை தினங்களில் ஏராளமான விளம்பரங்கள் வந்து குவிவதால் அதிக பக்கங்களுடன் உதயன் வருவதுண்டு. அத்துடன் இந்த முறை புதுவருடம் ஞாயிற்றுக்கிழமை பிறந்தது. ஞாயிற்றுக்கிழமைகளில் உதயனுடன் சூரியகாந்தி வார இதழ் இணைக்கப்படுவதால், வழமையைக் காட்டிலும் அதிக பக்கங்கள் அச்சிடப்பட வேண்டிய தேவை அன்றைக்கு இருந்தது. எனவே, அன்றைய தினம் பிரதான அச்சிடல் தளத்தை முடங்க வைப்பதன் மூலம் அடுத்த நாள் உதயன் வெளிவராமல் செய்ய முடியும் என்றே தாக்குதலாளிகள் நம்பியிருக்க வேண்டும்.

அதனால் தான் உதயனின் ஏனைய பகுதிகளில் தமது கவனத்தைச் சிதறவிடாது நேராக அச்சிடல் பகுதிக்குச் சென்று அங்கிருந்த இயந்திரங்கள் மீதும், அவற்றின் கட்டுப்பாட்டு மையத்தின் மீதும் குறிவைத்து பின் டீசலை ஊற்றிக் கொள்ளி வைத்திருக்கிறார்கள். எனவே, நிச்சயம் மறுநாள் காலை உதயனின் பிரசன்னம் நிகழ்வதற்கான சாத்தியங்கள் எதுவும் இல்லை என்று உறுதிப்படுத்திக் கொண்ட பின்னே அவர்கள் நகர்ந்திருக்கிறார்கள். ஆனால், அவர்களின் நினைப்புக்கு மாறாக அடுத்த நாள் எல்லாப் பக்கங்களோடும், மேலதிகமாக நான்கு வர்ண முகப்போடு வெளிவந்து தாக்குதலாளிகளின் முகத்தில் கரிபூச உதயன் தவறவில்லை. வழமையாகவே தாக்குதலுக்குள்ளாகும் ஊடகம் என்பதால் உதயனுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. ஆனால், தாக்குதலாளிகள் வந்த போது முன்பக்கத்தில் குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் இருந்திருக்க வில்லை. எல்லாம் முடிந்த பின்னே வந்து சேர்கின்ற தமிழ்ப்பட பொலிஸ் போலவே அவரும் கடைசியில் தான் வந்தார். அதற்கிடையில் வந்தவர்கள் போயிருந்தார்கள். இயற்கை கடனுக்காகப் 'பின்னால்' போயிருந்ததாகச் சொல்லிக் கொண்டார்.

இதேவேளை- உதயனின் பாதுகாப்பை முன்னிட்டு சகல பிரிவுகளிலும் கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தப்பட்டிருந்தன. ஆயினும் தொழில்நுட்ப விரிவாக்கல் காரணங்களால் தாக்குதல் நடத்தப்படுவதற்கு இருவாரங்களுக்கு முன்பிருந்தே கமராக்களில் உள்வாங்கப்படும் காட்சிகள் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை. இது தாக்குதலாளிகளுக்கு வசதியாகப் போய் விட்டது. அத்துடன் இவ்வாறான அராஜகம்புரிவோரை இனங்காண்பதற்காக உதயன் பிரதான வாசலை நோக்கி அமைக்கப்பட்டிருந்த கண்காணிப்புக் கமராவை அகற்றுமாறு சில மாதங்களுக்கு முன்னர் படைத்தரப்பினர் கண்டிப்பான தொனியில் சொல்லியிருந்தனர். அவ்வாறு குறித்த கமராவை ஏன் அகற்ற வேண்டும் என்பதற்கான சரியான காரணத்தை அவர்கள் முன்வைக்கவில்லை.

தாக்குதல் நடப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்பிருந்தே இனந்தெரியாதோரின் நடமாட்டம் உதயனைச் சூழ அதிகரித்திருந்தது. குறிப்பாக உதயனுக்குப் பக்கத்தே உள்ள சிறு ஒழுங்கையில் இரவு நேரங்களில் வரும் மூவர் கைத் தொலைபேசி மூலம் உதயனின் வெளிப்புற வளாகத்தைப் பதிவு செய்ததை அவதானிக்க முடிந்தது. தம்மை உதயன் பணியாளர்கள் நோட்டமிடுகிறார்கள் என்பதை உணர்ந்துவிட்டால் அவர்கள் உடனடியாகவே வேறு ஏதோ அலுவலுக்காக நிற்பவர்கள் போல பாசாங்கு செய்யவும் தவறவில்லை.

★ ★ ★

உதயன் மீதான தாக்குதல் குறித்து பி.பி.ஸிக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்திருந்த கருத்துக்கள் பலவித சந்தேகங்களைக் கேட்போரிடத்தே உண்டு பண்ணியிருந்தன.

"யாழ்.மாவட்டப் பொறுப்பதிகாரி தாக்குதல் நடந்து கொண்டிருக்கும் போது.." என்று முதலில் வாய்தவறி சொல்லிவிட்ட அமைச்சர் டக்ளஸ் உடனடியாகவே சுதாகரித்துக் கொண்டு

"தாக்குதல் நடந்து முடிந்த பின்னர் இப்படியொரு சம்பவம் நடந்தது பற்றி எனக்கு அறிவித்தார். நான் உடனடியாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டேன்." என்று சமாளித்தார். அவரின் இந்தத் தடுமாற்றமான கூற்று தாக்குதல் நடந்து கொண்டிருக்கும் போதே டக்ளஸுக்கும் தகவல் போயிருக்கிறதோ என்ற ஐயம் அனைவரிடத்தும் ஏற்பட்டிருக்கிறது. உதயனின் பாதுகாப்புக்காக நின்ற பொலிஸ் உத்தியோகத்தருக்குக் கூட தாக்குதல் நடந்து முடிந்த பின்னர் தான் அது குறித்து தெரியவந்திருந்த நிலையில் அமைச்சருக்கு மாத்திரம் "தாக்குதல் நடந்து கொண்டிருக்கும் போது" எப்படித் தகவல் போனது?

அத்தோடு உதயன் முன்னுக்குப்பின் முரணான செய்திகளை வெளியிடுவதாகவும் அந்தக் கருத்துப் பகிர்வில் அமைச்சர் டக்ளஸ் மூச்சுக்கு முந்நூறுதரம் சொல்லவும் தவறவில்லை. பி.பி.ஸி செய்தியாளர் என்ன கேள்வி கேட்டாலும் பிள்ளையார் சுழி போல "உதயன் முன்னுக்குப்பின் தவறான செய்திகளை வெளியிட்டு வருகிறது." என்றே சொல்லிக் கொண்டிருந்தார்.

உதயன் தன்னைத்தானே தாக்கிக் கொண்டதாகத் தனது 'கண்டு பிடிப்பை' எடுத்த எடுப்பிலேயே வெளியிட்டிருந்த அமைச்சர் டக்ளஸ், "இந்தத் தாக்குதலில் துப்பாக்கிகளை பயன்படுத்தப்பட்டுள்ளனவே?" என்ற கேள்விக்கு மட்டும் "அவ்வாறு துப்பாக்கிகள் பயன்படுத்தப்பட்டனவா என்பது பற்றி விசாரணையின் பின்னரே தெரியவரும்" என்று மழுப்பினார்.

எல்லோருக்குமே பகிரங்கமாகத் தெரிந்த துப்பாக்கிப் பிரயோகம் பற்றி விசாரணையின் பின்னர் தான் சொல்ல முடியும் என்று நிதானம் காட்டும் அமைச்சர், எவருக்குமே தெரிந்திராத தாக்குதலுக்கான காரணத்தை மட்டும் "தம்மைத் தாமே தாக்கிவிட்டு அரசுக்கு அவப் பெயர் உண்டாக்க நினைக்கிறார்கள்." என்பதை மட்டும் எந்தவித விசாரணையும் இன்றி தனது 'ஞான திருஷ்டி' மூலம் பட்டென்று சொல்லி விடுகிறார். அமைச்சர் என்பவர் அரசுக்கு வாலாட்டுவதை மட்டும் தொழிலாகக் கொண்டிருப்பவர் அல்ல. மக்களின் குறைகளை அறிந்து அரசிடத்தே கொண்டு சென்று அவற்றைத் தீர்ப்பதே ஒரு அமைச்சரின் தலையாய பணி. அந்தப் பணிக்குள் மக்கள் சேவை புரியும் ஊடகங்களைக் காப்பதும் அடக்கம். ஆனால், ஊடகங்களை அடக்குவதையும், அடக்கம் செய்ய முனைவதையும் ஆதரித்துப் பேசும் அமைச்சர்களும், அரசும் இருக்கும் நாட்டில் எப்படிப் பெய்யும் மாதம் மும்மாரி? ★

# அவசர அவசரமாய் அழிகின்ற மொழிகள்!



■ மதுவிழி

அந்தமான். எண்ணற்ற குட்டிக்குட்டித் தீவுகளைக் கொண்ட ஒரு தீவுக்கூட்டம். இந்தியாவிற்குச்சொந்தமான இத் தீவுக்கூட்டங்களில் பல்வேறுபட்ட இனக்குழும மக்கள் வாழ்கிறார்கள்.பல்வேறுபட்ட மொழிகள் பேசப்படுகின்றன. இதிலும் சிறப்பாக ''கிரேட் அந்தமான் மொழிகள்'' (Great Andamanese) எனப்படுகின்ற ஒரு பிரிவு காணப்படுகின்றது. இதில் பத்து மொழிகள் காணப்படுகின்றன. இதில் உள்ள ஒரு மொழியே போவா (Boa) மொழியாகும்.

அந்தமான் தீவுகளின் வரலாறும் அங்குள்ள மனித குலத்தவர்களின் தொன்மையும் கவனிக்க வேண்டிய ஒன்றே. 1858 களில் ஆங்கிலேயர்கள் அந்தமான் தீவுகளை தம்வசமாக்கி காலனித்துவத்தினுள் கொண்டு வந்ததும் அங்கு பெரும் மாற்றம் ஏற்படத்தொடங்கியது. காலனித்துவத்தில் பல சம்பவங்களும் இறப்புக்களும் சம்பவித்தன. திடீரென பரவிய புதிய வகை நோய்களிற்கு தாக்குபிடிக்க முடியாமல் பல மக்கள் இறந்தனர். இறுதி வரை மக்களுடன் சுமுகமான உறவைப் பேணுதல் என்பது ஆங்கிலேயர்களிற்கு முடியாமற் போக அவர்கள் தமது ஆதிக்கத்தின் கீழிருந்த மக்களைச் சிறைப்பிடித்து தமது கட்டுப்பாட்டின் கீழ் வளர்க்க முற்பட்டார்கள். அப்போது உருவானது தான் "அந்தமான் காப்பகம்". கிட்டத்தட்ட 150க்கு மேற்படட குழந்தைகள் காப்பகத்தில் பிறந்தார்கள். ஆனால் இங்கு முக்கியமான ஒரு விடயம் அவ்வாறு பிறந்த குழந்தைகளில் அனேகமானோர் இரண்டு வயதைக் கடந்து வாழ்ந்திருக்கவில்லை என்பதாகும். ஆங்கிலேயர்கள் அந்தமானை தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தபோது பத்து பழங்குடியினங்கள் இருந்திருக்கின்றன. அவர்களில் மேலே காட்டிய கிரேட் அந்தமானியர்கள் இனம் மட்டும் ஐந்து ஆயிரம் அளவில் இருந்திருக்கிறார்கள். ஆனால் இன்று வெறும் ஐம்பத்து இரண்டு பேர் மட்டுமே அந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் வாழ்கிறார்கள்.

65000 ஆண்டுகளிற்கு அதிகமாக நிலைபெற்றிருந்த ஒரு மொழி இன்று எங்களுடைய காலத்தில் மொழிகளின் பட்டியலிலிருந்து நீங்கிவிட்ட அவலத்தை காண்கிறோம்

ஆனாலும், இன்று வாழ்கின்ற இந்த கிரேட் அந்தமானியர் குழுவில் உள்ள ஒருவராலும் தமது புராதன மொழியான போவா மொழியை முழுமையாக பேசமுடியாது என்பது இங்கு வருத்தப்படவேண்டிய ஒரு விடயமாகும். போவா மொழியை முழுமையாக அறிந்து பேசிவந்தவர்கள் இருவர் தான். அதில் ஒருவர் ஏற்கனவே காலமாகிவிட்டார். இந் நிலையில் எஞ்சியிருந்த ஒரே ஒரு பெண்மணியும் தன்னுடன் சரியான புராதன மொழியில் உரையாட எவருமே இல்லாத நிலையில் 2010 ஆம் ஆண்டு மாசி மாதம் முதல் வாரத்தில் காலமாகிவிட்டார். அவ்வளவு தான். ஒரு புராதன மொழி வரலாற்றுப் பெருமை மிக்க மொழிகளின் பட்டியலில் இருந்து வழக்கொழிந்து போயிற்று. போவா என்ற மொழிப் பெயரையே தன்னுடைய பெயராகவும் கொண்ட அந்த மூதாட்டியோடு அந்த மொழியின் வாழ்வும் முடிந்து போயிற்று.

தமிழிலக்கியங்களைப் பொறுத்த வரை அந்தமான் பற்றிய குறிப்புக்கள் ஆங்காங்கே காணப்படுகின்றன. பழந்தமிழர் இத் தீவுக்கூட்டங்களை நக்கவாரம் என்று அழைத்திருக்கிறார்கள். 11ஆம் நூற்றாண்டு சோழக்கல்வெட்டுக்களும் இக் குறிப்புக்களைக் காட்டுகின்றன. மணிமேகலையும் நக்கசாரணம் என்று ஆடையற்ற நாடோடிக்கூட்டத்தை குறிப்பிடுவதாக கூறப்படுகிறது. அது போல இராஜேந்திர மன்னன் மாநக்க வாரம் பகுதியை கடல் வணிகத்தின் போது வெற்றி கொண்டதாகவும் ஒரு குறிப்புக் காணப்படுகிறது. அந்தமானின் தென்பகுதிக் கூட்டங்களான நிக்கோபார் தீவுக்கூட்டம் இந்த நக்கவாரத்திலிருந்து மருவியிருக்கலாமென்றும் மலபார் என்பது மரைவாரம் என்பதிலிருந்து மருவியிருக்கலாம் என்றும் வரலாற்று அறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள். எது எப்படியிருப்பினும் அந்தமானிற்கு ஒரு வரலாற்று பக்கமும் தனித்துவமும் இருப்பது மறுக்கமுடியாத ஒன்று.

பொதுவாக இந்தியாவில் நான்கு மொழிக் குடும்பங்கள் இருப்பதாகக் கூறப்படுகின்றது.


**திராவிடம்**
**இந்திய-ஆரியம்**
**ஆஸ்திரிய-ஆரியம்**
**திபெத்திய-பர்மியம்**

என்ற நான்கு மொழிக்குடும்பங்களே இதுவரை அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் இப்போது அந்தமானின் பழங்குடிமொழிகளெல்லாம் ஆராயப்பட்ட பிறகு பேராசிரியர் அன்விதா அபி(ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகம்) இந்தியாவில் ஆறு மொழிக்குடும்பங்கள் இருப்பதை அங்கீகரிக்க வேண்டும் என்று கூறியுள்ள[ர்].

இவ்வாறு போவா மொழி வழக்கிலிருந்து ஒழிந்து போனாலும் அதைவிடச் சிறு குழுக்கள் ஏனைய சில குடிகளின் மொழி பேணப்படுகின்றது. குறிப்பாக அந்தமான் தீவுக்கூட்டங்களின் காட்டுப்பகுதியில் வாழ்கின்ற ஜாராவா பழங்குடி ஓரளவிற்கு பண்பாட்டுவிபத்திலிருந்து தப்பிக்கொண்டு தம் மொழியோடு வாழ்ந்துகொண்டிருக்கின்றது.

பண்பாடுகள் பாதுகாக்கப்பட வேண்டியது ஆயினும் சிலவகையான பண்பாட்டுவிபத்துக்கள் வாழ்வியலின் வரையறைகளையே தகர்த்துவிடக்கூடியன. இன்று எங்களிற்கு இருக்கின்ற அந்நிய கலாசார மோகம், திட்டமிட்ட உட்புகுத்தற் சதிகளிற்கு மத்தியில் எங்களை நாங்ககள் எப்படிப் பாதுகாத்துக்கொள்ளப் போகிறோம். எல்லாவற்றையும் அறிந்திருப்பதில் தப்பில்லை ஆயினும் அதன்மூலம் என்னுடையதை தொலைத்துவிட்டு நின்றால் அது மகா தப்பு.

மொழி என்பது ஒரு இனத்தின் வாழ்வியலிற்கான மிக முக்கிய அடையாளம். எத்தனையோ காரணங்களால் எத்தனையோ மொழிகள் வரலாற்றிலிருந்து நழுவிப்போகின்றன. தொல்பெருங் காலம் முதல் ஆயிரமாண்டுகள் தொடர்ந்த இந்த இனம் கிட்டத்தட்ட 65000 ஆண்டுகளிற்கு அதிகமாக நிலைபெற்றிருந்த ஒரு மொழி இன்று எங்களுடைய காலத்தில் மொழிகளின் பட்டியலிலிருந்து நீங்கிவிட்ட அவலத்தை காண்கிறோம். இது தனியே இந்தியாவினுடையதோ அல்லது அந்தமான் குடிகளதோ ஆற்றாமை அல்ல... மொழியை பாதுகாக்க நினைக்கின்ற ஒவ்வொருவரதும் இயலாமையே. இன்று அவனுக்கு நாளை?





‘ தமிழ்த் திரையுலகில் இலக்
வெளியாவதில்லை என்ற ஆதா
மத்தியில் உண்டு. அப்படி வெ
படைப்புகளும் வந்த சுவடு தெ
போய்விட்டன. தி. ஜானகிராமன
நாவல் திரைப்படமாக வந்தது.

# புதிய தடத்தில் தமிழ் சி

## அண்மைக் கால படங்கள்: சில கு

சமீபத்தில் இயக்குநர் பாலாவின் கைவண்ணத்தில் 'பரதேசி' என்ற திரைப்படம் வெளியாகியது. தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையைப் பற்றிய 'The red tea' (எரியும் பனிக்காடு) என்ற நாவலைத் தழுவிய படம் இது. இந்தப் படத்தால் பாலா விற்கு ஆதரவாகவும், எதிர்ப்பாகவும் பல்வேறு விமர்சனங்கள் எழுந்தன. என்றாலும் தேயிலைத் தொழிலாளர்களின் அவல வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டியமைக்காக இந்தப் படம் தமிழ்த் திரையுலகில் முக்கியமான ஒன்றாகக் கருதப்படுகிறது. பரதேசி எழுப்பும் சலனங்கள் விதிவிலக் கானவை அல்ல. கோடம்பாக்கத்தை மையமாகக் கொண்ட கனவுத் தொழிற் சாலையில் அண்மையில் நிலவிவரும் போக்கின் ஒரு அடையாளம் தான் பரதேசி. வழக்கமான பொழுது போக்கு அம்சங்களைத் தாண்டிப் படங்கள் வருவது அரிதாக இருந்துவரும் தமிழ்த்திரையுலகில், அண்மையில் அத்தகைய படங்கள் வருவது அதிக ரித்து வருகிறது. யதார்த் தமான வாழ்வியலையோ உண்மைச் சம்பவத் தையோ முக்கியமானதொரு பிரச்சினை யையோ அடிப்படையாகக் கொண்டு சில படங்கள் வெளிவந்துள்ளன. இதே வரிசையில் மேலும் சில படங்கள் வெளியாகக் காத்திருக்கின்றன. தமிழ்ப் படங்கள் புதிய பாதையில் பயணிக் கின்றனவா?மலையாளத் திரையுலகில் அங்குள்ள பிரபலமான இலக்கிய வாதிகளான எம்.டி. வாசுதேவன் நாயர், அடூர் கோபாலகிருஷ்ணன், தகழி சிவசங் கரன்பிள்ளை ஆகியோரின் படைப்பு களைத் திரைப்படங்களாக எடுத்துள் ளார்கள். அவை வணிக ரீதியான வெற்றியையும் பெற்றுள்ளன. ஆனால் தமிழ்த் திரையுலகில் இலக்கிய படைப்புகள் வெளியாவதில்லை என்ற ஆதங்கம் படைப்பாளிகள் மத்தியில் உண்டு. அப்படி வெளிவந்த சில படைப் புகளும் வந்த சுவடு தெரியாமல் போய் விட்டன. தி. ஜானகிராமனின் மோகமுள் என்ற நாவல் திரைப்படமாக வந்தது. ஆனால் அந்தப் படம் வெற்றி பெற வில்லை. நாவலை ரசித்தவர்களின் பாராட்டையும் பெறவில்லை. ஞான ராஜசேகரன் பாரதியாரின் வாழ்க்கை யைத் திரைப்படமாக்கினார். ஆனால் அதை குறைவான மக்களே கண்டுர சித்தார்கள். மேலும் அந்தப் படத்தில் பாரதியின் வாழ்க்கைச் சம்பவங்களைத் தாண்டி, தமிழ் சினிமாவின் நாயகத் துவம் தலைதூக்கி யதாகவும் சிலர் குற்றம் சாட்டினார்கள். இளைய ராஜாவின் அற்புதமான மெட்டுக் களில் பாரதியாரின் அமர வரிகளைக் கேட்டதுதான் அந்தப் படத்தின் ஆகப் பெரிய பங்களிப்பு.இவை போக, கல்கியின் பிரசித்தி பெற்ற படைப் பான பொன்னியின் செல்வனைத் திரைப்படமாக எடுக்க வேண்டும் என்று கமல் ஹாசன், மணிரத்னம் போன்றவர்கள் பல ஆண்டுகளா கவே தமது விருப்பங்களை வெளிப் படுத்தி வந்தாலும் அதற்கான சாத்தி யக்கூறுகள் இருப்பதாகத் தெரிய வில்லை. எம்.ஜி.ஆர்.கூட இத்தகைய முயற்சியில் இறங்கினார்.


இயக்குநர் மகேந்திரன் இயக்கு நராவதற்கு முன்பே அவரை அழைத்து பொன்னியின் செல்வ னுக்குத் திரைக்கதை எழுதச் சொன்னதாகச் சேதி உண்டு. ஆனால் எம்.ஜி.ஆராலும் அதை நிறைவேற்ற முடியவில்லை. இப்போது மணிரத் னத்திற்காக ஜெயமோகன் பொன்னி யின் செல்வன் திரைக்கதை எழுதுவ தாக இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பேச்சு எழுந்தது. வந்த சுருக்கில் அந்தப் பேச்சு காற்றில் கரைந்து போனது. நாவல்களைப் படமாக்கும் முயற்சி இப்படித் தடுமாறினாலும் பரதேசி திரைப்படம் அந்தக் குறையை ஓரள வேனும் போக்கியது என்று சொல்லலாம். இதையடுத்து மேலும் பலர் நாவல் களைப் படமாக்க முனையக்கூடும் என்னும் நம்பிக்கை பிறந்துள்ளது வழக்கமான பொழுதுபோக்கு அம்சங்க ளையும் தாண்டி தமிழில் ஏதேனும் வாழ் வியல் அம்சத்தை மையமாக வைத்து ஏராளமான திரைப்படங்கள் உரு வாகி வருகின்றன. யதார்த்தமான வாழ்வி யலைக் காட்டிய படங்கள் அநேகமாக எல்லா ஆண்டுக ளிலும் வெளிவந்துள்ளன. சேரனின் ஆட்டோகிராஃப், பாலாஜி சக்தி வேலின் காதல், வழக்கு எண் 18/9, தங்கர் பச்சனின் பள்ளிக்கூடம், பாலாவின் பிதாமகன், அறிவழ கனின் சாட்டை, வசந்தபாலனின் வெயில், அங்காடிதெரு உள்ளிட்ட பல படங்கள் இவற்றில் சில உதாரணங்கள். இவற்றில் சில வெற்றியும் அடைந்துள்ளன. 2013 ஆம் ஆண்டில் இந்தப் போக்கு வலுவடைந்துள்ளதாகத் தெரிகிறது. இந்த ஆண்டில் மூன்று மாதங்களே கடந்து வந்துள்ள நிலையில் பொழுது போக்கு அம்சங்களைத் தாண்டி ஹரிதாஸ், சுண்டாட்டம், வத்திக் குச்சி, சென்னை யில் ஒருநாள், பரதேசி ஆகிய ஐந்து படங்கள் வெளிவந்துள்ளன. இந்த படங்கள் தமிழர்களின் பல்வேறு வாழ்வியல் கூறுகளைக் காட்சிப்படுத் தியுள்ளன. ஆட்டிசம் என்ற பாதிப்புள்ள குழந்தை களும், இளைஞர்களும் பல குடும்பங் களில் இருக்கிறார்கள். அவர்க ளைப் பெற்றவர்கள் 'எதனால் இந்த பாதிப்பு?' என்பதை உணர முடியாமல் தங்களைத் தாங்களே நொந்துகொள் வதையும் நம்மில் பலர் பார்த்திருப்போம். ஆனால் இதைப் பற்றிய விழிப்புணர்வோ, வாழ்க்கை முறைகளோ நவீன தமிழ் இலக்கியங்களிலும், திரைப்படங்களிலும் இடம்பெறவில்லை.

'ஹரிதாஸ்' என்ற திரைப்படம் அந்த குறையைத் தீர்த்துள்ளது. ஆட்டிசம் பாதிக்கப்பட்ட சிறுவனை வளர்க்க அவனது தந்தை படும் கஷ்டங்களை அழகாக படமாக்கியுள்ளார்கள். திரையு லகில் மட்டுமல்லாது தமிழிலும் ஆட்டிசம் பற்றிய முதல் படைப்பு இதுதான் என்று சொல்லலாம். இந்த படம் திரையிட்டதற்குப் பிறகே ஆட்டிசம் பற்றிய புத்தகம் தமிழில் வெளியா கியது.இந்தப் படம் ஒரு தொடக்கம் மட்டுமே.

அடுத்து வந்த சுண்டாட்டம் என்ற படம் கேரம் விளையாட்டை (சுண்டும் ஆட்டம் - சுண்டாட்டம்) மையமாக வைத்து ரவுடியிசத்தில் ஈடுபடும் சில வடசென்னை மக்கள் பற்றி வழக்கமான பொழுதுபோக்கு அம்சங்களுடன் எடுக் கப்பட்டிருந்தது. மார்ச் 15ஆம் திகதி வெளிவந்த படங்களில் பரதேசியில் தேயிலை தொழிலாளர்களின் துன்பங் களையும், ஒடுக்கப்பட்ட மக்க ளின் வாழ்க்கை முறையையும் இயக்குநர் பாலா படம் பிடித்தார். இந்த படத்தின் கதை 'The red tearsquo; என்ற ஆங்கில நாவலைத் தழுவியது என்று சொல்லப் பட்டதால் அது சம்மந்தமான விமர் சனங்கள் எழுந்தன. ஆனால் இந்த படம் வழக்கமான அம்சங்களில் இருந்து விலகி நின்றது என்பதை மறுக்க முடியாது. அதே நாளில் வெளியான வத்திக்குச்சி சென்னை புறநகரில் வசிக்கும் ஆட்டோ டிரைவர் ஒருவரின் அன்றாட வாழ்வில் ஏற்படும் சலனங்கள் பற்றியதாக இருந்தது.

சில ஆண்டு களுக்கு முன்னால் சென்னை முகப் பேரில் இருந்த ஒரு தனியார் மருத்துவ மனையில் ஹிதேந் திரன் என்ற சிறு வனுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை பலனளிக் கவில்லை. அவனுக்கு மூளைச் சாவு ஏற்பட்டது. அதே சமய த்தில் சென்னை அப்போலோ மருத்து வமனையில் ஒருவர் இதயம் செயலி ழந்து உயிருக்குப் போராடி வந்தார். ஹிதேந்திரனின் இதயம், அவனது பெற் றோருடைய அனுமதியு டனும் சென்னை போக்கு வரத்து பொலிஸாரின் ஒத்து ழைப்புடனும் ஏழே நிமிடங்களில்





# கள்

னராக கலந்துகொண்ட யோகமக்கா வீட்டிற்குச் திரும்பிச் செல்வதற்கு பஸ்ஸை பிடிக்க வேண்டி இருப்பதால் அவசரமாக விடைபெற்றுக்கொணடு புறப்பட்டாள்.

வீட்டிற்கு வந்த பிறகும் யோகமக்காவுக்கு பூமணியின் மலரும் நினைவுகள் தான் அடிக்கடி காட்சிப்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தன. தொடர்ந்து பூமணியின் பிள்ளைகளைப் பற்றிய கவலையும் கூட வரும் சில வேளை எரிச்சலும் வரும். அந்தப் பிள்ளைகள் தாயை மறந்திட்டுதுகள். அண்டைக்கு தான் வடிவாய் பார்த்தனே. அதுகளின்ர கூத்தும் கும்மாளமும் என்னண்டு சொல்லுறது? இந்த நாளையில் தாய், பிள்ளை என்றாலும் ஒரு ஒட்டில்லாத உறவுதான். என்னுடைய பிள்ளைகளும் உப்பிடித்தான் செய்யுங்கள். சில பிள்ளைகள் உயிரோட இருக்குமட்டும் எண்டாலும் பாசமாய் இருக்கிற மாதிரி காட்டிக்கொள்ளுதுகள். இந்த உலகமே நாடக மேடை எண்டதும் எல்லாரும் நடிகர்கள் தான் எண்டதும் அனுபவத்தில் கண்டுதான் சொல்லி இருக்கிறார்கள்.

இன்னும் சில நாள்கள் சென்றன. நாள்கள் வாரங்களாகி மாதங்களாகி ஓடிக்கொண்டிருந்தன. அன்று புதுவருடப் பிறப்பு யோகமக்காவின் வீட்டில் வழக்கமாக எந்தக் கொண்டாட்டமும் அமர்க்களப்படுவதும் இல்லை. சப்பென்று போய்விடுவதும் இல்லை. விரலுக்குத் தகுந்த வீக்கம் என்பது போல் தன்னுடைய வசதிக்குத் தகுந்த மாதிரித்தான் எல்லாவற்றையும் நடத்தி முடிப்பாள். இது எங்கள் கிராமங்களில் இன்னும் மிச்சம் சொச்சமாக இருந்துவருகின்ற ஒரு நடைமறை. இப்ப வெளிநாட்டுக் காசுகளும் அதோட சேர்ந்த பழக்க வழக்கங்களும் எல்லாரையும் பிடிச்சு ஆட்டிப் படைக்குது.

யோகத்துக்கு பூமணி வீட்டில் நல்ல நாள் பெருநாளில்என்ன செய்தார்களோ என்று போய்ப் பார்ப்பதற்கு மனமும் துருதுருத்தது. மத்தியானம் வீட்டிலுள்ளவர்கள் எல்லோருக்கும் சாப்பாட்டை பரிமாறி முடித்துக்கொண்டு அவசரம் அவசரமாகப் புறப்பட்டு வந்துவிட்டாள். எனக்குத்தான் மனம் கிடந்து அலையுது. அதுகள் எதையும் கணக்கில எடுக்கமாட்டுதுகள். இப்படி நினைத்துக்கொண்டு பூமணி அக்கா வீட்டுக்குள் நுழைந்தவளுக்கு எதிர்பாராத அதிர்ச்சி காத்திருந்தது.

பூமணியின் படத்தைச் சுற்றி ஒரு புதுச்சீலை மாலை போல மடித்து போடப்பட்டிருந்து. பிள்ளைகளும் தகப்பனும் வழக்கமான உடுப்புகளோடு தான் இருந்தார்கள். யோகம் அக்காவை கண்டதும் அவர்களின் கண்கள் கலங்கின. யோகம் அக்கா அழுதே விட்டாள். யாருக்கு யார் ஆறுதல் வார்த்தைகளைச் சொல்லுவதென்று தெரியவில்லை. யோகம் அக்கா பூமணியின் மீது வைத்திருந்த களங்கமில்லாத நட்பு கண்ணீரில் கரைந்து வழிந்தோடியது. பெத்தமனம் மட்டும் பித்துகிடையாது. பிள்ளைகள் மனமும் பித்துத்தான் என்று அந்தப் பிள்ளைகளின் கலங்கிய கண்கள் காட்டிக்கொடுத்தன. தாம்பத்தியம் ஒரு சங்கீதம் என்று பூமணியின் கணவனுடைய வாடிய முகத்தில் எழுதி ஒட்டப்பட்டிருந்து.'

கண்களால் காண்பதும் பொய் காதுகளால் கேட்பதும் பொய் தீர விசாரித்து அறிவதே மெய் ஆகும் என்பார்கள். பூமணி அக்காவின் குடும்பத்தைப் பற்றி யோகம் அக்கா போட்ட கணக்கு இப்போது தவறு என்று அவள் உணர்ந்து கொண்டாள். ஆத்திரத்தில் கொட்டும் வார்த்தைகளும் அவசரத்தில் செய்யும் வேலைகளும் சரியாக அமைவதில்லை. வழக்கமாக துன்பமும் துயரமும் மனதில் சுமையாகத்தான் கனக்கும் யோகம் அக்கா தனது தோழியின் வீட்டிலிருந்து வெளியேபுறப்பட்ட போது சோகத்தோடுதான் புறப்பட்டாள். அந்த சோகத்திலும் மனம் கனக்கவில்லை. கையில் எடுத்து வந்த சிறிய பலகாரப் பார்சலை பூமணியின் படத்துக்கு முன்னால் விரித்து வைத்தாள். அங்கே புத்தாண்டு வாழ்த்துக்கள் பரிமாறப்படவில்லை என்று சொல்ல முடியாது. மௌனத்தின் மொழியில் வரிகின்ற வார்த்தைகளை உள்ளங்கள் மட்டுமே புரிந்துகொள்கின்றன. இதுதான் உள்ளம் கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்.

# மருதடிப் பிள்ளையாரின் தேர் காண இன்னமும் காத்திருக்க வேண்டுமா?



மருதடிப் பிள்ளையார் ஆலயம் யாழ்.மாவட்ட மக்களின் உள்ளங்களில் மிகவும் உன்னதமான இடத்தை வகிக்கின்றதென்பதையிட்டு இரு கருத்துக்கள் இருக்க முடியாது. சித்திரை வருடப்பிறப்பென்று கூறும்போது எமது மனக் கண்முன் தோன்றுவது மருதடி விநாயகரின் தேர்த்திருவிழா தான். தேர்த் திருவிழா அன்று மருதடியில் சங்கமிக்கும் மக்கள் கூட்டத்தை அளவிட முடியாது. அத்துடன் மருதடிப்பிள்ளையார் தேரில் உலாவருவதைப் பார்க்க பல அடியவர்கள் மானிப்பாய் நோக்கி கால்நடையாகவும் பல அடியவர்கள் வாகனங்களிலும் வந்துகொண்டே இருப்பார்கள். மருதடிப்பிள்ளையார் தங்கள் வினைகளைத் தீர்த்து அருள் புரிவார் என்ற நம்பிக்கை காலம் காலமாக மக்கள் மனதில் நிறைந்துள்ளது.

அம்மையும் அப்பனும் தான் உலகம் என்பதை உணர்த்திய விநாயகப் பெருமான் மக்களின் வினைகளை தீர்ப்பதில் முதலிடத்தை பெறுகின்றார். விநாயகர் என்றாலே ஞானத்தின் முதல்வன் என்பது யாவரும் அறிந்ததே.

பல வழிகளிலும் பிரசித்திபெற்ற மருதடி பிள்ளையார் ஆலயம் கடந்த 9 வருடங்களாக திருத்த வேலைகள் காரணமாக வருடாந்த உற்சவங்களை நடாத்த முடியாத நிலையில் உள்ளது.

மருதடிப் பிள்ளையார் தேரேறி வருவதை காண்பதற்கு ஒவ்வொரு வருடப் பிறப்பன்றும் மக்கள் ஆவலாக உள்ளனர். அதேவேளை ஆலய கட்டுமானப் பணிகள் அடியவர்களின் பங்களிப்புடன் நடைபெற்று வருவதைக் காணக் கூடியதாக உள்ளது. 2014 ஆம் ஆண்டில் மருதடி திருவிழாக்கள் ஆரம்பமாவதற்கும் வருடப்பிறப்பன்று மருதடி விநாயகர் தேரில் உலாவருவதை காண்பதற்கும் நிதிப் பற்றாக்குறை இருப்பதனை கோவிலில் உள்ள விளம்பரப்பலகை கூறுகிறது.

ஒவ்வொருவருக்கும் மருதடி விநாயகரின் அருள் பல்வேறு வழிகளில் கிடைத்திருக்கும். அதனை நினைவுகூர்ந்து ஆலயக் கட்டுமானப் பணிகள் நிறைவுற நாங்களும் உதவி புரிய வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகும். இராமர் அணை கட்டும் போது அணில் நீரில் நனைந்து மண்ணில் புரண்டு தன் உடம்பில் உள்ள மண்ணை சேர்த்து உதவியது நாம் அறிந்ததே. அதே போல் நாங்கள் அனைவரும் எமது பங்களிப்பை வழங்குவது நிச்சயம் எமது ஆன்ம ஈடேற்றத்துக்கு வழிவகுக்கும்

கடந்த ஓரிரு தினங்களுக்கு முன் நான் மருதடிப்பிள்ளையார் கோவிலுக்குச் சென்ற போது அங்கிருந்த விளம்பரப் பலகையை பார்த்தேன். அதில் ஆலயத் திருப்பணி நிறைவுபெற இன்னும் 3 கோடி ரூபா(300 லட்சம்) தேவையாக உள்ளது என குறிப்பிடப்பிட்டிருந்தது. எனவே நாங்கள் அனைவரும் மருதடி பிள்ளையாரின் தேர்திருவிழாவை 2014 ஆம் ஆண்டு வருடப்பிறப்பன்று காண்பதற்கு ஆவன செய்ய வேண்டும். "சிறு துளி பெரு வெள்ளம்" என்பார்கள். அதேபோல் எம்மால் இயன்ற நிதி உதவியையோ அல்லது கட்டடப் பொருள்களையோ வழங்கி ஆலய புனருத்தாரண வேலைகளை விரைவில் நிறைவு பெறச் செய்வது எமது தர்மீகக் கடமை என நான் கருதுகின்றேன்.

மக்கள் பல கஷ்டங்களை அனுபவித்துள்ளனர் என்பது யாவரும் அறிந்ததே ஆனாலும் ஆண்டவன் எங்கள் வாழ்க்கையிலும் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தி எமது இனம் நிறைவுடன் வாழ வழி செய்வார் என்ற நம்பிக்கையுடன் இன்று வரை நாம் இன்னல்களுக்கு மத்தியிலும் உயிருடன் வாழ்வதற்கு எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றி கூறி மக்களிடம் இயன்ற உதவியை புரியுமாறு கேட்டு அந்த நாளை எல்லோரும் பார்த்து மகிழ அருள்புரிய வேண்டுமென பணிவுடன் மருதடிப் பிள்ளையாரை வணங்குகின்றேன்.

எல்லாப்புகழும் இறைவனுக்கே

பேராசிரியர்
பவானி

## தவிலிசைக் கலையில் தனித்துவப் பெண்மணி

# லயஞானதிலகம் புஸ்பராணி

வயாவிளான் தவமைந்தன்



ஒருவரின் திறமையை வைத்து அவரை மதிப்பிடும் தன்மை என்பது தற்காலத்தில் குறைந்து வருகின்றது என்றே கூறலாம். தமிழ்த்தினப் போட்டிகள் நடைபெற்று வரும் இக்காலத்தில் இவ்வாறான முறைப்பாடுகளுக்குக் குறைவே இல்லை. பாடசாலையின் பெயருக்கும் ஆசிரியரின் புகழுக்கும் அடிபணிந்து விடும் நடுநிலையாளர்கள் மாணவர்களின் திறன்களைக் கருத்தில் கொள்ளாமல் முடிவுகளை மேற்கொள்வது வழமையாகிவிட்டது. அதே போல் மேடையேறிக் கச்சேரி செய்யும் துணிச்சலோ ஆற்றலோ விருப்பமோ அற்ற சிலர், கலைத்துறை நிறுவனங்களில் தலைமைப் பதவிகளில் இருந்து நுண்கலைகளின் வளர்ச்சியைத் தடுத்தும் சிதைத்தும் விடுகின்றனர். தம்மிடம் இருக்கும் உயர் பட்டச் சான்றிதழ்கள் கறிக்கு உதவாத ஏட்டுச் சுரைக் காயைப் போன்றவை என்பதை இவர்கள் கிஞ்சித்தும் உணர்வதில்லை.

ஆனால் தனது குழந்தைப் பருவத்திலே தவிலோடு விளையாடி ஓசை தரும் அந்தக் கருவியை எட்டாவது வயதிலேயே பயின்று கடினமான பயிற்சிகளைப் பெற்றுத் தற்துணிவோடும் நம்பிக்கையோடும் அரங்கேறிச் சாதனை படைத்த தவிலிசைக் கலைஞராகவும் விரல் விட்டு எண்ணக்கூடிய ஈழத்தின் மங்கல இசைப் பெண் ஆற்றுகையாளர்களுள் ஒருவராகவும் நம் நாட்டின் அனைத்து நாதஸ்வர, தவில் கலைஞர்களுடனும் இணைந்து பல ஆண்டுகளாக மங்கல இசை மழை பொழிந்து வருகின்ற சாதனைப் பெண்ணாகவும் கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாகக் கலைப்பணியாற்றி வருபவர் தவிலிசைக் கலையரசி திருமதி புஸ்பராணி திருச்செல்வம்.

மறைந்த மாணிக்கம் - திருமதி சரஸ்வதி தம்பதிகளின் மகளாக 09.12.1949இல் நெல்லியடியில் பிறந்த இவர் நெல்லியடி மத்திய கல்லூரியில் கற்றார். இவரது தந்தையார் நாதஸ்வரக் கலைஞராக இருந்தமையால் இவரும் மங்கல இசைக் கலையில் பெருவிருப்புடன் ஈடுபட்டு வந்தார். சிறுவயதில் மிருதங்கத்தைப் பயின்று வந்த போதும் தவில் மீது கொண்ட அளவற்ற பற்றுதலால் அந்தக் காலத்தில் உலகப் புகழ் பெற்று விளங்கிய தவிலிசைச் சக்கரவர்த்தி இணுவில் என்.ஆர்.சின்னராசாவிடம் தவில் என்னும் தமிழர் கருவியை விடா முயற்சியுடன் கற்று விரைவாக வளர்ச்சி கண்டு பன்னிரண்டாவது வயதிலேயே தனது தந்தையுடன் இணைந்து வாசித்து வந்தார்.

ஜதிக் கோர்வைகளை அழுத்தமாகவும் லய சுத்தமாகவும் இனிமையாகவும் வாசிக்கும் தன்மை கொண்ட இவர் எம்.பி.பாலகிருஷ்ணன், என்.கே.பத்மநாபன், கே.எம்.பஞ்சாபிகேசன், வி.கே.கானமூர்த்தி, வி.கே.பஞ்சமூர்த்தி, ஆர்.கேதீஸ்வரன், எம்.பி.நாகேந்திரம் போன்ற புகழ் பெற்ற அனைத்து நாதஸ்வரக் கலைஞர்களுடனும் என்.ஆர்.சின்னராசா, நாச்சிமார் கோவில் கணேசபிள்ளை, கே.ஆர்.புண்ணியமூர்த்தி, தெ.உதயசங்கர், சி.ரவி, சி.சுதா போன்ற தவில் மேதைகளுடனும் இணைந்து வாசித்த அனுபவம் மிக்க ஒருவராகவும் விளங்கி வருகின்றார்.

நாதஸ்வரக் கலைஞரான தனது சகோதரி இராஜேஸ்வரியுடன் இணைந்து பல ஆண்டுகளாகக் குழுவாகச் செயற்பட்டு வருகின்ற இவர் 1980இல் மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்குச் சென்று இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக அங்கே தங்கியிருந்து எண்ணற்ற சைவாலயங்களிலும் கலைவிழாக்களிலும் பங்கேற்றதுடன் அங்கே கொண்டாடப்பட்ட அன்னையர் தினம் என்னும் சர்வதேச நிகழ்வில் மேலைத்தேசக் கலைஞர்களுடனும் இணைந்து இசை நிகழ்வில் பங்குபற்றியவர் என்பது பாராட்டப்பட வேண்டியதாகும்.

தனது மகன்களான விமலன், பிரசன்னா ஆகியோரை நாதஸ்வர, தவில் கலைஞர்களாக உருவாக்கியிருக்கும் இவர் தனது பிள்ளைகளுடன் இணைந்து ஈழத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் மங்கல இசைக் குழுவாகச் சென்று வருவதுடன் சுவிஸ், பிரான்ஸ், ஜேர்மன் போன்ற புலம் பெயர் நாடுகளுக்கும் பல முறை அழைக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இன்று வரை ஓய்வில்லாத கலைஞராகச் செயற்பட்டு வருகின்ற இவர் வானொலி தொலைக்காட்சி போன்ற ஊடகங்களிலும் ஏராளமான நிகழ்வுகளை வழங்கியவர் என்பதும் போற்றப்பட வேண்டியதாகும்.

குரலிசை, கருவியிசை, பரதநாட்டியம் போன்ற துறைகளில் தற்காலத்தில் பல பெண்கள் ஈடுபட்டு வருவதுடன் நிறுவனங்களிலும் உயர் பதவிகளைப் பெற்று இருப்பினும் இவர்களுள் பலர் வரன்முறையான கலைக் கல்வியில் ஈடுபடாதவர்களாகவும் புதியனவற்றைத் தேடும் இயல்பற்றவர்களாகவும் நாளாந்தப் பயிற்சி அற்றவர்களாகவும் ஆற்றுகைத் துறையின் பால் நாட்டமற்றவர்களாகவும் இருந்து வருகின்றனர். மாதாந்தம் பெறுகின்ற உயர் சம்பளம் இவர்களைச் சுறு சுறுப்பற்றவர்களாக மாற்றி விட்டது என்பதே உண்மையாகும்.

ஆனால் தனது விரல்களின் வலிகளால் ஓசை எழுப்பி இரவு பகல் வித்தியாசம் இன்றிக் கண்விழித்துக் கனதியான கருவியைச் சுமையாக எண்ணாமல் சுகமாகச் சுமந்து உலகெங்கும் தவிலிசை முழங்கிச் சாதனைப் பெண்களுக்கு உதாரணமான கலைச் செல்வியாக எம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கும் இவர் தனது கருத்துக்களை இவ்வாறு கூறுகின்றார்.

எனது அம்மாவும் அப்பாவும் தந்த ஊக்கமும் அரவணைப்பும் வழிநடத்தலுமே என்னைக் கலைத் துறையில் உயர்த்தியது.' குருவின் ஆசீர்வாதமும் இன்று வரை என்னை நெறிப்படுத்தி வருகின்றது. அத்துடன் திருமணமான பின்னர் எனது கணவரின் ஆதரவுக்கும் அன்புக்கும் ஒத்துழைப்புக்கும் குறைவே இருக்கவில்லை. இப்போது எனது பிள்ளைகள் என்னுடன் இணைந்து கலைஞர்களாகச் செயற்படுகின்றமையும் எனக்குப் பெரும் மகிழ்வைத் தருகின்றது.

எனது அக்காவுடன் இணைந்து ஈழத்திலும் வெளிநாடுகளிலும் பல கலைப் பயணங்களை இன்று வரை மேற்கொண்டு வருகின்றேன். மலேசியாவில் எங்கள் நிகழ்வைப் பார்த்த நடிகர் திலகம் சிவாஜி கணேசன் எங்களை வெகுவாகப் பாராட்டினார் என்பதை என்றைக்கும் மறந்து விட முடியாது. பெண்களால் முடியாதது என்று எதுவுமே இல்லை என்பதற்கு நாங்களும் உதாரணமானவர்களாக இருக்கின்றோம் என்பது மட்டற்ற மகிழ்வைத் தந்தாலும் தற்காலத்தில் பெண் பிள்ளைகள் இந்தத் துறையில் ஈடுபடாமல் இருப்பதும் இதனைக் கடினமான தொழில் எனக் கருதுவதும் வேதனைக்குரியதே என்று முத்தாய்ப்பாகக் கூறுகின்றார் தவிலரசி புஸ்பராணி.

### சாதனைக் கலைஞரைச்
### சந்திப்போம் சிந்திப்போம்

**“தனது விரல்களின் வலிகளால் ஓசை எழுப்பி இரவு பகல் வித்தியாசம் இன்றிக் கண்விழித்துக் கனதியான கருவியைச் சுமையாக எண்ணாமல் சுகமாகச் சுமந்து உலகெங்கும் தவிலிசை முழங்கிச் சாதனைப் பெண்களிற்கு உதாரணமான கலைச் செல்வியாக எம்மிடையே வாழ்ந்து கொண்டிருப்பவர் தவிலிசைக் கலையரசி திருமதி புஸ்பராணி திருச்செல்வம்.**

## காலக்குறிப்பின் கல்லறை



மதில்களைத் தாண்டி,
இரும்புக்கதவுகளைத் தாண்டி
மூன்று இனம்தெரியாதோர்
கைகளில் மூன்று துப்பாக்கிகள்
நேரம் காலை 4.50/13.04.2013
(தமிழ் சித்திரைப் புத்தாண்டு முதல் நாள்)
கண நேரத்தில் திகில்கள் பரவின
துப்பாக்கியின் வானம் நோக்கிய ஒரு சூடு
இரும்பறையில் பிரிக்கப்படாத பத்திரிகைகள்
மூன்று சூடுள் உள்ளேயும்
நெருப்பாகின பத்திரிகைக் கட[illegible]
அறை எங்கும் புகை[illegible]
நெருப்பு இரையாய் [illegible]
[illegible]ன்கள் சுருண்டன
[illegible]ருண்டது
அவர்களின் பிரசன்னம் தெரிந்துவிட
ஓடி மறைந்தன
கொடுங்கால்கள்
துப்பாக்கியேந்திய அச்சம்
எரிந்துகொண்டிருந்தது
அட்க்கு முறையின் வேட்டொலி
எதிரொலித்தது திசை முழுவதும்
பின் சிலரின் கண்டனம்
பின் சிலரின் வியப்பு
பின் தப்பியதே வெற்றி
நம்பிக்கைக்குப் பதிலாக
துப்பாக்கி ரவைகளை
விதைக்கும் தேசத்தில்
ஜனநாயகத்தில் நம்பிக்கை எங்கிருந்துவரும்
நண்பர்களே

வவரி.

# வாழ்விருக்கும் வரை வள்ளுவம்

2
தமிழின்பம் பருகுவோம்

வதனரேகா அஜந்தகுமார்
உதவி விரிவுரையாளர்
தமிழ்த்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

ஒருவன் ஈட்டும் பொருளானது அறத்திற்கும் அத்தோடு சார்ந்த இன்பத்திற்கும் மட்டுமே பயன்படவேண்டும். அவ்வாறு அறம் செய்வதற்குரிய இருவகை நிலையுள் இல்லறமே முதனிலை பெறுகின்றது.

அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின்
புறத்தாற்றின்
போய்ப் பெறுவது எவன்

என்ற குறளின் மூலமும் ஆற்றின் ஒழுக்கி அறன் இழுக்கா இல்வாழ்க்கை நோற்பாரின் நோன்மை உடைத்து என்ற குறளின் மூலமும் வள்ளுவர் இதனைத் தெளிவாகவே உணர்த்தி விடுகின்றார். இல்வாழ்க்கையை ஒதுக்குகின்ற சமயவாதிகள் கூறுகின்ற காரணங்கள் எல்லாவற்றையும் அடித்துத் தள்ளியபடி அத்தனை தகுதியோடும் இல்லறவியலைக் கூறுகின்றார்.

அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை என்று கூறும் வள்ளுவர் அன்பும் அறனும் உடைய இல்வாழ்க்கையிலேயே தேவையான நல்ல பண்புகளும் வாழ்க்கையின் எல்லாப் பயன்களும் கிட்டும் என்பதை ஆணித்தரமாகக் கூறுகின்றார்.

இதனால்தான்

''இயல்பனான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை''

என்று வள்ளுவருக்கு இன்னும் இன்னும் உறுதியாகிறது.

### இல்லறவியல் கூறும் வகைமைகள்

வள்ளுவர் இல்லறவியல் என்ற இயல் மூலம் பின்வரும் விடயங்களை அழுத்தமாகக் கூற விழைகின்றார்.

1.குடும்பத்தலைவ னுக்குரிய கடமைகள்
2. மனைவியின் கடமைகள்
3. பிள்ளை வளர்ப்பில் பெற்றோரின் பங்கு
4. பெற்றோர்க்கு பெருமை சேர்த்தலில் பிள்ளையின் பங்கு
5. இவர்கள்தம்மோடு சேர்த்து வைத்திருக்க வேண்டிய நற்பண்புகள்
6.சமூக ஊடாட்டத்திற்கான இவர்களின் தகுதிப்பாடுகள்
7.உலகளாவிய ரீதியில் குடும்பத்திலிருந்து வளர்த்து தன்னை நிறுவுதலுக்கான அடிப்படைகள்

இவற்றை சரி பிழை என்ற முரண் இயக்கத்தின் ஊடாக நேரடியாகவும் மறைமுகமாகவும் அழுத்திச் சொல்கின்றார்.



### வள்ளுவர் காட்டும் குடும்பத்தின் தலைவன்

பழி, பாவம் ஏதுமில்லாத குடும்பத் தலைவன் தென்புலத்தார் தெய்வம், விருந்தினர், சுற்றத்தார் போன்றோருக்குரிய கடமைகளைச் செய்து அன்பு, நடுவுநிலைமை, ஒழுக்கம், பொறை, ஈகை போன்ற நற்பண்புகளையும் பெற்றிருக்க வேண்டும் என்கின்றார் வள்ளுவர். வள்ளுவர் குடும்பத்தை நாட்டின் முன்மாதிரியாகக் காண்கின்றார்.

மன்னனுக்கு இணையாக குடும்பத் தலைவனைத் தெய்வமாகக் காண்கின்றார். தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள் என்று மனைவி மூலம் கணவனைத் தெய்வநிலையில் காட்டுகின்றார்.

**இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை என்றும்
துறந்தார்க்கும் துவ்வாதார்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை என்றும்**

குடும்பத் தலைவனின் பொறுப்பையும் அவனது சீர்மையும் காட்டுகின்றார்.

அதனாலேயே அத்துணையாய் நிற்கும் அவனது பெருமையை

''இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்க்கை வாழ்பவன்
முயல்வாருள் எல்லாம் தலை''

என்று சிறப்பிக்கின்றார். அவ்வாறான வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் என்று முத்தாய்ப்பாகக் கூறுகின்றார்.

இங்கு வள்ளுவர் காட்டும் குடும்பத் தலைவன் தன் குடும்பத்தை மட்டுமன்றி தன்னை நம்பிய சமூகத்தையும் அரவணைக்கும் ஆற்றல் உள்ளவனாகவும் இருக்கின்றான்.

### இல்லாளின் பண்பும் மாண்பும்

அன்பு காரணமாகத் தான் அடைந்த கணவனுக்கு வாழ்க்கைத் துணைவியாய் அவன் சொல்வழி நின்று அவனைத் தெய்வமாகக் கொண்டொழுகும் ஒருத்தியும் அவ்வாறே அவளைத் துணைவியாகக் கொண்டு அவளுக்கு வழித்துணையாய் மற்றவர்களுக்கெல்லாம் உற்றவிடத்து உறுதுணையாய் அறவழி நிற்பான் ஒருவனும் ஒன்றுபட்டு ஒருவரை ஒருவர் விட்டு நீங்காது வாழ வேண்டும் என்பதே திருக்குறளின் துணிபாகும்.

என்று மொ. அ. துரைஅரங்கசாமி அவர்கள் குறிப்பிட்டது இங்கு கவனத்துக்கு உரியது. இல்லானதும் இல்லாளதும் குடும்ப வகிபங்கை இது தெளிவுபடுத்துகின்றது.

'வாழ்க்கைத் துணைநலம்' என்ற அதிகாரம் இல்லாளின் பங்கையும் சிறப்பையும் கூறுகிறது. அதில் வள்ளுவர் கூறும் விடயங்களைப் பின்வருமாறு நிரற்படுத்தலாம்.

1.வருவாய்க்கு ஏற்ற செலவு செய்பவளாக இருக்கவேண்டும்
2.எது இல்லாவிடினும் நல்லாளாக இருந்தாலே போதுமானது.
3.எது இருந்தாலும் நல்லாள் அல்லாளாக இல்லாள் இருந்தால் பயனற்றது.
4. கற்பெனும் திண்மை கொண்டிருக்க வேண்டும்.
5.கணவனைத் தெய்வமாகப் போற்ற வேண்டும்.
6.காக்கும் இயல்புடையவளாய் இருக்க வேண்டும்.
7.கணவனின் வெற்றிக்கும் பெருமிதத்துக்கும் காரணமானவள்

என்று அவளின் வகிபாகம் நீள்கின்றது.

சிலர் வள்ளுவர் பெண்ணுக்கு கற்பை பொன்விலங்காக மாட்டிவிடுகின்றார் என்று பெண்ணிய நோக்கில் பார்ப்பதுண்டு. ஆனால் பிறனில் விழையாமை என்பதில் வள்ளுவர் ஆணை நோக்கியும் கட்டுப்பாடுகளை விதிக்கின்றார்.

பிறன் மனை நோக்காப் பேராண்மையை வள்ளுவர் முதன்மைப்படுத்துகின்றார். இரு கட்சிக்கும் அதனைப் பொதுவில் வைப்போம் என்ற பாரதியின் கருத்துக்கான தோற்றுவாய் வள்ளுவரிடம் ஏற்கனவே இருந்திருக்கின்றது.

கணவனைத் தெய்வமாகப் போற்றுவதை சிலர் ஆணாதிக்கம் என்று கண்டிக்கலாம். ஆனால் வள்ளுவர் அவனின் பீடு நடைக்கான விலாசமாக அவனே உள்ளான் என்பது அவனை அதி முக்கியப்படுத்துவதை மறுக்க முடியாது.

''புகழ் புரிந்து இல் இல்லோர்க்கு இல்லை
இகழ்வார் முன்
ஏறுபோல் பீடு நடை'' என்ற குறள் அதனையே காட்டுகின்றது. அது மட்டுமல்ல

''தற்காத்துத் தற்கொண்டான் பேணித்
தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலான் பெண்'' என்று அவளை தன்னையும் காத்து கணவனையும் காத்து புகழையும் காத்து நிற்கும் அவளின் புகழைச் சொல்லில் விரித்தல் முடியாததே.

### புதல்வரைக் காக்கும் பெற்றோர் பங்கு

குடும்பச்சூழலில் பிள்ளைகளும் அவர்களைப் பராமரித்தலும் சமூக ஒட்டத்தோடு அவர்களை இணைத்தலும் சாதாரண விடயங்கள் அல்ல.

மங்கலம் என்ப மனை மாட்சி மற்று அதன் நனகலம் நன் மக்கட் பேறு என்பதனால் "எழு பிறப்பும் தீயவை தீண்டா வண்ணம் பண்புடை மக்களை வளர்க்க என்கிறார்.

(முற்றும்)






கண்ணீரால் நா நனைத்து
செந்நீரால் தலைகழுவி
அணுகுண்டு போல்
எம் இதயங்கள்
வெடித்துச்
சிதறிய நாட்களில்
கும்பகர்ணர் தாமாகி
குறட்டை விட்டவர்கள்.

உயிருக்குக் கெஞ்சி
மன்றாடி
வேண்டிய போதெல்லாம்
ஏறெடுத்தும் பார்க்காத
ஐ.நா வும்
எந் (த) நாவும் இப்போ
வாயடிச்சு என்ன பயன்?
நாறடிக்கச் செய்த
நலவான்களே,
செய்த பாவத்தைக் கழுவ
இந்த பசுபிக் சமுத்திரம்
போதாது.
எம்மை வைத்து
ஏலம் கூவிக் கூவி
பிழைத்துக் கொள்கிறதில்
உலகம். இங்கே நாம் எம்
ஒருவேளை
வயிற்றுப் பிழைப்புக்காக
வழியற்றுத் தவித்திருக்க
அங்கே இன்றும்...
நல்ல விலை போகிறது
எம் கண்ணீர்!
இதுவா... ஜெனிவா.?

- வேலணையூர் தேனான்

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...

21.04.2013 முதல் 27.04.2013 வரை

தருபவர் - வித்தியா

**மேடம்**- தவறுதலாக, மேற்கொண்ட பழக்கவழக்கங்களை விலக்குவீர்கள். மனதில் சந்தோஷம் அதிகரிக்கும். உடன் பிறந்தவர் உதவிகரமாக நடந்து கொள்வார். எதிரியிடம் விலகி இருப்பது நல்லது. இல்லறத்துணை, உங்களின் எண்ணங்களுக்கு ஏற்ப நடந்து கொள்வார். தொழில், வியாபாரத்தில் சீர்திருத்தம் செய்து, சராசரி பணவரவை தொடர்ந்து பெறுவீர்கள். பணியாளர் கூடுதல் வேலைவாய்ப்பை மனமுவந்து ஏற்றுக்கொள்வர்.

**இடபம்**- உங்கள் மனதில் அன்பும், கருணையும் அதிகரிக்கும். வாழ்வில் அதிக வளம்பெற, அனுகூல சூழ்நிலை உருவாகி நிறைவேறும். சமூகத்தில் அதிக மதிப்பு, மரியாதை பெறுவீர்கள். உங்களுக்கு எதிரித்தனம் செய்தவர், சொந்த சிரமங்களால் இடம்மாறிப் போவர். தொழிலில் உற்பத்தி, விற்பனை செழித்து, லாபம் அதிகரிக்கும். பணியாளர்களுக்கு சலுகைப்பயன், பதவி உயர்வு பெற அனுகூலம் உண்டு. மாணவர்கள் வெளியிடம் சுற்றுவதைக் குறைப்பது நல்லது.

**மிதுனம்**- எந்த செயலையும் விமரிசையாக மேற்கொள்வீர்கள். உரிய பலனை விட, அதிக அளவு நன்மை வந்து சேரும். தாராள பணவரவில், குடும்பத் தேவையை நிறைவேற்றுவீர்கள். எதிர்மறை பலன் அணுகாத சுமுகவாழ்வு அமையும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணி நிறைவேறும். உத்தியோகத்தர் நிர்வாகத்துக்கு சிறந்த ஆலோசனை சொல்வர். பணிபுரியும் பெண்களுக்கு, பதவி உயர்வு பெற அனுகூலம் வளரும்.

**கடகம்**- பணவரவை தகுந்த சேமிப்பாக மாற்றுவீர்கள். வீடு, வாகனத்தில் நம்பகக் குறைவானவர்களுக்கு இடம் கொடுக்க வேண்டாம். புத்திரர், உங்கள் சொல்படி நடந்து கொள்வர். உங்கள் உடல் நலம் பேணுவதில், கூடுதல் கவனம் தேவை. இல்லறத்துணையின் கருத்துக்களை ஏற்று நடப்பதால், குடும்ப ஒற்றுமை சிறக்கும். தொழிலில், வியாபாரத்தில் எளிய நடை முறையால், பணவரவு சீராகும். மாணவர்கள், சாகச விளையாட்டுகளில் ஈடுபடவேண்டாம்.

**சிங்கம்**-உங்களின் சிறு அளவிலான நற்செயலும், உறவினர், நண்பர்களிடம் அதிக நன்மதிப்பைப் பெற்றுத்தரும். இல்லறத்துணை, உங்களின் சிரமங்களைக் குறைக்க தேவையான உதவி வழங்குவர். தொழிலில், உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும். பணியாளர்கள் பொறுப்பான செயலுக்காக நிர்வாகத்திடம் நன்மதிப்புப் பெறுவர். மாணவர்கள் விலைமதிப்புள்ள பொருள்களை கவனமுடன் பயன்படுத்தவும்.

**கன்னி**-மாறுப்பட்ட சூழ்நிலைகளை எதிர்கொள்கிற பொழுது, நிதானமுடன் செயற்படுவது உரிய நன்மை பெற உதவும். அளவுடன் பேசுவதால் நேரம் மிச்சமாகும். புத்திரரின் சேர்க்கை சகவாசம் அறிந்து, நல்வழி நடத்துவது நல்லது. இல்லறத்துணை வழி சார்ந்த உறவினர் கூடுதல் அன்பு, பாசம் கொள்வர். மாணவர்கள் பாராட்டு பெறுவர்.

**துலாம்**- உங்கள் செயல்களில் தேவையான சீர்திருத்தம் மேற்கொள்வது அவசியம். அறிமுகம் இல்லாதவரின், பிரச்சினையில் கருத்து சொல்வதை தவிர்க்க வேண்டும். புத்திரர், உங்களின் சூழ்நிலையை உணர்ந்து, உதவும் சிந்தனையுடன் நடந்து கொள்வர். இல்லறத் துணையிடம் முன்னர் நடந்த செயல்களின் குறையைப் பற்றி பேச வேண்டாம். தொழில், வியாபாரம் தாமத கதியில் இயங்கும். மாணவர்கள், நண்பர்களுடன் நிதானமாகப் பழகுவது நட்பைப் பாதுகாக்கும்.

**விருச்சிகம்**-வாழ்வில் சவால்களை ஏற்று செயற்பட எண்ணம் வளரும். பணிசார்ந்த, புதிய தொழில் நுட்பங்களை அறிந்து கொள்வீர்கள். புத்திரர் ஆன்மிக விடயங்களை அறிவதில் ஆர்வம் கொள்வர். எதிரியின் தீய செயல் பலமிழந்து போகும். இல்லறத் துணையின் கருத்துக்களை ஏற்று நடப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் வியத்தகு வளர்ச்சி, உபரிபணவரவு உண்டு. பணியாளர்களுக்கு அதிக வேலைவாய்ப்பு, சன்மானம் கிடைக்கும். மாணவர்கள், தனித்திறன் வளர்ப்பில் முன்னேற்றம் பெறுவர்.

**தனுசு** - உங்களின் தகுதி, திறமையைப் பயன்படுத்தி, செயல்களில் கூடுதல் வெற்றி பெறுவீர்கள். புகழும், பொருளும் திருப்திகரமான அளவில் சேரும். புத்திரரின் தேவை அறிந்து வாங்கித் தருவீர்கள். கடன், பிணி தொந்தரவு குறையும். இல்லறத்துணை, உங்களின் நல்ல குணங்களை பாராட்டி மகிழ்வீர். பணியாளர்களுக்கு கௌரவமும், சலுகைப்பயனும் கிடைக்கும். மாணவர்கள், சக மாணவரின் உதவியால் புதிய பயிற்சி மேற்கொள்வர்.

**மகரம்**-நண்பராலும், பகைவராலும் நன்மையான பலன்களையே பெறுவீர்கள். நிறைவேற்ற வேண்டிய பணிக்காக அதிகம் உழைப்பீர்கள். பணவரவு திருப்திகரமாகும். சமூகத்தில் பெறுகிற அந்தஸ்து உயரும். உறவினர்களின் வருகையால், வீட்டில் மகிழ்ச்சி வளரும். இல்லறத்துணையின் மனதில், கூடுதல் நம்பிக்கையை உருவாக்குவீர்கள். பணியாளர்கள் பொறுப் புணர்வுடன் பணிபுரிவர். மாணவர்கள், புதியவரை நண்பராக ஏற்பதில் தகுந்த கவனம் தேவை.

**கும்பம்**- உங்களின் பணித்திறன் அதிகரிக்கும். குடும்பத் தேவைகளை நிறைவேற்ற, அதிக அக்கறையுடன் பாடுபடுவீர்கள். எதிரிமிடம் விலகி சிரமத்தைத் தவிர்ப்பீர்கள். இல்லறத் துணையின் அன்பு, பாசம் அதிகம் கிடைத்து, மனதில் மகிழ்ச்சி பெறுவீர்கள். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற, தேவையான அரசு உதவி எளிதில் கிடைக்கும். உத்தியோகத்தர் சிறப்பாக பணிபுரிந்து பாராட்டு, வெகுமதி பெறுவர். மாணவர்கள், எதிர்கால படிப்பு பற்றி, ஆசிரியரிடம் ஆலோசனை பெறுவர்.

**மீனம்**- கடந்த காலத்தில், பகையை குணத்துடன் பேசியவர்கள், இப்பொழுது நெருக்குதல் தன்மை உருவாக்கலாம். எந்தச் செயலிலும், முன்யோசனையுடன் நடந்து கொள்வது மட்டுமே, நன்மை பெற உதவும். வாகன பாதுகாப்பில் கூடுதல் அக்கறை வேண்டும். பணக்கடன் செலுத்த கூடுதல் சிரமத்தை எதிர்கொள்வீர்கள். இல்லறத்துணை, உங்களின் கஷ்டங்களை சரி செய்ய இயன்றளவில் உதவுவார். தொழில், வியாபாரத்தில் இருக்கிற அனுகூலத்தன்மைகளைப் பாதுகாத்துக் கொள்வது நல்லது.


# வரலாறு சொல்லும் பாதை



முள்ளி வாய்க்கால்
எங்கள் தேசத்தின்
தொடக்கப் பாதை
இங்கே தான் ....
கடூரமான எதிரிகளையும்,
கூடி நின்ற
துரோகிகளையும்
கண்டு கொண்டோம்
ஒடுங்கிப் போன முற்றங்களில்
சுயநலங்களைக் கண்டோம்
விறைத்துப் போன
பிணங்களிடையே
எங்களுயிர்களை
ஒழித்துக் கொண்டோம்,
கற்பழிப்புக்களையும்
காலனையும்
எங்கள் கால்களில்
இடற விட்டோம்
நாளைக்கானவர்களை
நடுத்தெருவிலே விட்டு
வீதிக்கு நாங்கள்
விருந்தானோம் அன்றி
விதிக்கும் விருந்தானோம்,
நாதியற்ற என்பதற்கு
நாங்களே பொருளானோம்
எங்கள் சாதிக்காரனே
போதி மரத்தானுக்கு
பூசை செய்ய வாடையிழந்த
வண்ணமும் இழந்தோம்
வரலாறு சொல்லும் பாதை
வடுக்களாயிருக்கக் கண்டோம்
தோற்றுப் போனோம்
என்பதை விட -
அடுத்த தேர்வுக்காக
தேறிக் கொண்டோம்
கற்ற பாடங்கள்
கண்ணீரைப் பிழிந்தாலும்
காணிக்கையாய் விழுந்த
உயிர்களுக்காக
கட்டப்படாத ஆயிரமாயிரம்
கல்லறைகள் மீது
கேட்கும் வரம் .....
சொல்லும் பதில்
முள்ளி வாய்க்கால்
ஒரு சுதந்திர சதுக்கம் ...!

த.பருத்தி : தாசன் -

# குடும்பமா...? வேலையா...?



சங்கவி

குழந்தைகளைப் பார்ப்பேனா? வேலையைப் பார்ப்பேனா? என்று புலம்பும் பெண்கள் பல சமயங்களில் ஏதாவது ஒன்றை இழந்தால்தான் இன்னொன்று கிடைக்கும் என்கின்ற சுய தத்துவம் சொல்லி குழந்தைக்காக வேலைக்குச் செல்லாமல் இருக்கிறார்கள் வேறு சிலர், கணவருக்காக உத்தியோகத்தை உதறுகிறார்கள்.

குடும்பம்- வேலை என்கின்ற இரட்டைக் குதிரைச் சவாரி சவாலான விஷயம்தான். ஆனால் இரண்டாக பிரிந்திருக்கும் தண்டவாளத்தில் ஒரு ரயில் பயணிப்பதைப் போல சில பெண்கள் மட்டும் எப்படி சுலபமாக்கிக் கொள்கிறார்கள்.

தரமான மனிதன் என்பது கற்பனை கதாபாத்திரம். ஆனால் தரமான பெண் என்பது வீட்டுக்கு வீடு நூற்றுக்கு நூறு நிஜம்! வீடு, குடும்பம், குழந்தைகள், சொந்தம், வேலை, சமூகம், சுற்றம், சுயமுன்னேற்றம் என்று அத்தனை விஷயங்களையும் சமாளிப்பதுடன் கிடுகிடு என்று தான் இயங்கும் தளத்தையும் உயர்த்திக் கொண்டே போகும் சாதனைச் 'செல்வி' கள் நம்மைச் சுற்றிலும் இருக்கிறார்கள்.

எங்கெல்லாம் பெண்கள் உயர் அதிகாரிகளாக, பணியாளராக, தொழிலாளர்களாகக் கடமை செய்கிறார்களோ இவர்கள் எல்லோருக்குமே குடும்பம், கணவன், குழந்தைகள் என்று உண்டு. இவர்கள் எல்லோரும் பிறக்கும் போது தங்கத் தொட்டில்களில் தாலாட்டப்பட்டவர்கள் இல்லை. பற்றாக்குறை பட்ஜெட் போட்டு செலவு செய்யும் நடுத்தர குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர்கள்தான் அதிகம். இன்று பெருமையோடு பலரும் பார்க்கும் இடத்துக்கு வந்திருக்கும் இத்தகைய பெண்கள் சந்தித்த கஷ்ட நஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமல்ல! ஆனால், அவைதான் இவர்களை புடம் போட்ட தங்கமாக ஜொலிக்க வைக்கிறது. அதே சமயம் குடும்பச் சூழலால் வேலைக்கு 'குட் பை' சொல்லிவிட்டு ஒதுங்கிய பெண்களும் இங்கே இல்லாமலில்லை! இவர்கள் அத்தனைபேரும் சொல்லும் யதார்த்த உண்மைகளும், அனுபவப் பகிர்வுகளும் நம்மை கட்டிப் போட்டிருக்கும் கண்ணுக்கு தெரியாத கட்டுக்களை நிச்சயம் அவிழ்த்து விடும்.

# உன்னை நீ நம்பு...

தற்காலத்தில் மனிதனின் வாழ்க்கை முறையில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. நாகரிகத்தின் பரிமாண வளர்ச்சியில் இயந்திர வாழ்க்கைக்கு அடிமையாகிவிட்ட மனிதர்களின் மத்தியில் இன்று நம் பெண்கள் பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக ஆணுக்கு நிகராக சமூகத்தில் தலைநிமிர்ந்து விட்டாலும் ஒட்டு மொத்த பெண்களும் முன்னேறிவிட்டார்கள் என்று கூறமுடியாது. இன்றும் நம் மத்தியில் பல பெண்கள் அடிமைகளாக , அநாதரவாக, அபலைகளாக எதற்காக வாழ்கின்றோம் என்றுகூட தெரியாமல் எல்லாமே சூனிய மாகிவிட்ட நிலையில் வாழ்கின்றார்கள்.

தங்கள் மேல் ஒரு துளி கூட நம்பிக்கையற்றவர்களாக, என்னால் முடியாது, அடுத்தவர்கள் என்ன செய்வார்களோ என்ற ஒரு மன நிலையில் தம்மைத் தாமே கீழ் நிலைக்கு இட்டுச் செல்கிறார்கள்.

இன்று தன்னம்பிக்கை இல்லாது மன அழுத்தங்களுடன் தம் வாழ்வை முடித்துக் கொள்பவர்கள்தான் அதிகம். பெண் என்றால் மென்மை என்பார்கள். அதற்காக தன்னிலையை நம்பமுடியாமல் போவது மென்மைக்கு அழகல்ல. நமது மனம் எதை ஆழமாக நம்புகின்றதோ அதைத்தான் மனிதன் சாதிக்கின்றான். மனதில் நம்பிக்கை இல்லாமல் எந்த ஒரு வெற்றியையும் நாம் சாதிக்க முடியாது. இன்று பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை. அடிமை நிலை தனித்து நின்று சாதிப்பது கடினம் என்று கூறிவிட்டு நீங்கள் வீட்டுக்குள் முடங்கிக் கிடந்தால் அடுப்பு ஊதும் பெண்ணுக்கு படிப்பு எதற்கு என்ற வாசகம் உண்மையாகிவிடுமல்லவா? பெண்களே மற்றவரை நம்பி வாழ்வதை விட உங்களை நீங்கள் முதலில் நம்புங்கள். எதற்கும் அஞ்சாதீர்கள். தடைகள், பிரச்சினைகள், வேதனைகள் வந்தாலும் தன்னம்பிக்கையை கைவிடாதீர்கள். ''ஒருவன் எதை நினைக்கின் றானோ அதுவாகவே இருக்கின்றான்'' என்கின்றது பைபிள். ஆம் அது உண்மைதான். பெண்களே! உங்கள் வாழ்க்கையில் தன்னம்பிக் கையுடன் வாழ கற்றுக் கொள்ளுங்கள். வெற்றி உங்கள் வசப்படும்.

**இன்று பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை. அடிமை நிலை தனித்து நின்று சாதிப்பது கடினம் என்று கூறிவிட்டு நீங்கள் வீட்டுக்குள் முடங்கிக் கிடந்தால் அடுப்பு ஊதும் பெண்ணுக்கு படிப்பு எதற்கு என்ற வாசகம் உண்மையாகி விடுமல்லவா?**



# விழிப்புடன் செயற்படுவோம்



திருமதி நீற்றா இராசலிங்கம்
உடுவில்.

பெண்கள் நாட்டின் கண்கள் என்று அன்றைய முன்னோர்கள் கூறி வைத்தார்கள். இன்று அந்தக் கண்களையே குத்தி குதறுகிறார்கள். எங்கு பார்த்தாலும் பாலியல் வல்லுறவு. எல்லா ஊடகங்களிலும் இதுவே பிரதான முக்கிய செய்தியாக வலம் வருகிறது. முற்காலத்தில் இப்படியான இழிவான செயல்கள் எங்கோ பின் தங்கிய ஒருசில இடங்களிலேயே நடந்தது. அவ்வாறான செய்திகள் பத்திரிகையில் வேண்டப்படாத செய்தியாகவே பிரசுரிக்கப்பட்டது.

ஆனால் இன்று தினந் தோறும் ஏதோ இடத்தில் இவ்வாறான துர்ச்சம்பவங்கள் நடந்து கொண்டே இருக்கிறது.

நான்கு வயது குழந்தையிலிருந்து மருத்துவபீட மாணவி வரையும் இந்தக் கொடுமை நடக்கிறது. இதைக் கண்டித்து மகளிர் பேரணி ஆர்ப்பாட்டம் நடத்தி கண்ட பயன்தான் என்ன? எல்லாவற்றிலும் பெண்களே தாக்கப்படுகிறார்கள். பெண்கள் எவ்வளவோ உயர் பதவிகள் வகித்தாலும் ஏதோ ஒருவிதத்தில் நசுக்கப்படுகிறார்கள்.

டில்லி மருத்துவ மாணவியின் கொடுமையான கொலையை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடந்து இரண்டு மாதம் முடியவில்லை. அடுத்து ஒன்பது வயது சிறுமி இரண்டு ஆசிரியர்களாலும், ஒரு காவலாளியினாலும் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டாள். ஆசிரியர்கள் மாணவர்களுக்கு முன்மாதிரியான நடத்தை உடையவர்களாக, நாளைய தலைவர்களை நற்பிரஜைகளை உருவாக்கும் சிற்பிகளாக இருக்க வேண்டும். ''மாதராய் பிறப்பதற்கே நல் மாதவம் செய்திடல் வேண்டும் " என பாரதியார் பாடினார். இன்றோ மகளிர் தலை நிமிர்ந்து நிற்பதற்கே இயலாமல் துவண்டு கிடக்கிறார்கள். இப்படியான கால கட்டத்தில் மகளிர் தினத்தை விழாவாக கருதி செயற்படாமல் மகளிரைப் போற்றி, பாதுகாத்து மதித்து நடப்போமென்று இந்த மகளிர் தினத்தில் உறுதி பூணுவோம்.

''தனி ஒருவருக்கு உணவில்லையெனில் ஜெகத்தினை அழிப்போம்'' என்று பாடிய பார தியார் இன்று இருப்பின் இந்த பேதைகளாகிய குழந்தைகளுக்கு நடக்கும் இந்தக் கொடூரத்தை சகித்திருப்பாரா? வெந்தணலில் போட்டு தகித்திருப்பாரல்லவா. இனி வரும் காலங்களில் இப்படிப்பட்ட கொடூர வன் செயல்கள் நடக்காதவாறு மகளிர் ஆகிய நாம் இவர்களுக்கு நல்ல பாடம் கற்பிப்போம். விழிப்புணர்வோடு செயற்படுவோம்.

# அடிமைகளின் மீட்பர்

## ஆபிரஹாம் லிங்கன்

47

பா.உண்மை

1863-ஆம் வருடம், நவம்பர் 26 ஆம் திகதி போர்க் களத்திலிருந்து வந்த செய்தியில் மிகவும் உற்சாகமாகிவிட்டார் லிங்கன்.


'டென்னஸியிலில் சட்டானூக்கருகே இருக்கும் 'மிஷனரி ரிட்ஜ' என்ற மலை உச்சியில் இருந்த எதிரிப்படைகளைத் தாக்கி நம் படைகள் வெற்றி பெற்று விட்டன'.

போரில் மலை உச்சியில் ஏறி வெற்றிக் கொடி நடுவது என்பது சாதாரண விஷயமல்ல. 13000 அமெரிக்க யூனியன் வீரர்கள் அந்தச் சாதனையைச் செய்திருந்தார்கள். உள்நாட்டுப் போரில் தென்பகுதி கூட்டு மாநிலப் படைகள் தோற்று ஓட ஆரம்பித்திருந்தன.

அதே ஆண்டு நவம்பர் 27-ம் திகதி தளபதி கிராணிட்ம் இருந்து இன்னொரு மகிழ்ச்சியான செய்தி லிங்கனுக்கு வந்து சேர்ந்தது.

'எதிரிகளின் படைகள் முழுமையாக வீழ்த்தப்பட்டன. ரெட்கிளே வரை நமது படைகள் பின் தொடர்ந்து தாக்க இருக்கிறது.' டிசம்பர் 7-ம் திகதி இன்னொரு மகிழ்ச்சியான செய்தி லிங்கனுக்கு வந்து சேர்ந்து.

'எதிரிப் படைகள் வர்ஜீனிவாவை நோக்கிப் பின்வாங்குகின்றன'. கிட்டத்தட்ட உள்நாட்டுப் போரில் வெற்றி பெற்று விடலாம் என்று லிங்கன் நினைத்தக்கொண்டிருக்கும் போது, அடுத்து வந்தது ஜனாதிபதித் தேர்தல். அதுவரை அமெரிக்காவில் ஜனாதிபதி பதவி வகித்த அத்தனை பேருமே (ஆண்டு ஜாக்சனைத் தவிர) ஒரு முறை தான் ஜனாதிபதிப் பதவி வகித்திருந்தார்கள். ஆனால், இரண்டாவது முறையும் தாம் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், நன்றாக இருக்கும் என்று லிங்கன் நினைத்தார். அதற்குக் காரணங்களும் இருந்தன. 'உள்நாட்டுப் போர் முடிவுக்கு வரவேண்டும். அமைதியை நிலை நாட்ட வேண்டும். தென் மாநிலங்களை ஒழுங்குபடுத்தி, அமெரிக்க யூனியனுடன் இணைக்க வேண்டும். எல்லாவற்றுக்கும் மேல் நாட்டின் பொருளாதாரத்தையும் தொழில்வளத்தையும் மேம்படுத்த வேண்டியிருக்கிறது.'



ஆனால் சாதாரண மக்களுக்கு லிங்கன் மேல் இருந்த நம்பிக்கை அரசில்வாதிகளுக்கு இல்லை. லிங்கனிடம் நிதித்துறை செயலாளராக இருந்த சேஸுக்கு ஓர் ஆசை இருந்தது, ஜனாதிபதியாக வேண்டும் என்ற ஆசை. ஜனநாயகக்கட்சி சார்பாக தேர்தலில் நின்று எப்படியாவது ஜனாதி பதி நாற்காலியைப் பிடித்து விட வேண்டும் என்று ஆசைப்பட்டார். தற்போதைய நாட்டுச் சூழலில் ஜனாதிபதியாகப் பதவி வகிப்பதற்குத் தனக்குத் தான் தகுதி அதிகம் என்று நினைத்தார் சேஸ். அதற்காக அவருக்குச் சிலர் உதவி செய்யக்கூட முன்வந்தார்கள். கான்சாஸ் மாநில செனட்டராக இருந்த பொமராஜ் அட்டகாசமாக ஒரு திட்டம் போட்டார்.

ஒரு ரகசிய சுற்றறிக்கையை எழுதித் தனக்குத் தெரிந்தவர்களுக்கெல் லாம் அனுப்பி வைத்தார். 'ஐயா! உள்நாட்டுப் போர் நடந்துவரும் இந்தச் சூழலில், சேஸ்தான் ஜனாதிபதியாக இருக்கப் பொருத்தமானவர், தகுதியானவர். அவருக்கே ஆதரவு கொடுங்கள்...' இப்படி. சேஸின் வெற்றிக்குப் பாடுபட ஓர் அமைப்புக் கூட ஏற்படுத்தப்பட்டது. அந்த அமைப்புக்கு எல்லா மாநிலங்களிலும் கிளைகள் வேறு. இந்த விஷயம் லிங்கனின் காதுக்கு போனது. லிங்கன் அதைக் கண்டு கொள்ளாமல் இருந்தார். அவரைப் பொறுத்தவரை, சேஸ் அவர் பார்க்கிற நிதித்துறை வேலையை ஒழுங்காகச் செய்தால் போதும்.

கூடிய விரைவில் அந்த ரகசிய சுற்றறிக்கைக் கடிதம் லிங்கனுக்கு மட்டு மல்லாமல் உலகத்துக்கே தெரிந்த விஷயமாக ஆகிவிட்டது. 'நேஷனல் இண்ட்டலிஜென்சர்' என்ற பத்திரிகை ஸ்பெஷலாக, கட்டம்கட்டி அந்த முழுக் (ரகசிய) கடிதத்தையும் வெளியிட்டது. நொந்து போனார் சேஸ். லிங்கனிடம் வந்தார். ' எனக்கும் இந்தக் கடிதத்துக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்று தத்துப்பித்தென்று உளறிக் கொட்டினார் . சடாரென்று ஒரு கடிதத்தை அடுத்து நீட்டினார். அது அவருடைய ராஜினாமாக் கடிதம். லிங்கன் உடனே அந்த ராஜினாம்ாவை எற்கீவில்லை.

'இப்போது இதற்கு எந்த அவசியமும் இல்லை' என்று சொல்லி விட்டார். ஆனால் தேர்தலில், சேஸ் தன் சொந்த மாநிலத்திலேயே மக்களின் ஆதரவை இழந்தார். அது ஒரு தனிக்கதை.

குடியரசுக்கட்சியின் தேசியமாநாடு பால்டிமூரில் கூடியது. இந்த முறை லிங்கன் மறுபடியும் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராகத் தேர்ந்தெடுக்கப்படுவாரா, மாட்டாரா என்ற கேள்வி எல்லோரையும் பிடித்திருந்தது. இவ்வளவு சிக்கலான சூழ்நிலையில் அதுவரை எந்த ஜனாதிபதியும் மாட்டிக்கொண்டதில்லை. இதில் இரண்டாவது முறையும் அவர் வேட்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், அது உலக அதிசயம்தான். ஆனால் அந்த அதிசயம் நடக்கத்தான் செய்தது. லிங்கனையே ஜனாதிபதி வேட்பாளராக, அதுவும் ஒரு மனதாகத் தேர்ந்தெடுத்து அந்த மாநாடு.

அந்த மாநாட்டுக்குப் பிறகு, சேஸ் தன் நிதிச் செயலர் பதவியைத் ராஜினாமா செய்தார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் தம்மை தேர்ந்தெடுப்பார்கள் என்று லிங்கன் முழுமையாக நம்பவில்லை. சில சமயங்களில் தனியாக அமர்ந்து வரப்போகும் தோல்விக்குத் தன்னைத் தானே தயார்படுத்திக் கொள்வார். ஒரு பேப்பரை எடுப்பார். இப்படி எழுதுவார்: 'ஒரு வேளை நான் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படாமல் போகலாம். அப்படி ஒரு சூழ்நிலையில் புதிய ஜனாதிபதித் தேர்தலுக்கும் பதவியேற்புக்கும் இடைப்பட்ட காலத்தில், நாட்டைக் காப்பாற்றப் புதிய தலைவருடன் ஒத்துழைக்க வேண்டியது என் கடமை.'

அதே போல், குடியரசுக் கட்சியின் தேசியக்குழுவின் செயற்குழுத்திட் டத்தில் ரேமாண்ட் என்பவர் போர் நிறுத்தத் திட்டம் ஒன்றை அறிவித்தார்.

அவரது திட்டப்படி, 'அமைதிக் குழு ஒன்று தென்மாநிலத்தில் இருக்கும் ரிச்மாண்ட் நகருக்குச் செல்ல வேண்டும். தென்மாநிலக் கூட்டுப் படைகளின் ஜனாதிபதி ஜெஃபர்சன் டேவிஸை சந்தித்துப் போரை நிறுத்த உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும். உடன்படிக்கைப்படி, தென் மாநிலங்களின் அரசு, அமெரிக்க யூனியன் அரசுக்கு விசுவாசமாக இருக்க வேண்டும். மற்ற விவகாரங்களை இரண்டு அரசாங்கங்களும் பேசித் தீர்த்துக் கொள்ளலாம்.'

எப்படி இருக்கிறது கதை? இத்தனைக் காலம் நடந்த போருக்கும், உயிரிழப்புகளுக்கும் என்ன பதில் சொன்னார்: 'ரோமாண்டின் திட்டத்தைச் செயல்படுத்துவது என்பது தென்பகுதிப் படைகளிடம் தோற்றுப் போவதைவிட அசிங்கமானது. போரின் முடிவு என்ன என்று தெரிவதற்கு முன்னாலேயே, நாம் சரணடைவதற்குச் சமம்.'

குடியரசுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் லிங்கன். ஜனநாயகக் கட்சி யின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்று முடிவு செய்ய வேண்டுமல்லவா? 1860-ல் லிங்கனை ஜனாதிபதி வேட்பாளராகத் தேர்ந்தெடுத்த அதே சிகாகோ மண்டபத்தில் ஜனநாயகக் கட்சி மாநாடு கூடியது. பொடொமெக் ராணுவப்பிரிவுக்குத் தளபதியாக இருந்த மெக்கல்லன் (அதே அடாவடி ஆசாமிதான்) ஜனாதிபதி வேட்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்த மாநாடுகள் முடிந்த அதே சமயத்தில், போர் முனைகளில் இருந்து உற்சாகமான தகவல்கள் வந்துகொண்டிருந்தன. தளபதி ஷெர்மான் அட்லாண்டாவைக் கைப்பற்றினார். அப்படியே படைகளை துவம்சம் செய்தார்.

போர்முனையில் கிடைத்த வெற்றிகளால், லிங்கனின் எதிரிகள் கூட நண்பர் களாக ஆனார்கள், அதே சமயம், லிங்கனின் அவதூறுப் பிரசாரங்களும் ஒரு பக்கம் நடந்து கொண்டுதான் இருந்தன. 'எல்லாப் படை வீரர்களும் தங்களுடைய ஊதியத் தைப் பணமாக வாங்கும் போது, லிங்கனுக்கு எதிராக மட்டும் தங்கமாக வாங்குகிறாரா? ஏன் எதற்கு?' இப்படி ஓர் அவதூறுப் பிரசாரத்தைச் செய்தன ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த பத்திரிகைகள். இந்த அவதூறு, லிங்கனின் காதிலும் விழுந்தது.

ஒரு நாள் லிங்கன் நிதித்துறைக்குப் போனார். அவருடைய கையில் ஒரு பெட்டி. அப்போது நிதித்துறை செயலாளராக இருந்த சேஸின் மேடையில், அந்தப் பெட்டியைக் கவிழ்த்தார். அதில் இருந்தவைதான் லிங்கனின் சொத்துக்கள். கொஞ்சம் பணத்தாள்கள், கொஞ்சம் தங்கம், ஊதியப்பத்திரம். அவ்வளவுதான் அந்தப் பெட்டியில் இருந்தன. எல்லாவற்றையும் [illegible]னால் அவற்றின் மதிப்பு, 55,398 டொலர்களும் 37 சென்ட்டுகளும் இருந்தன. ஜனாதிபதியாக அவர் பதவி வகித்த வருடங்களில் அவருடைய சொத்து மதிப்பே அவ்வளவுதான்.

சேஸ் யோசனையோடு லிங்கனையே பார்த்துக்கொண்டிருந்தார்.

'என்ன பார்க்கிறீர்கள்? இது தான் என்னுடைய கையிருப்பு, சொத்து. இதை அப்படியே அரசுக் கடன் பத்திரத்தில் முதலீடு செய்யுங்கள் என்று சொல்லிவிட்டு லிங்கன் போய்விட்டார்.

(மீட்பர் வருவார்)

உதயனின் "சூரியகாந்தியில்" உங்களது படைப்புகளும் பிரசுரமாக வேண்டுமா? சிறுகதை, கவிதை, கட்டுரை , விமர்சனம், துணுக்குகள் என்பவற்றை உடனே எழுதி அனுப்புங்கள். தரமானவை பிரசுரமாகும்.
உங்கள் படைப்புகளை அனுப்ப வேண்டிய முகவரி;
சூரியகாந்தி - உதயன் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### குழந்தை வளர்ப்புக்கான 10 ஆலோசனைகள்

**உங்கள் அன்பை வெளிப்படுத்துங்கள் :-** பெற்றோர்களில் குறிப்பாகத் தந்தைகளுக்குத் தங்கள் குழந்தைகளைக் கட்டி அணைத்து முத்தமிடுவது என்பது சிரமமானதாக இருக்கும். ஆனால் குழந்தைகளுக்குத் தாய், தந்தை என இருவரது அரவணைப்பும் வேண்டும். அத்துடன் பெற்றோர் இருவரும் அரவணைப்புடன் இருக்க வேண்டுமென்பதையும் குழந்தைகள் விரும்புவார்கள்.

**எல்லைகளை வகுத்தல் :-** குழந்தைகளுக்கு எது ஏற்றுக் கொள்ளப்படும், எது மறுக்கப்படும் என்பது தெரிந்திருக்க வேண்டும். நீங்கள் குழந்தைகளுக்குச் சுதந்திரம் தருபவராக இருந்தாலும், ஒரு எல்லைக்கோடு வகுத்துக் கொள்வதுதான் சிறந்தது.'

**கவனித்தல் :-** குழந்தைகளுக்கும் பல விதமான உணர்வுகளும், பல விதமான தேவைகளும் இருக்கும். குழந்தைகள் தங்களின் உணர்வுகளை, தேவைகளை பல கேள்விகளின் மூலம் வெளிப்படுத்துவார்கள். அதைக் காதுகொடுத்துக் கேளுங்கள்.

**அதிக நேரத் தூக்கம் :-** உடற்பயிற்சி நல்லது, குறிப்பாக இளையவர்களுக்கு. அதனால் உங்கள் குழந்தைகளைத் தொடர்ந்து பூங்காவுக்கோ, விளையாட்டு மைதானத்துக்கோ அழைத்துச் சென்று நன்றாக விளையாட வையுங்கள்.

**மென்மையாக நடந்துகொள்ளுங்கள் :-** குழந்தைகள் அதிகச் சேட்டைகள் செய்யும் போது கோபப்பட்டுக் கொள்ளாதீர்கள். நீங்கள் கோபப்பட்டுக் கத்துவதனால், என்ன தவறு செய்தார்கள் என்பது அவர்களுக்குப் புரியாமல் போய்விடும். அதனால் அன்புடனும், நிதானத்துடனும் அவர்களின் குறைகளைச் சுட்டிக்காட்டுங்கள்.

**குழந்தைகளை அடித்தல் :-** உங்களுக்குத் தற்போது 40 வயது நெருங்கியதால், குறும்பு செய்த போது ஆசிரியரிடமிருந்தோ, பெற்றோர்களிடமோ அடி வாங்கிய அனுபவம் இருக்கும். ஆனால் அடிப்பது என்பது அத்தனை நல்லதல்ல என்பது உளவியலாளர்களின் கருத்து. அதனால் அன்பாகச் சொல்லித் தான் திருத்த வேண்டும்.

**குறை கூறாதீர்கள் :-** குழந்தைகளிடையே தன்னைப் பற்றிய எண்ணம் என்பது மென்மையானதாக இருக்கும். அது எளிதில் உடைந்து விடுவதாகவும் இருக்கும். அதனால் குழந்தைகளிடம் குற்றம் குறைகளைச் சொல்லிக் கடுமையாகப் பேசாதீர்கள்.

**தனிமை :-** குழந்தைகள் வளர வளர அவர்களுக்கென்று தனிமை தேவை. அவர்கள் அறையில் தேவையற்ற பொருள் எதையாவது கண்டால் அதற்காகக் கவலைப்பட வேண்டியதில்லை. மேலும், அவர்கள் அறையில் என்ன வைத்திருக்கிறார்கள் என நீங்கள் தேடிப் பார்ப்பதும் தேவையற்றது.

**மன்னிப்புக் கேட்டல் :-** நீங்கள் ஏதாவது தவறு செய்தால், உடனே மன்னிப்புக் கேட்டு விடுங்கள். உலகத்தில் தவறு செய்யாதவர் என்று யாரும் இல்லை. அதுபோன்றே பெற்றோர்கள் என்றால் தவறு செய்யாதவர் என்று அர்த்தம் இல்லை.

**உங்கள் பெற்றோர்களையும் ஈடுபடுத்துங்கள் :-** உங்கள் பெற்றோர்கள் உங்களை வளர்த்து ஆளாக்கியவர்கள் அல்லவா். அவர்களை உங்கள் குழந்தைகளுடன் நன்கு பழக விடுங்கள். தாத்தா, பாட்டியுடன் அவர்களுக்கு வலுவான உறவு ஏற்படட்டும்.

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுடன் போதுமான அளவு நேரத்தைச் செலவிட வேண்டும். நேரம் செலவிடுவதில் அளவைவிட தரம்தான் முக்கியம். நரமான நேரம் என்பதை வரையறுப்பது, உங்கள் சொந்தப் பார்வையிலும், மதிப்பிலும் தான் இருக்கிறது. தரம் என்றதும் அது கல்வி சார்ந்ததாகத்தான் இருக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. உங்கள் வாழ்க்கையில் உங்கள் குழந்தைகளுக்கான போதுமான நேரத்தை ஒதுக்குதல் என்பதுதான் தரமான நேரமாகும்.

ராகவன் அல்பி

47




# வெற்றி பெறலாம் வாங்க!

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுடன் போதுமான அளவு நேரத்தைச் செலவிட வேண்டும். நேரம் செலவிடுவதில் அளவைவிட தரம்தான் முக்கியம். தரமான நேரம் என்பதை வரையறுப்பது, உங்கள் சொந்தப் பார்வையிலும், மதிப்பிலும் தான் இருக்கிறது. தரம் என்றதும் அது கல்வி சார்ந்ததாகத்தான் இருக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. உங்கள் வாழ்க்கையில் உங்கள் குழந்தைகளுக்கான போதுமான நேரத்தை ஒதுக்குதல் என்பதுதான் தரமான நேரமாகும்.

## முடிந்த கவிதையின் மீது மூட்டிய தீ

கவிதையின் முடிவில்
கண்களின் அயர்வு தொடங்க
ஆழ்ந்து போகிறது இரவு....

ஏதோ உணர்வில்
திடுக்கிட்டு கண்விழித்தேன்

கடதாசி எரிந்த
புகை மணத்தில்
மூச்சு அடைபடுகிறது

பதிக்க இருந்த தாள்களும்
பதிப்பிக்கும் இயந்திரமும்
பற்றி எரிகின்றன
என்
தாய்நிலக் கவிதையோடு...

முடிந்த கவிதையின் மீது
மூட்டிய தீ
எங்கும் பரவ...


எழுதி முடித்து
ஓய்வெடுத்த பேனா
மீண்டும் எழுகிறது

உமுகிற பேனாக்கள் மீதான நெருப்பில்
உயர்கிறது
இன்னும் இன்னுமாய்
என்நிலத்து விளைச்சல்

கரித்துகளாகி காற்றில் கலக்க
இது ஒன்றும்
கடலை சுத்தும் கடதாசியல்ல

### தாய் நிலம்

13




-சடா கோபன்


சாம்பல் கொட்டி
பயிர் வளர்க்கும் பக்குவம்
என் நிலத்தின் தனித்துவம்

மனங்களால் இணைந்து
விடியலை அழைப்போம்

புற்கள் முளைத்து
பூக்கும் பூக்களில்
புதிய மகரந்தமணிகள்
எழுதுகருவிகள் உயிர்க்கும்



**ரா.சங்கீர்த்தனா,**
தரம்-5,
இ.றோ.க.மா.வி.




**கோ.சர்மிகா,** பாலர் பிரிவு
யா/ திருஞானசம்பந்தர் வித்.




**கு.சஸ்விந்,** தரம்-2சி,
யா/ புனித ஜோண்
பொஸ்கோ வித்தி.



**சி.டிசாந்தனி,** தரம்-9எ,
கனகரத்தினம் ம.வி.



**கோ.துலக்சினி,** தரம்-4,
யா/ திருஞானசம்பந்தர்
வித்.



**ச.ஆர்த்திகா,** தரம்-9டி,
வேம்படி மகளிர் உயர்தர
பாடசாலை

## விடை தெரியுமா? 207

### உங்களுக்கும் பரிசுகள்

1. இறுவட்டுக்கள் தயாரிக்க பயன்படும் உலோகம் எது?
2. தேன் உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் நாடு எது?
3. உலகில் மிகக் குறைந்த வார்த்தைகளைக் கொண்ட மொழி?
4. சீறாப்புராணம் எனும் நூலை எழுதியவர் யார்?
5. பாம்பை செல்லப் பிராணியாக வளர்க்கும் நாடு?

சிறுவர் கதிருக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்பும் சிறார்கள் "சிறுவர்கதிர்", உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**விடை தெரியுமா?**

தெரிந்தால் 27.04.2013 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

**விடைகள் 205**

1. தோல்
2. அமெரிக்கா
3. மட்டக்குளியா
4. தென்னாபிரிக்கா
5. வோஷிங்டன்

**வெற்றி பெற்றோர் விவரம் (205)**

* நேச. வித்யாசாகர், கிளி/ மத்திய மகாவித்தியாலம்
* ச.அலக்ஷன், கிளி/ அக்கராயன் மகா வித்தியாலயம்
* சி.விதுஷா, தரம்-10, யா/ கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி.
* ச.திவாஸ்கர், தரம்10ஏ, யா/ முத்துத் தம்பி மகா வித்தியாலயம்.



# ஆசைப்படாதே

(சென்றவாரத் தொடர்ச்சி)

அவன் உடனே நான்கு பெரிய மனிதர்களைத் தன் தம்பியிடம் அனுப்பி "நாட்டை ஒப்படைக்கப் போகிறாயா அல்லது போருக்குத் தயாராகப் போகிறாயா?" என்று தூது விடுத்தான். தம்பியோ "அண்ணா! உன்னோடு போரிட நான் தயாராக இல்லை. போர் எதற்கு? இந்த நாடு உன்னுடையதே. நீதானே எனக்குக் கொடுத்தாய்? இப்போது நீயே திரும்பப் பெற்றுக் கொள்" எனப் பதில் சொல்லி அனுப்பினான்.

சில நாள்களில் மூத்த ராஜகுமாரன் காசி மன்னனானான். அவனது தம்பி சேனாதிபதியாக இருந்தான். அப்போதும் நாடு பிடிக்கும் ஆசை அண்ணனை விடவில்லை. ஒவ்வொரு நாடாக வென்று தன் சாம்ராஜ்யத்தில் அவன் சேர்த்துக் கொண்டே போனான்.

தேவேந்திரனுக்கு இந்த விஷயம் தெரியவே அவன் மூத்த ராஜகுமாரனுக்கு புத்தி புகட்ட விரும்பி ஒரு வாலிபனின் உருவில் அதனது தர்பாருக்கு வந்தான். அவனிடம் தான் இரகசியமாக ஒரு விஷயம் கூற விரும்புவதாகச் சொல்லவே ராஜகுமாரனும் அந்த வாலிபனைத் தன் அந்தப்புரத்துள் அழைத்துச் சென்றான்.

அந்த வாலிபன் மூத்த ராஜகுமாரனிடம் "எனக்குத் தெரிந்து மூன்று நகரங்கள் உள்ளன. அவை பலம் பொருந்தியவை. அவற்றை வென்றால் நீங்கள் மாபெரும் சக்கரவர்த்தி என்று பெயர் பெறலாம்.

நீங்கள் சிரமப்பட வேண்டாம். அவற்றை நானே வென்று உமக்குக் கொடுக்கிறேன்" என்றான். "ஆகா" என அவன் மகிழ்ந்து போனபோது வாலிபனாக வந்த தேவேந்திரன் திடீரென மறைந்து விட்டான்.

மூத்த ராஜகுமாரன் அந்த வாலிபனை நாடெங்கும் தேடிக் கண்டு பிடித்துத் தன் முன் கொண்டு வருமாறு கட்டளையிட்டான். ஆனால் அவன் கிடைக்கவே இல்லை. இந்தக் கவலையில் அவன் நோயுற்றுப் படுக்கையில் கிடந்தான். மூன்று நகரங்களை வென்று அடைய முடியவில்லையே என்ற ஏக்கமே அவன் மனதில் இருந்தது.

இச்சமயத்தில் எல்லா சாஸ்திரங்களையும் கற்று விட்டு போதிசத்வர் தட்சசீலத்திலிருந்து காசிக்கு வந்தார். அவர் மன்னன் நோயுற்றுக் கிடப்பது அறிந்து அதை தான் போக்குவதாகத் தகவல் கூறி அனுப்பினார்.

மூத்த ராஜகுமாரனும் அவரை வரவழைத்தான். அப்போது அவர் "உன் நோய் என்ன?" என்று கேட்டார் அவனும் தான் மூன்று நகரங்கள் பற்றி அறிந்ததையும் அதைப் பிடிக்க முடியாது தவிப்பதையும் கூறினான்.

போதிசத்வரும் "இந்த மனோவேதனையை உன்னால் அடக்கிக் கொள்ள முடியுமா?" என்று கேட்டார். அவனும் முடியாது எனவே போதிசத்வரும் "உலகமே இப்படித்தான். கண்ணில் படுவதெல்லாம் கிடைத்து விடாது. முடிவில் மானிட உடல் அழிந்து போய் விடும். அதனால் இந்த மூன்று நகரங்களை மட்டுமல்ல, மேலும் மேலும் நாடுகளைப் பிடிக்க வேண்டும் என்ற ஆசையை விட்டுவிடு. ஆசையை அடக்கினாலே சுகப்படலாம். இல்லாவிட்டால் மன வேதனைப்பட்டு இம்மாதிரி நோயுற்று உடல் நலிந்து முடிவில் அழிவுதான் ஏற்படும்" என நல்லுரை கூறினார்.

போதிசத்வரின் உபதேசம் அவன் மனத்தில் பதிந்தது. அவன் மனம் திருந்தி வாழ்நாள் முழுவதும் போதிசத்வரின் யோசனைகளைக் கேட்டு ஆட்சி புரிந்து வந்தான்.



# சிறுவர்கள் எதிர்காலத்தை உருவாக்கும் சிற்பிகள்

எனது முகம் எனக்கே தெரியவில்லை
எங்கே தொலைந்தது அதுவும் தெரியவில்லை
எனக்கென சொந்தம் கொள்ள
இப் பாரினிலே எவருமில்லை
தனிமையில் வாடும் பிஞ்சு நான்

ஆதரவோடு அரவணைத்து அள்ளி எடுக்க
ஐயிரண்டு மாதம் சுமந்த அன்னையில்லை
அன்பு தந்து ஆறுதல் சொல்ல
தோளில் சுமந்த தந்தையில்லை
நித்தமும் சண்டையிட்டு விளையாட
கூடிப் பிறந்த சொந்தம் இல்லை

சொந்தம் என்று சொல்லியழைத்துச் செல்ல
உறவினர்களும் இங்கில்லை
தினமும் பார்க்கின்றேன் ஆயிரம் முகங்கள்
தெரியாமலும் என் உறவுகள் இருப்பார்களா?
இருந்தாலும் அவர்களைத் தெரியவில்லை
இல்லை அவர்களுக்குத் தான் என்னைத்
தெரியவில்லையா?

இக் கேள்விக்கு பதில் கிடைக்காமல்
இன்னும் வேதனையால் துடிக்கின்றேன்
வெண்.புறாக்கள் போல் வெள்ளை ஆடையில்
பள்ளி செல்லும் செல்வச் சிறுவர்களோடு
நானும் பள்ளி செல்ல ஆசைப்படுகின்றேன்
ஆனால் என்னை அழைத்துப் போக
ஆதரவாக யாரும் இருக்கவில்லையே

வீதியோரத்திலும் வீட்டின் மொட்டை மாடியிலும்
ஓடி விளையாடும் பிள்ளைகளைப் போல்
ஒன்றாக விளையாடத் துடிக்கின்றேன்
ஆனால் அநாதை என முத்திரை குத்தி
அனுப்பி விட்டதே தெருவில் என்னை

போர் இன்னும் ஓயவில்லை நாட்டினில்
உண்ண உணவுமில்லை உறங்க வீடில்லை
அநியாயமாய் அழிவை எதிர்கொள்ளும்
அழகான இளம் மொட்டுக்களே

நாங்கள் இல்லையேல்
நாளை இவ்வுலகம் இல்லை
ஏனெனில் எதிர்காலம்
எங்களின் கைகளில்

இ.புஸ்பராஜ்

# காளான்



காளான் வெண்மை நிறத்தில் இருப்பதற்கான காரணம் அதில் க்ளோரோஃபில் இல்லாமையால் தான் மரக் கட்டையில் வளரும் காளான்கள் தொட்டாலே உடையக் கூடியன. தண்டுகள் இல்லாத காளானே விஷத் தன்மை உடையது.

சி.சிந்து, சுதுமலை.

# முக்கோண உறவு


## படைப்பின் விடுப்பு



ஒவ்வொரு தனியனின் மனங்களுக்குள்ளும் ஒரே சமயத்தில் சமூக அமைப்புடன் இயைந்து போகும் விருப்பும் அதன் மீதான பயம்/ வெறுப்பும் இருந்து கொண்டிருக்கும். இது தனியனின் இருத்தலின் சுதந்திரம் உருவாக்கும் மனநிலை.

■ ந.மயூரரூபன்

ஒரு தனியன் தனது சமூக அமைப்பின் பிரதிநிதியாகவே எப்போதும் இருக்கிறான். சமூக அமைப்புகள் தங்களுக்கான தனியன்களையே உற்பத்தி செய்கின்றன. சமூக நிறுவனங்கள் அவற்றின் அமைப்பு மற்றும் உரையாடல்களுக்கூடாக விருப்பையும் அதிகாரத்தையும் தனியனுக்கானதாக வரைந்து அவனின் இருத்தலின் சுதந்திரத்தை உருவாக்கிக்கொடுக்கின்றன.




இலக்கியப் படைப்பு, தனியனின் இருத்தல் தொடர்பான சுதந்திரத்தின் மீதான கேள்விகளிலிருந்து உருவாகும் முற்பிறப்பு வினையானது ஒரு தனியனின் சுதந்திர வெளிகளைக் கட்டுப்படுத்தவல்ல அதிகாரங்களின் ரோந்தும் விருப்புக்களின் பாதைத்திறப்பும் அவனது சமூக அமைப்பின் கூறுகளின் மீதே நிகழ்ந்துகொண்டிருக்கின்றது.

ஒரு தனியன் தனது இருத்தலின் சுதந்திரம் இதுதான் என நம்புகிறான். நம்புகின்ற நிலைத்தகவல்களேயே அவனது சமூகம் அவனுக்குத் தருகிறது. இலக்கியப் படைப்புக்களின் எல்லையை, அதன் கருத்து எல்லையைத் தீர்மானித்தும் படைப்பின் உள்ளடக்க வெளிப்பாட்டு உருவாக்கச் சட்டத்தை உருவாக்குவதும் இதுதான்.

ஒரு தனியனின் இருத்தலின் சுதந்திரம் என்பது பின்வரும் இரு அடிப்படைகளில் அருட்டப்படும் போது இலக்கியப்படைப்புக்களாக-எழுத்துகளாக வருவதற்கான சாத்தியங்களைக் கொண்டிருக்கின்றன.

1.சமூக அடையாளம்

2.அடையாளப் பிரச்சினையற்ற மன நிகழ்வு

இங்கு படைப்புக்கள் எப்போதும் ஏதோ ஓர் அடையாளப்படுத்தலின் இழைகளுடன் பின்னப்பட்டுள்ளது. சமூக அடையாளம் என்பது தனக்கான பல்வகை முகந்தலைக் கொண்டது. அவை காட்டும் கருத்தியல் அதிகாரத் தளங்கள் அவற்றின் எல்லைகளுடன் புலனாகக் கூடியவை.

மொழி
சாதி
தேசம்
இனம்
தேசியம்
பிராந்தியம்
மதம்
தன்குழு
எதிர்ப்பு
புகழ்

சமூக அடுக்குகள் எங்கும் இவற்றின் அதிகாரமும் விடுப்பும் ஆழமாகப் படிந்துபோயுள்ளன. எடுத்துக்காட்டாக டானியல், தெணியான் ஆகியோரது எழுத்துக்கள் சாதி பற்றிய கருத்து நிலை உரையாடல்கள் தருகிற அதிகாரத்தின் இருமுனைப் பயணங்களையும் விருப்பு சார் மன இலக்கியங்களையும் பேசுவன. அவர்களின் அவர்களது எழுத்துக்கள் பயணிப்பவை. சமூகத்தில் 'புகழ்' என்பது போதை தருகிற உரையாடலை நிகழ்த்துகிறது. அது கட்டமைக்கும் பெரு விருப்பில் தமது இருப்பின் சுதந்திரத்தை உறுதிப்படுத்த பலர் எழுதுகின்றனர்.


இதுபோலவே ஏனைய சமூக அடையாளங்களும் அமையும்.

இவ்வாறான சமூக அடையாள அடுக்குகளின் எல்லைக்குள் இயங்கும் எழுத்துக்கள், தமக்கான சுயகருத்தியலை பெருங்கதையாடல்களின் கருத்தியலுக்குள் பொருத்தி( மிகக் கவனத்துடனும் நேர்த்தியுடனும் முனைந்து பொருந்துதல்) வாசிப்பவர்களையும் சமூக நிறுவனங்களின் அதிகாரம் மிக்க கண்காணிப்பு எல்லைக்குள் இருப்பவை;

அடையாளமற்ற மனநிகழ்வுகள் கோரும் படைப்புக்கள்/ எழுத்துக்கள் தனியனின் சுயத்தை - அவனுக்கான கருத்தியல் தளத்தைப் பேசுவன. இங்கு அடையாளமற்ற என்பது - சமூக அடையாளங்களை, அதன் உரையாடல்களை கவனப்படுத்தாதவை. எனினும் புறநிலையில் , மனநிகழ்வுகள் உந்தித் தள்ளும் எழுத்துக்கள் சமூக நிறுவனங்கள் முன் உரையாடலை, அதிகாரத்தை பேசுவனவாகவே அடையாளம் காணமுடியும். அவை விளிம்பு நோக்கி நகரும் இருப்பை சுட்டுவதாகவே அமையும் அதாவது பெருங் கதையாடல் என்ற மையத்தை விட்டு விலகிய எழுத்துக்கள் மையப்படுத்தப்பட்ட, எல்லாமும் நம்பும் எழுத்துக்களை கலைத்துப் போடுபவையாகவும் இவை அமையும். ஆனால் இதுவும் 'மாற்று அரசியல்' எனும் சமூக அடையாளத்தை பிரதிநிதித்துவப் படுத்துவதை கவனிக்க வேண்டும். குறிப்பாக இதன் பின்னணியில் பேசப்படுகின்ற பின்நவீனத்துவம் எனும் முகத்தினை அது காட்டக் கூடும்.

எனினும் பிரக்ஞை பூர்வ எழுத்தும் பிரக்ஞை பூர்வ வாசிப்பும் சமூக அடையாளங்களை, எழுத்தின் அரசியலை எப்போதும் தோற்றுவித்துக்கொண்டேயிருக்கின்றன. உண்மையில் இங்கு தனியன், சமூகம் என்னும் கருத்து நிலைகள் கூட சமூகத்தின் உற்பத்தியாகவே அமைகிறது. ஒரு தனியனின் இருப்பு என்பது பெருமதிப்பும், உயர் அர்த்தமும் கொண்டதாகவே அமையும். 'அந்த மதிப்பையும் அர்த்தத்தையும் சமூகமே கட்டமைக்கிறது.

ஒவ்வொரு தனியனின் மனங்களுக்குள்ளும் ஒரே சமயத்தில் சமூக அமைப்புடன் இயைந்து போகும் விருப்பும் அதன் மீதான பயம்/வெறுப்பும் இருந்து கொண்டிருக்கும். இது தனியனின் இருத்தலின் சுதந்திரம் உருவாக்கும் மனநிலை. இங்கு ஒரு தனியனின் விருப்பு என்பது வெறுமனே மூடுண்ட அமைப்பில் உருவாவதல்ல. ஃப்ராய்ட் கூறுகின்ற முக்கோண இயங்கியல் வடிவத்தின் தன்மையுடன் பலர் படைப்பு-அதன் இயக்கத்தைப் பார்க்கின்றன.




படைப்பு அவ்வாறானதல்ல.

சமுகத்தின் மூடுண்ட வெளிகளைக் கடந்து உறைந்த, அசையும், அசையப் போகும் காரணங்களை பயணிப்பவை ஒரு படைப்பின் இயக்கமும் அதுதான். படைப்பாளியின் எல்லைகளுக்கு அடங்காதவை. ஒரு வாசகனின் எல்லைகளுக்குள்ளும் அடங்காதவை. சமுக அடையாளங்களின் வரைபடங்களுக்குள் நிலையற்று ஓடித்திரிபவை. தனியனின் இருத்தலில் சுதந்திரம் எல்லைப்படுத்தப்பட்ட கோடுகளில் பயணித்தாலும், படைப்பு தனக்கான இருப்பை-இயக்கத்தை அக்கோடுகளில் இருந்து துண்டித்து வெறுவெளியில் தன் விருப்பம் போல் அலைகிறது.

---

## ஏன் கடலே இரைகின்ற

தே.விருஷன்

ஏன் கடலே இரைகின்றாய்
தமிழன் போல் நீயும் யாராலும்
வஞ்சிக்கப்பட்டாயோ
சொந்த நாட்டுக்குள்ளே
சொந்த மண்ணை பறித்ததால்
இடமின்றி அலைந்தாயோ
அதனால் தானோ
இரைகின்றாய்
பெற்ற பிள்ளைகளை பாதகர்கள்
கண்முன்னே இழுத்து சென்றனரே
உன் மகள் வாழ்வை
யாரோ சிதைந்துவிட்டனரோ

இரைகின்றாய்
உன் மீதும் யாரோ
கொத்துக் கொத்தாய் நஞ்சு குண்டு
பொதிந்தனரோ
முட்கம்பி வேலிக்குள் உன்னையும்
யாரேனும் அடைத்தனரோ
அதனால்தானோ இரைகின்றாய்
இரையும் கடலே இதெல்லாம்
விதி என்று புலம்பாதே
விதியையும் மாற்றும் சக்தி
நமக்கு உண்டென்பதை உலகுக்கு
புகட்டிட மறந்திடாதே






> சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் '' சங்கிலியன்'' கூத்தை மிக சிறப்பாக ஆடுவார்கள். அந்த கூத்து வகை என்னைக் கவர்ந்ததாக இருக்கும். '' தத்தரிகிட தத்தரிகிட'' என்ற அந்தக் கூத்தின் பாடல் வடிவமும், அதற்கு ஏற்றாற் போல துள்ளி ஆடும் கூத்து முறையும், மயிர்கூச்செறியும். சிறு வயதில் அப்பாவுடன் இரண்டு தடவை இந்தக் கூத்தைப் பார்வையிட சென்ற ஞாபகம்.

**பசிய மரங்களால் நிறைந்த பூமி என்பதால் தென்மராட்சிப் பகுதிக்கு குழைக்காடு என்று பெயர். அந்தப் பகுதியின் மரபார்ந்த விடயங்கள் எமது பண்பாட்டுக்கு வலுச்சேர்ப்பவை. நாகரிகத்தில் அதிவேக உட் புகுதலோடு அத்தகைய மரபுகள் மெல்ல மெல்லத் தமது அடையாளங் களைத் தாமே தொலைக்கத் தொடங்கியுள்ளன. ஞாபகப் பரப்பில் தூறிக் கொண்டிருக்கும் குழைக்காட்டின் துளிகள் இங்கே பகிரப்படுகின்றன.**

# 'எங்களூர் பொங்கல்கள்'

## மாறிப்போகும் வழிபாட்டு மரபுகள்



பொங்கல், திருவிழா என்பன சைவ சமய மக்களுக்கு முக்கியமானவை. அதே போல முஸ்லிம் மக்களுக்கு நோன்புப் பெருநாளும், கிறிஸ்தவ மக்களுக்கு அவர்கள் சார்ந்த கிறிஸ்தவ தேவாலய பெருநாள் களும் முக்கியமானவை.

பளைப் பிரதேசத்தில் முஸ்லிம் குடும்பங்கள் ஒன்றிரண்டு தான் இருந்தன.

கிறிஸ்தவ மக்கள் பெருந் தொகையானோர் இருக்கின்றனர்.

ஒவ்வொரு மதமும், தமது மக்கள் வழிபாட்டுக்காக ஒன்று கூடுவதை பெரிதும் விரும்பியது இதற்கான பிரதான காரணம் சமூக ஒற்றுமையும்,ஐக்கியமும், வளர வேண்டும் என்பதற்குத்தான் என்பதாகும். மக்கள் ஒன்றாக கூடுவதால் முரண்பாடுகள் களையப்படுகின்றன. முரண்பாடுகளால் கதைக்காமல் இருந்தவர்கள் கூட கோயிலடியில் கண்டால் கதைத்து விடுவார்கள்.

மேலும், பெருநாளுக்கோ, திருவிழாவுக்கோ பிற ஊரில் வாழும் ஒருவர் கட்டாயம் வர நினைப்பார். இதனால் உறவுகளின் தரிசனமும் சாமி தரிசனமும் கிடைக்கும்.

புலோப்பளையில் பிரசித்தி பெற்ற கிறிஸ்தவ தேவாலயங்கள் இருக்கின்றன. மாதா கோயில், சம்பேதுருவர் தேவாலயம், புனித அந்தோனியார் தேவாலயம் போன்றவை முக்கியமானவை.

கிளாலியிலும் முக்கியமான தேவாலயங்கள் இருக்கின்றன. அங்கு பிரசித்தி பெற்றது. ''பெரிய கோயில்'' என அழைக்கப்படும் தேவாலயம். இதற்கு நான் பலதடவை போயிருக்கின்றேன். அதற்குப் போன கதையை பின்னர் பகிரலாம்.

புலோப்பளை சம்பேதுருவர் கோயில் புலோப்பளை றோ.த.க பாடசாலைக்கு பக்கத்தில் இருக்கின்றது.

நானும் தீபனும், புலோப் பளை றோ.த.க பாடசாலை அதிபராக இருந்த அகஸ்ரீன் மாஸ்ரரிடம் ஆங்கிலம் படிக்கப் போவோம். அப்போது சம்பேதுருவர் ஆலயத்துக்குள் சென்று வழிபட்டும், பார்வையிட்டும் இருக்கின்றேன்.

யேசுநாதர் சிலுவையில் அறையப்பட்டிருக்கும் காட்சி என் கண்களில் கண்ணீரை வர வைக்கும்.

மக்களுக்காக வாழ்ந்த ஞானிகளில் யேசுநாதர் போல் இன்னும் ஒருவர் தோன்றவில்லை என்பதே என் கருத்து.

சம்பேதுருவர் தேவாலயம் சென். பீற்றர்ஸ் தேவாலயம் என்றே அழைக்கப்படுகிறது.

சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் '' சங்கிலியன்'' கூத்தை மிகச் சிறப்பாக ஆடுவார்கள். அந்த கூத்து என்னை கவர்ந்ததாக இருக்கும்.

'' தத்தரிகிட தத்தரிகிட'' என்ற அந்தக் கூத்தின் பாடல் வடிவமும், அதற்கு ஏற்றாற் போல துள்ளி ஆடும் கூத்து முறையும், மயிர்கூச்செறியும்.

சிறு வயதில் அப்பாவுடன் இரண்டு தடவை இந்தக்கூத்தை பார்வையிடச் சென்ற ஞாபகம்.

கூத்து தொடங்க முன் மெழுகு திரி கொண்டு சென்று கொளுத்தி வழிபட்ட பின் - கூத்துப் பார்க்க போகையில் அப்பாவின் நெருங்கிய நண்பர் சேதுப்பிள்ளை.

''அண்ணை சோறு இருக்கு சாப்பிடுங்கோ''

'' அன்னதானமா?'' என்று அப்பா கேட்டார்.

'' ஓம் அண்ணை வருசா வருசம் கொடுக்கிறனாங்கள் தெரியாதோ?'' என்றார் அவர்.

ஆகவே பண்பாட்டை எந்த வகை ஆலயமும் தோற்றுவிக்கலாம் வளர்க்கலாம். மக்களுக்கு தேவையானது இதுதானே.

நல்ல குழையல் சோறு சாப்பிட்ட ஞாபகம். எல்லாவற்றையும் விட அன்பும் விருந்தோம்பலும் தானே மனிதர்களைக் கவரும் பெரிய விடயம். அந்த அன்பு இன்று வரை நீடிப்பது நாம் செய்த புண்ணியம் என்றே தோன்றுகின்றது.

சங்கிலியன் கூத்து அற்புதமாக இருந்தது. அதில் பலர் நடித்திருந்தார்கள். நீக்கிலாஸ் பிள்ளை , அலேஸ் அண்ணை, குஞ்சண்ணை- இன்றும் நிறையப் பேர். நீக்கிலாஸ் பிள்ளையும் அலேஸ் அண்ணையும் இப்போதும் கலைக்காகவே வாழ்ந்து கொண்டிருப்பவர்கள்.

இவர்களில் இன்றும் என் மனதில் நிலைத்திருப்பவர் ''கலைத் தென்றல் அல்பிரட் ''

அறத்தியம்மன் கோயிலில் நான் கூத்தாடிய போது கூத்துப் பழக்கத்தில், அவர் தற்செயலாக வந்து '' டோலக்'' வாசித்திருந்தார். திடுக்கிட்டுப் போனேன். தாளம் தப்பாத வாசிப்பு கைகளில் காணப்பட்ட வேகம் இன்றும் என் காதில் ஒலிக்கின்றது.

மிகத் திறமைசாலி அவர் தான். சங்கிலியன் கூத்துக்கு ''டோலக்'' வாசித்திருந்தார்- மேதை தான்.

இந்தச் சங்கிலியன் கூத்தின் போது நான் கண்ட இன்னுமொரு மாமேதை- '' சுதி மரியான்''- ஆர்மோனியம் தானே வாசிக்கின்றார்- என்று பார்த்துக் கொண்டு இருந்தால், எக்கோடியன் வாசிப்பார்- பிறகு அரசன் தோன்றும் கட்டத்துக்கு 'றம்ஸ்' வாசிப்பார். இசையால் கூத்தை இரண்டு மடங்கு விறுவிறுப்பாக நடத்திக் கொண்டிருந்தார்.


பக்கப்பாட்டும் பாடிக்கொண்டு இசையையும் வழங்க கூடிய மகா கலைஞன் அவர் என்பதை இன்று யோசிக்கும் போது மெய் சிலிர்க்கிறது.

கூத்தின் இடைவேளைகளில்- தான் இயற்றிய பாடல்களையும் இசையமைத்து பாடுவார் என்று ஞாபகம். ஒரு மாமேதை சாதாரண கலைஞனாக வாழ்ந்து முடித்து விட்டார் என்று நினைக்கின்றேன். தற்பொழுது அவருக்கு இணையாக 'எக்கோடியன்' வாசிக்க யாழ்ப்பாணத்தில் யாரும் கிடையாது என துணிந்து கூற முடியும். வேறு ஏதும் நாட்டில் சுதிமரியான் பிறந்திருந்தால் ஒரு கோடீஸ்வரராக வாழ்ந்திருப்பார்.

(பொங்கல் இனியும்...)

# நண்பனுக்கொரு கடிதம்....

நண்பனே!
வனவாசம் முடிந்து
வீடு திரும்பிவிட்டேன்
சத்தங்கள் ஓய்ந்துவிட்டன
செத்த உடல்களின் வாடைமட்டும்
ஆங்காங்கே வீசுகின்றன
உடைந்திருந்த வீடும்
கட்டியாயிற்று
முற்றத்தில் புதிய பூச் செடிகளும்
முளைத்துவிட்டன
தலையிழந்த பல
தென்னை, பனைகளும்
ஆறுதலும் கூறிவிட்டேன்
ஆனால் இன்னும்
என் தாயும்தந்தையும்
உன் வீட்டில் இருப்பதாக அறிந்தேன்
நண்பா அவர்களை அனுப்பி
வைப்பாயா?
தனிமையில் கஷ்டப்படுகிறேன்
முடிந்தால் நீயும் வந்துபோ
இம்மடலை தபால்காரனிடம்
கொடுத்தேன் அவன் இதை
அனுப்ப முடியாது என்றான்
அதனால்தான் உன் கல்லறை
முகப்பில் நானே வந்து
இதனை வைத்து விட்டுச் செல்கிறேன்
தகவல் கிடைத்தால்
பெற்றோரிடம் அதைக் கூறு...



ஆ.ஆமோஸ், கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

# பிரிட்டனின் இரும்பு பெண்மணி



அண்மையில் காலமான இங்கிலாந்தின் முன்னாள் பிரதம மந்திரி மார்கரெட் தட்சர் அம்மையார் அரசியல் மற்றும் பொருளாதார செயற்பாடுகளில் மட்டுமல்ல பொது மக்கள் தொடர்பான சில பல சேமநல காரியங்களிலும் இரும்புப் பெண்ணாகவே செயற்பட்டுள்ளார் என்பது அவரது அரசியல் எதிரிகளின் கணிப்பாகும்.

எட்வேர்ட் ஹீத் பிரிட்டிஷ் கன்சர் வேடிவ் அரசின் பிரதமராக இருந்த போது தட்சர் கல்வி அமைச்சரானார். அந்தக் காலத்தில் அவர் செய்த மிகப்பெரிய பணி அல்லது தவறு என்னவென்றால் பாடசாலைகளில் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த ஒரு கிளாஸ் பால் உணவை நிறுத்தியமையாகும். இந்தக் காரியத்தால் அவரை எதிர்க்கட்சியினர் ஏழைகளுக்கு இரக்கப்படாத இரும்பு இதயம்கொண்ட பெண்மணி என்று திட்டினார்கள். பால் உணவைப் பிடுங்கியவர் என்றும் வர்ணித்தார்கள். ஆனால் கன்சர் வேடிவ் கட்சியினர் அவரை நாட்டின் பொருளாதாரத்தை மீட்ட பெண்மணி என்று புகழ்ந்தார்கள்.

தட்சரின் இந்த நடவடிக்கை தொடர்பாக அவரது எதிரிகளில் ஒருவரும் பால் உணவு நிறுத்தப்பட்டதால்பாதிக்கப்பட்டவருமான ஜோர்ஜ் கலோவி என்பவர் எழுதிய ஒரு கட்டுரையில் தட்சரை பின்வருமாறு வர்ணித்துள்ளார்.

**பால் உணவை பிடுங்கியவர்**

''மார்கரட் தட்சர் - பால் பிடுங்கி'' என்பதுதான் அந்தக் காலத்தில் வழங்கப்பட்ட சுலோகம். தட்சருக்கு முன்னர் ஒவ்வொரு ஆரம்பப் பள்ளி மாணவருக்கும் காலை நேரங்களில் ஒரு கிளாஸ் பால் வழங்கப்பட்டு வந்தது. சில பிள்ளைகளுக்கு அதுவே காலை உணவாகவும் இருந்தது. சமூக ஜனநாயகம் செயற்பட்ட அந்தக் காலத்தில் பாலுடன் கொட்லிவர் ஒயில் (மீன் எண்ணெய்) மற்றும் தோடம்பழச்சாறும் அரசினால் வழங்கப்பட்டது. அதனால் நானும் பயன்பெற்றேன். ஐரிஷ் குடியேற்றப் பகுதியில் சேரியில் நான் வளர்ந்தேன். என்னைப் போன்ற மில்லியன் கணக்கான பலருக்கு இந்த உணவு கிடைத்தது. தட்சரால் உணவை பிடுங்கப்படும் வரையில்'' என்று எழுதியுள்ளார்.

இவ்வாறு ஏழைகளின் நலத்திட்டங்களில் ஈவிரக்கமின்றி கை வைத்தவரான தட்சர் தொழில் கட்சியினரின் வாக்குவங்கிகளான தொழில்சங்கங்கள் மீதும் கண்வைக்கலானார்.

சுரங்கத்தொழிலாளர் போராட்டங்களை ஈவிரக்கமின்றி ஒடுக்கினார். 1984 -1985 ஆண்டுகளில் நடந்த சுரங்கத்தொழிலாளர் போராட்டங்களில் 13 ஆயிரம் பேர் கைதுசெய்யப்பட்டனர். 20,000 பேர் காயமுற்றனர். ஒரு சிலர் இறக்கவும் செய்தனர். 200 பேர் சிறையில் அடைக்கப்பட்டு நூற்றுக்கணக்கானவர்கள் விசாரணையின்றி வேலைநீக்கப்பட்டனர்.

இந்த நிலைமையை எழுத்தாளர் ஒருவர் வர்ணிக்கையில்;

அது அந்த சூனியக்காரிக்கு வெற்றி மணியாகவும் தொழிற் சங்கங்களுக்கு சாவு மணியாகவும் ஒலித்தது என்றார்.

இவ்வாறு தட்சரிஸமானது கோடீஸ்வரர்கள், வங்கியாளர்கள் மற்றும் முதலாளித்துவவாதிகள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது. மற்றும் சர்வாதிகாரிகள் யதேச்சாதிகாரிகள் மற்றும் ஊழல் அரசுகளின் தலைவர்கள் எல்லாம் தட்சரின் அரசு கொள்கைகளைப் பாராட்டி வரவேற்றார்கள்.

அந்தக் காலத்தில் சிலி நாட்டின் ஈவிரக்கமற்ற சர்வாதிகாரி ஆகஸ்டஸ் பினசெட், மற்றும் அமெரிக்காவின் அதிபர் டொனால்ட் றீகன் ஆகியோர் தட்சரின் நண்பர்கள். தென்னாபிரிக்காவில் இன ஒதுக்கல் கொள்கையை ஆதரித்த தட்சர் மண்டேலாவின் ஆபிரிக்க தேசிய காங்கிரஸை பயங்கரவாத அமைப்பு என்றும் அழைத்தவர்.

கிழக்கு ஐரோப்பாவில் கம்யூனிஸம் வீழ்ச்சியுறுவதற்கு அமெரிக்க அதிபர் றீகனுடன் சேர்ந்து உழைத்தவர் தட்சர் என்றும் கூட கூறப்படுகின்றது.

**ஏழ்மையில் இருந்து உயர்ந்தார்**

மார்கரட் தட்சர் ஒரு பலசரக்குக் கடை உரிமையாளரின் மகளாகப் பிறந்தார். தாயார் தையல் செய்பவர். இரசாயன பட்டதாரியான தட்சர் பிரித்தானியாவின் முதல் பெண் பிரதமர் என்ற அளவுக்கு உயர்ந்தார். கன்சர் வேடிவ் கட்சியின் தலைவராகத் தெரிவான அவர் மூன்று முறை தேர்தலில் வெற்றிபெற்று 11 வருடங்கள் பிரதமராகப் பதவி வகித்தார். 20 ஆம் நூற்றாண்டில் வேறு எந்த பிரிட்டிஷ் பிரதமரும் இவ்வளவு காலம் பதவியில் இருந்ததில்லை. தொழில் செய்பவர்கள் பரம்பரையில் இருந்துவந்தாலும் பிற்காலத்தில் படுமோசமான முதலாளித்துவ கொள்கையைப் பின்பற்றியவர் என்று தட்சரின் எதிரிகள் கூறுகிறார்கள். தட்சர் தம்மைப் பற்றி தமது சுயசரிதையில் பின்வருமாறு கூறியுள்ளார்.

''எமது றொபேட்ஸ் குடும்பப் பரம்பரையானது நொதம்டன்ஷயரில் பாரம்பரியமாக சப்பாத்து செய்பவர்களாக இருந்துள்ளனர். என் தகப்பன் ஆசிரியராக வரவிரும்பியுள்ளார். ஆனால் அவர் குடும்பத்தால் அதற்கு உதவமுடியவில்லை. அதனால் அவுன்டில் என்ற இடத்தில் வேலைக்குப் போனார். எமது குடும்பத்தினர் மத்தியில் என்னை மிகவும் அமைதியான சிறுமியாகவே பார்த்தார்கள். ஆனால் எனது அரசியல் எதிரிகளுக்கு அதை நம்புவது கஷ்டமாக இருக்கும்''

அரசியல் எதிரிகள் மட்டுமல்ல உலகம் முழுவதும் அவருடைய அலுவலகப் பணியாளர்களும்கூட அப்படி எண்ணமாட்டார்கள். சுறுசுறுப்பும், வாதிடத் தயங்காமையும் எதனையும் இலகுவில் விட்டுக்கொடுக்காத குணமும் அவருடையது.

போக்லாந்தை - ஆர்ஜென்டீனா கைப்பற்றிய போது நட்பு நாடுகள் மட்டுமல்ல உள்நாட்டிலும் பாதகமான கருத்து நிலவியதையும் பொருட்படுத்தாமல் அதிரடியாகப் போர் தொடுத்து போக்லாந்தை மீட்டார்.

சகபாடிகளை நெருக்கி வேலை வாங்குவதுடன் குறைவாக தூங்கி நிறையவும் வேலைசெய்வார். எப்பொழுதுமே பணிபுரிவதில் ஆண்களை மிஞ்சிவிடுவார்.

ஒருதினம் இரவில் வெகுநேரம் வேலை செய்தார் . நள்ளிரவான போது ''ஓ உங்களைப் பார்த்தால் களைத்து போனவர் போலிருக்கிறது-படுக்கப் போங்கள்'' என்று தம்மிடம் கூறியதாக அவரிடம் பணிபுரிந்த ஒருவர் கூறினார்.

மாற்றமில்லை, வயதில்லை, களைப்பில்லை என்ற சொற்கள் அவருக்கு அடிக்கடி தெரிவிக்கப்படும் புகழ் வார்த்தைகள். ஜேர்மன் அதிபர் ஹெல்மட் ஸ்மித் ஒருமுறை அவரைப்பற்றி குறிப்பிடுகையில் ''ஐரோப்பாவிலுள்ள சிறந்த ஆண்மகன்'' என்றார். அவர் மறைந்தபோது அமெரிக்க வெள்ளை மாளிகையில் இருந்து வெளியான செய்தி மிகப் பொருத்தமாக அமைந்திருந்தது.

ஒரு பலசரக்குக் கடைக்காரரின் மகளாகப் பிறந்து பிரிட்டனின் முதல் பெண் பிரதம மந்திரி என்ற நிலைக்கு உயர்ந்த தட்சர் அம்மையார் நம் பெண்பிள்ளைகளுக்கு நல்ல உதாரணமாக விளங்கியுள்ளார். உடைத்து நொருக்கப்படமுடியாத கண்ணாடிக்கூரை என்று ஒன்றுமே இல்லை என்பதை அவர் காட்டிச்சென்றார்.

பாடசாலைக்குச் செல்லும் காலத்தில் உங்கள் அபிலாசை எவ்வாறு இருந்தது என்று ஒருமுறை நிருபர் ஒருவர் அவரிடம் கேட்டார். அதற்கு அவர் கூறியது; மிக விசித்திரமான ஆசைகள் இருந்தன. அந்தக் காலத்தில் நடைமுறையில் இருந்த இந்திய சிவில் சேவையில் சேருவதற்கு விரும்பினேன். ஏனென்றால் பணிபுரிய வேண்டும் என்று பெரும் ஆசை இருந்தது அந்த நாளில். ஆனால் அவ்வாறு செய்வதற்கு பல்கலைக்கழகத்துக்குப் போகவேணும் என்பதும்

**74 அசை போட ஒரு விடயம்**

எனக்குத் தெரிந்திருந்தது. அதைவிட பல்கலைக்கழகம் செல்வது என்பது எமக்கு கனவிலும் நினைக்க முடியாத சவாலாகும். என் தன்மையால் முடியவில்லை. எனக்கு அதிர்ஷ்டம் இருந்தது பாடசாலையில் திறமைசாலியாக இருந்தேன். ஒக்ஸ்போர்ட் அல்லது கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகம் என்பதெல்லாம் வெறுமனே காது கேட்கும் சொற்களாகவே இருந்தன. ஆனால் எப்பொழுதுமே உச்சத்தை நோக்கி நகர வேண்டும் என்ற குறிக்கோள் இருந்தது. அதை நிகழ்த்தவும் முடிந்தது என்றார்.



''எமது றொபேட்ஸ் குடும்பப் பரம்பரையானது நொதம்டன்ஷயரில் பாரம்பரியமாக சப்பாத்து செய்பவர்களாக இருந்துள்ளனர். என் தகப்பன் ஆசிரியராக வரவிரும்பியுள்ளார். ஆனால் அவர் குடும்பத்தால் அதற்கு உதவமுடியவில்லை. அதனால் அவுன்டில் என்ற இடத்தில் வேலைக்குப் போனார். எமது குடும்பத்தினர் மத்தியில் என்னை மிகவும் அமைதியான சிறுமியாகவே பார்த்தார்கள். ஆனால் எனது அரசியல் எதிரிகளுக்கு அதை நம்புவது கஷ்டமாக இருக்கும்''

உதயன்
21/04/2013

# மௌன வாழ்த்துக்

சி.சிவராசா, நாவற்குழி.

பூமணி அக்கா வருத்தமெண்டு படுத்தது மிஞ்சி மிஞ் சிப் பார்த்தால் 10-12 நாள் கூட இருக்காது. இப்படி பொத்தென்று போய்ச் சேருவாவெண்டு ஆர் கண்டது?

பூமணி அக்காவை பார்ப்பதற்காக வந்த யோகத்துக்கு அவளின் இழவுச்செய்தி தான் வீட்டு வாசலில் காத்துக் கிடந்தது. ஆஸ்பத்திரியில் இருந்து இன்னமும் பொடி கொண்டு வரவில்லை. வீட்டில பூமணி அக்காவின்ர கடைசிப் பெட்டை பரிதாவும் அக்கம் பக்கத்தில் இருக்கிற இரண்டு மூண்டு பொம்பிளையளும் தான் நிக்கினம்.

பரிதா எட்டாம் வகுப்புத்தான் படிக்கிறாள். அவள் தலைமயிரை இழுத்து பிச்சபடி ''என்ர அம்மா என்ர அம்மா'' என்று கத்துகிறாள். அந்தப்பிள்ளையின் அழுகையை எப்படி ஆத்த முடியும்? நானும் பூமணியும் எங்கட ஊரில் ஒரே வகுப்பில் தான் படிச்சனாங்க. முதலாம் ஆண்டில் இருந்து ஓ.எல்.எடுக்கிற வரை ஒன்றாய் படிச்சனாங்க. நான் எட்டாம் வகுப்பு படிக்கக்கத்தான் என்ர அப்பா பாம்பு கடிச்சு செத்துப் போனார். அப்ப நான் கதறி அழுத போது பூமணி தான் எனக்கு ஆறுதல் சொன்னவள். இண்டைக்கு அவள் செத்துப்போனாள். அந்த நேரம் அவள் எனக்குச் சொன்ன ஆறுதல் வார்த்தைகளை இப்ப நான் அவளிண்ட பிள்ளைக்கு சொல்ல வேண்டி இருக்கு.

பொல்லாத கடவுளுக்கு பொழுது போகவில்லை எண்டால் இப்படித்தான் ஆகும். ஏமாளியளை பிடிச்சு பந்தடிச்சு விளையாடுகிறான். பாவம்! பூமணிக்கு பிறந்தது மூன்றும் பெட்டைக் குட்டிகள் தான்.

மூத்தவள் கலியாணம் செய்திட்டாள். கிடைத்ததுகளையெல்லாம் வித்துச் சுட்டு மேலதிகமாய் கடனும் பட்டுத்தான் அந்தக் கலியாணத்தை செய்து முடிச்சாள். ம்... உம்.... ஏதோ ஒரு பிள்ளையின்ர நன்மைக் காரியத்தையெண்டாலும் போறத்துக்க முந்தி பாத்திட்டாள். மற்றதுகளின்ர நன்மை தீமைகளைப் பார்க்க அவளுக்கு பொசிப்பில்லை. யோகம் தனது வாழ்நாள் தோழிக்காக மனதில நினைச்சதையெல்லாம் அங்கே நின்ற மற்றப் பெண்களோடு சொல்லிக்கொண்டிருந்தாள். அப்போது பூமணியக்காவின்ர தமையன் அவசரமாக அங்கு வந்தார். பொடி வாறதுக்கு நேரஞ்செல்லுமாம். ஏதோ சில அலுவலுகள் பார்த்துத்தான் உடலை கீறிக்கிளிக்காமல் கொண்டு வரவேணுமாம்.

பூமணியக்காவின்ர கிளினிக்கு கொப்பி,, எக்ஸ்றே போன்ற சில ஆஸ்பத்திரி ஆவணங்களை எடுத்துக்கொண்டு போறத்துக்குத்தான் அவர் ஓடி வந்திருக்கிறார். சின்னப்பெட்டையைக் கூப்பிட்டு கிண்டிக்கிளறி ஒரு மாதிரி எடுத்துக்கொண்டு உடனே போய்விட்டார். யோகத்துக்கும் வீட்டில் தலைக்கு மேல வேலை இருக்கிறது. அவளும் புள்ளைகுட்டிகாறி எதுக்கும் வீட்ட போட்டு நாளைக்கு வாறதுதான் சரியெண்டு நினைத்தாள்.

பரிதாவை கூப்பிட்டு, தான் நாளைக்கு வருவதாக சொல்லிவிட்டு புறப்பட்டாள். அடுத்தநாள் ஒரு படியாக பூமணியக்காவின் இறுதிக் கிரியைகள் நடந்து முடிந்தன. சும்மா சொல்லக் கூடாது பூமணியக்காவுக்கு வந்த சனம் திருவிழாக் கூட்டம்தான். ஒருதர் எப்பிடி வாழ்ந்தார் என்பது அவருடைய மரணத்தின் போது தான் தெரியும் என்பார்கள். உடையாருக்கு பொல்லுகள் வைச்ச கதை எல்லோருக்கும் தெரியும். ஆனால் இங்கே மனிதர்கள் கூடி கண்ணீர் அஞ்சலி செய்த காட்சி எல்லோருடைய மனங்களையும் உலுப்பிவிட்டது.

உயிர்போய்விட்டால் அவருடைய பெயரினை நீக்கி பிணமென்டு பெயரிடுவார். சூறையங் காட்டிடைக்கொண்டு போய்சுட்டிட்டு, நீரினில் மூழ்கி நினைப்பும் ஒழிந்து விடுவார். இதுதான் உலக இயற்கையாகும். பூமணியக்காவின் செத்தவீடு முடிந்து மூன்று மாதங்கள் ஓடிவிட்டன.



யோகம் ஏதோ அலுவலாக அந்தப் பக்கம் வந்தவள். ஒருக்கால் பூமணி வீட்டை எட்டிப்பார்திட்டு போகலாமெண்டு உள்ளே வந்தாள். பூமணியின்ர பிள்ளையள் தாயின்ர கவலையை இன்னும் மறந்திருக்க மாட்டுதுகள் எண்டு நினைத்துக் கொண்டுதான் உள்ளே வந்தாள்.

பரிதா ரியூசனுக்கப் போய்விட்டாள். இரண்டாவது பெட்டை சங்கீதாதான் நின்றாள். அஞ்சாறு சிநேகிதப் பெட்டையளோட ரீவியையும் போட்டு வைச்சு கும்மாளம் கொட்டிக்கொண்டு நிக்கினம். யோகத்தைக் கண்டிட்டு வாருங்கோ அன்ரி எண்டு சங்கீதா கூப்பிட்டு இருத்தினாள். யோகம் சுற்று முற்றும் பார்த்தபடி ஒரு கதிரையில் போய் உட்கார்ந்தாள். அப்போது வெளியே மோட்டார் சைக்கிள் சத்தம் கேட்டது. சங்கீதா வெளியே எட்டிப் பார்த்தாள். அது அப்பா தான் வருகிறார் என்றாள். கையில் ஒரு பார்சலுடன் வந்தார். மகளிடம் அதைக் கொடுத்தார். பாணும், மிக்ஷர் பைக்கற்றும் இருந்தது. பைக்கைற்றை உடைத்து எல்லோருக்கும் பரிமாறினாள். தண்ணி கொதிச்சிருக்கும்... அப்பா, ரீ போடுறியே, என்றாள்.

யோகம் அக்கா தான் போடுவதாகச் சொல்லிக் கொண்டு அடுப்படிக்குள் போனாள். அங்கே எல்லாமே அலங்கோலம் தான். பூமணி இருக்கேக்க இந்த குசினிக்கே நிலத்தை தட்டிப் போட்டுப் படுக்கலாம். எல்லாம் வீட்டுக்கு உரியவள் இல்லாட்டி தலை கீழாகத்தான் போகும். இப்ப ஊரில எத்தினை கெடுபிடியள் நடக்குது. அதுகும் பெண் பிள்ளைகளை ஒழுக்கமாய் வைச்சு வளர்க்க ஏலாமல் போய்ச்சுது. குழந்தை, பெரிசு என்று பார்க்கிறாங்கள் இல்லை. ஆக்காள் வயதுக்கு தான் வளர்ந்திருக்குதுகள் ஒரு பண்பாடு இல்லை. பழக்கவழக்கமும் இல்லை.

யோகம் அக்கா பெருமூச்சுவிட்டாள். தேநீரைக் கலந்த படியே வாய் புலம்பினாள். பூமணியின்ற இந்தப் பிள்ளைகள் தலிச்சுப் போச்சுதுகள். தகப்பனும் வேலைக்கு போனால் தானே சீவியத்தை கொண்டு நடத்த முடியும். இந்தப் பிள்ளையளை தனிய விட்டுவிட்டு அவர் போயிடுவர். ஏதும் ஒன்று இருக்க ஒன்று நடந்திட்டால்...... ஐயோ கடவுளே! நினைக்கவே பயமா இருக்கு.

அப்போது சங்கீதா சிரித்தபடி வந்தாள். என்ன அன்ரி எனக்குத்தான் பேச்சு விழகுதோ, என்றாள். நான் ஏதோ புலம்பினது உனக்க கேட்டுட்டுதே? எனக்கடி பிள்ளை இப்படியே பழகிப் போச்சு, என்று யோகமக்கா சமாளித்தாள். சங்கீதா தேநீரை எடுத்துக் கொண்டு எல்லோருக்கும் பரிமாறினாள். அந்த மாலைநேர தேநீர் விருந்தில் சிறப்பு விருந்தி

…தில் இலக்கிய படைப்புகள்
…ன்ற ஆதங்கம் படைப்பாளிகள்
…ப்படி வெளிவந்த சில
… சுவடு தெரியாமல்
…னகிராமனின் மோகமுள் என்ற
… வந்தது. ’


# … சினிமா

## … குறிப்புகள்

சந்திர பிரவீண்குமார்






தேனாம்பேட்டைக்குக் கொண்டு செல்லப்பட்டு மாற்று இதயம் சரியான நேரத்தில் பொருத்தப்பட்டது. ஓர் உயிர் காப்பாற்றப்பட்டது. அந்த உண்மைச் சம்பவம் 'ட்ராஃபிக்' என்ற பெயரில் மலையாளத்தில் திரைப்படமாக வெளியானது. அதைத் தழுவி, 'சென்னை யில் ஒருநாள்' என்ற திரைப்படம் மார்ச் 29ஆம் திகதி வெளியானது. பல்வேறு நட்சத்திரங்கள் நடித்து வெளியான இந்த படத்தில் நான்கு மனிதர்களின் நான்கு விதமான வாழ்க்கைகளும் இடம் பிடித்தன.

இந்த ஐந்து திரைப்படங்களும் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் வெளிவந்தன என்பதும் இரண்டு மாத இடைவெளியில் வெளியானதும் குறிப்பிடத்தக்கது. இதற்கு முன்பும் ஆண்டுக்கு ஒருமுறையோ அல்லது சில மாத இடைவெளியிலோ இதுபோன்ற படங்கள் வெளிவரவே செய்தன என்றாலும் குறுகிய இடைவெளியில் இதுபோன்ற படங்கள் வருவது இப்போதுதான். தமிழ்த் திரையுலகம் இலக்கியங்களைத் தொடவில்லை என்றாலும் பொழுது போக்கு அம்சங்களைத் தாண்டி அடுத்தக் கட்டத்தை நோக்கி பயணிப்பதாக இதைப் பார்க்கலாம். இந்த ஆண்டில் இதுபோன்ற படங்களின் எண்ணிக்கை இதோடு முடிந்துவிடவில்லை. இன்னும் சில வாரங்களில் வட சென்னைப் பகுதியில் இருந்த பொக்ஸர்களின் வாழ்க்கை பற்றிய 'பூலோகம்' என்ற படமும், ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளைப் பற்றிய 'கௌரவம்' என்ற படமும் வெளிவர இருப்பதாகத் தெரிகிறது .சில படங்கள் வாழ்வியலைப் படம்பிடித்துக் காட்டுவது உண்மைதான் என்றாலும் இதனால் தமிழ் சினிமா மாறிவிடாது' என்கிறார் தமிழ் ஆழி என்ற மாத பத்திரிகையின் உதவியாசிரியர் துறையூர் சரவணன். 'முன்னர் ஆண்டுக்கு ஒருமுறையோ அல்லது இருமுறையோ வந்த படங்கள், இந்த ஆண்டு மிகக் குறுகிய இடைவெளியில் வெளி யானதால் இப்படிதோன்றலாம். ஆனால் இனிவரும் மாதங்களில் இது தொடர வாய்ப்பு குறைவுதான். இதற்கு இயக்கு நர்களை மட்டும் காரணம் சொல்ல முடியாது. அவர்களுக்கு வணிக ரீதியான அங்கீகாரம் தேவைப்படுகிறது. திரைப் படங்களை ரசிக்கும் மனநிலை யில் மாற்றம் வரவேண்டும் என்பதே சரியான தீர்வு. இதற்கான முயற்சிகள் தொடர வேண்டும்.



## இரவல் மண்ணும் தாய் நிலமும்

நிலத்தைப்பிளந்து கொண்டு
எம் விழியை
வெருட்டிநிற்கிறது
அடர்ந்தகாடு
முட்கம்பியால்
நெய்யப்பட்டபரந்தநிலம்
அதில்தான்
பிறப்பின்போது
பிஞ்சுத்தொண்டையின்
அழுகையை
ஏந்திக்கொண்ட-எம்
குடில்களைப் பெருக்கில்
குசினிப்பானை
தெருவில் மிதந்தாலும்
குடிசையைவிட்டு
குந்த வேறு இடம்
தேடியதில்லை

கழுத்தைப்பிடித்து
வீதியில்தள்ளி
உடமைகளை
எடுத்துத் தெருக்களில் வீசி
சுட்டுவிடுவதாய்
துப்பாக்கியை
நெஞ்சில்
அழுத்தினார்கள்
துவக்கு தூக்கிய
துரைமார்கள்

தாய் நிலத்தின்
ஒவ்வொரு குடும்பத்தின்
கருவறையையும்
பிய்த்தெறிந்தது
அதிகார மன்றம்

எம் பௌர்ணமி
வாசல்களில்
பிணச் சதைகளை
வீசியெறிந்தார்கள்

எம் தோட்டச் செடிகளில்
பூக்களுக்கு பதிலாக
மண்டையோடுகள் பூத்தன

எங்கள் சுவடுகளை
கிள்ளியெறிந்து
கண்ணிவெடி
புதைத்தார்கள்

எங்கே எம்வீடு
எங்கே எம் காணி
திசைகள் நொருங்க
கதறினோம் கதறினோம்
மாற்றுக்காணிகள்
வேண்டாம்

பெற்றதாயிருக்க
பிறத்திப் பெண்
அன்னையாக முடியுமா
பிறந்த மண்ணிருக்க
இன்னொருநிலம்
தாய் மண்ணாக முடியுமா

எம்.நேதா
நெடுந்தீவு

## சொற்சிலம்பம் - போட்டி இல: 262

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | | ■ | 4 | 5 |
| | ■ | 6 | | ■ | 7 | | |
| 8 | 9 | | ■ | 10 | | | ■ |
| 11 | | ■ | 12 | | | | 13 |
| | ■ | 14 | | | | ■ | 15 |
| ■ | 16 | | | | ■ | 17 | |
| 18 | | | | ■ | 19 | | |
| 20 | | | ■ | 21 | | | |

அனுப்புபவர் பெயர்:..........................................

விலாசம்:..........................................

..........................................

கையொப்பம்:..........................................

### இடமிருந்து வலம்

1. உள் நுழைவு
4. கம்பரும் திருவள்ளுவரும் தமிழுக்கு இதுவென்பர்
6. நிலம்
7. மயிர்க் கூட்டம்
8. சிந்தனை
10. அல்லவோ என்ற ஓர் இடைச்சொற்றொடர்
11. எரிந்தபின் மிஞ்சுவது
12. ஈரேழு
14. விற்பனையையும் கொள்வனவையும் பொருத்துபவர்
16. கவியின் வண்ணம்
17. சில அல்ல
18. இந்தியா
19. நவீன
20. திடீரென என்பதைக் குறிக்கும்.
21. சித்திரம்

### மேலிருந்து கீழ்

1. பயன்படுத்தல்
2. நோவு
3. பொதி
4. அறிஞர்
5. வரி
7. வெள்ளி உலோக வேலை செய்வோர்.
9. பிழை அல்ல
10. மிதம்
12. ஒரு நாட்டிய வகை
13. பூமி
14. பெறுமதி மிக்கது/ மிருகம் ஒன்றின் உடற்பாகம்
16. நூல்
17. விவசாயப் பயிர்ச்செய்கையில் ஒரு நடைமுறை
18. அரைவாசி.
19. உலகம்.

★வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்.

★சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 260 க்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) அச்சகம் (4) பாதி (6) மடை (7) தவில் (8) சுவர்க்கம் (11) கடுக்கல் (12)கனா (13) கன் (14) சடை (15) உள் (16) பாரி (18) உடம்பு (20) தபால் (22) பல் (23) கரம் குவி

**மேலிருந்து கீழ்**

(1) அஞ்சுகம் (2) சமர்க்களம் (3) கடைக்கண் (4) பாவி (5) தில்லானா (7) தம் (9) வடு (10) கல் (12) கடை (14) சரிதம் (15) உடல் (17) கல்வி (18) உப (19) புக (21) பாகு

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி**
**இல. 262**
*நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்]லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், (5.05.2013) ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம்போட்டி இல.261இல்வெற்றி பெறுவோர்களது விவரம் 28.04.2013 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 260 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
**வி.புநஜினா மரியா,**
இல.30, கொண்டடி வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

**2 ஆம் பரிசு**
**மு.ஜெயமுராரி,**
மே/பா-ஐ.முருகையா
மடத்தடி, பலாலி வீதி, உரும்பிராய்

**3 ஆம் பரிசு**
**பொன்னம்பலம் தேனுஜா,**
'இயதை'
அல்வாய் கிழக்கு ,அல்வாய்

**4 ஆம் பரிசு**
**கு.ஹரிதா,** தரம் 6
யா/இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பரணம்

**5 ஆம் பரிசு**
**தமிழினி நகுலேஸ்வரன்,**
சிவகாமி அம்மன் கோயிலடி, காரைநகர்

**பாராட்டுப் பெறுவோர்**

**எஸ்.இராஜகுமாரி,**
புக்கைபுலோ வீதி, மாதகல்.

**திருமதி ஸ்ரீ கிருஷாந்தி உமாபதி சிவம்,**
இல.18, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்

**து.அபிராமி,**
இல.515/5, கொழும்புத்துறை கிழக்கு,யாழ்ப்பாணம்

*பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ்.மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால் ஊடாக அனுப்பிவைக்கப்படும்.*

## மரணித்தவை பொய் பேசுவதில்லை



பொய் ஒன்றால்
மெய் ஒன்று
மொய் எழுதி வாங்கப்படுகிறது;
மெய்யின் வாய்களில்
சடுதியாக திணிக்கப்பட்ட
சிவப்புத் துண்டு
வார்த்தைகளை-
சிறை செய்ததோ?
உலகத்தின்
ஊனக் காதுகளுக்குள்
ஓதப்படும்
தயாரிக்கப்பட்ட பொய்களை
ஓதும் வாய்களின்
காதுகளும்
செவிமடுத்திருக்க வாய்ப்பில்லை;
கேட்டிருந்தால்...
பொய்களுக்குத் தான்
வாய்ப்பில்லையே...

அகிலமே அதிர்ந்த
அணு வெடிப்புகளுக்கு மேலாய்
ஆர்ப்பரித்த- எம்
அவல ஒலிகளை
அடுக்காத காதுகள் ஊனம் தானே...
அப்பட்டமாய்
உலக வலம் வந்த
உண்மைச் சாவுகளின்
சிதைவுகளைச்
சிறைப்படுத்தாத கண்கள்
ஊனம் தானே...

ஊனக் காதுகளையும்
கண்களையும்
தடி கொடுத்து நடத்தும்
அரிதாரர்களே...
ஒருமுறை... அவர்களை
வெற்றுக் கால்களுடன்
வெந்த எம் பூமிக்கு
அழைத்து வாருங்கள்
ஊனம் அழிக்கும் சக்தி
உணர்வுகள் அளிக்கும் சக்தி
எங்கள் மண்ணுக்குண்டு

எடுத்து வைக்கும்
கால் ரேகைகளில்
எங்கோ அடி ஆழத்தில்
எஞ்சிய எலும்புகள்
எழுந்து நின்று
உண்மை எழுதும்
இன்னமும் ஈரம் கசியும்
இரத்த அணுக்கள்
கால் காதுகளில்
மெய் ஓதும்...

இயற்கையின் எச்சங்களில்
இன்னும் உறைந்திருக்கும் காற்று
மெய் வாயூடாக
உண்மை உரைக்கும்
விஞ்ஞானம் என்று
விஞ்சி நிற்கும் உலகம்
ஆராய்ச்சி என்றிங்கு
இறங்காதது அதிசயம் தான்
இறங்கியிருந்தால் தான்
பாதுகாப்பென்ற பெயரில்
படை நடந்த சுவடுகளை
தோண்டி எடுத்திருப்பார்களே...

உலகமே உங்கள்
ஊனக் காதுகளுக்கு
கேட்காது என்று தெரிந்தும்
செப்புகின்றேன் ஒன்று
எங்கள் உணர்வுகள்
உங்கள் காதுகளைத்
திறக்கும் காலம் வரும்
ஏனெனில்....
உயிரோடு இருக்கும்
உங்கள் போன்ற
பிணங்கள் மாதிரி
இறந்து போனவை
பொய் பேசுவதில்லை
அவை புதைக்கப்பட்டது
எங்கள் மனங்களில் தான்
நினைவு கருவிகளால்
அகழ்ந்தெடுக்கப்படும் போது
உண்மை விளங்கும்- ஏனெனில்
வரலாற்றின் தொடர்ச்சி
இறப்பின் உயிர்ச்சி தானே...

ந.அகறிகா



# முள்ளியவளை முடியாத முடிவு

■ உ சிலாமணி

முள்ளிவாய்க்கால் பேரவலத்தைச் சந்தித்த முல்லைத்தீவு மாவட்டம் மெல்ல தன் காயங்களை மறைத்து மீண்டெழுந்து வருகின்றது. மனித மனங்களில் ஏற்பட்ட காயங்களுக்கு மருந்துகள் கிடைக்காவிட்டாலும், வெளிக் காயங்களுக்கு நல்ல மருந்து வழங்கப்பட்டு முல்லை நகரமே மாற்றத்திற்கான அறிகுறியாக இருக்கின்றது.

**மோதல் ஆரம்பம்**

மீளெழுச்சியடையும் முல்லைத் தீவில் மீண்டும் இன முறுகலைத் தோற்றுவிக்கும் செயற்பாடுகளும் அண்மைக் காலமாக வெகுகச்சிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அரச ஆதரவுடன் திட்டமிட்ட ரீதியில், மொழியால் ஒன்றுபட்ட மதத்தால் வேறுபட்ட தமிழ் - முஸ்லிம்கள் இடையே பதற்றத்தை தோற்றுவிக்கவே முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாங்குளம் - முல்லைத்தீவு பிரதான வீதியில் முல்லை நகருக்கான வரவேற்புக் கிராமமாக இருக்கும் முள்ளியவளையிலேயே இனப்பதற்றம் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றது. பிரதான வீதியின் ஒரு பகுதி முள்ளியவளை மத்தியாகவும், மறுபகுதி முள்ளியவளை மேற்காகவும் இருக்கின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் தமது நிர்வாகரீதியாக ஆட்சி நடத்திய காலத்தில் இந்த முள்ளியவளை மத்திப் பகுதியில் பெருமளவிலான கஜூ தோட்டம், தேக்கங்காடு என்பவற்றை வளர்த்திருந்தனர். அடர் காடுகளாக - பசுமை செறிந்த பகுதிகளாக இவை அந்தக் காலப் பகுதியில் இருந்தன.

இந்தப் பிரதேசத்தில் தமிழ் மக்கள் வசிப்பதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் அனுமதியளிக்கவில்லை. மேலும் இந்தக் காட்டுப் பகுதியின் தொடர்ச்சி வெலிஓயா வரை செல்கின்றது. இதனால் இங்கு ஆழ ஊடுருவும் படையினர் வருவதாலும் மக்கள் இந்தப் பகுதிக்குள் சென்று வருவதை தவிர்த்து வந்தனர்.

**புதுவாழ்வு**

2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்ததன் பின்னர் முல்லைத்தீவு மக்கள் 2011 ஆம் ஆண்டில் மீளக்குடியமர்த்தப்பட்டனர். இதன் பின்னரே காணிகளற்ற மக்கள், வனபரிபாலன திணைக்களத்துக்குச் சொந்தமான மேற்படி தேக்கங்காட்டுப் பகுதிக்குள் சென்று தமது குடியிருப்புக்களை அமைத்துள்ளனர்.

"எங்களுக்கு காணியில்லை. நாங்கள் எங்க போய் இருக்கிறது. நாங்களும் சொந்தக்காரர், தெரிஞ்சவை என்று எல்லோரோடையும் இருந்து பார்த்தம். கடைசியா ஒண்டும் செய்யேலாக் கட்டத்தில இதுக்க வந்து கொட்டில போட்டுட்டு இருக்கிறம்.

இயக்கம் இருக்கேக்க இந்தப் பக்கம் தலை காட்டேலாது. எங்களுக்கு அப்ப காணி பிரச்சினையில்லை. ஆனா இப்ப நாங்கள் தனிக் குடும்பம். எங்களுக்கு வாழுறதுக்கு காணி வேணும். அதால இஞ்ச ஒரு வசதியுமில்லாமல் இருப்பதாக " அங்கு வசிப்பதாக தெரிவிக்கின்றார் ரமா. இளம் குடும்பஸ்தரான ரமா தனது குடும்பத்தினருடன் சிறிய கொட்டிலில் வசித்து வருகின்றார்.

முள்ளியவளைப் பகுதியில் காணி இல்லாத மக்கள் பலர் கடந்த ஆண்டு ஜூன் மாதமளவில், முள்ளியவளை மத்தி 2 ஆம் கட்டையிலுள்ள மேற்படி தேக்கங்காட்டுப் பிரதேசத்தில் காடுகளை வெட்டி தமது குடியிருப்புக்களை அமைத்தனர்.

"நான் முதலாவதாக வந்து இதுக்க காணி பிடிச்சு இருந்தனான். அதுக்குப் பிறகு மிச்சாக்கள் வந்தவை. இப்ப 78 பேர் கொட்டில் போட்டிருக்கிறம். கொட்டிலுக்கு வேயிறதுக்கு கிடுகு வாங்கக் கூட எங்களுக்கு காசில்லை" என்கிறார் வயதான உலகேஸ்வரி.

**அடாத்து பண்ணிய இராணுவம்**

கடந்த வருடம் மேற்படி பகுதியை தமிழ் மக்கள் பிடித்துக் கொட்டில்கள் அமைக்கத் தொடங்கிய பின்னர் வில்லங்கம் இராணுவத்தின் வடிவில் முதலில் வந்தது. மக்கள் காணி பிடித்த பகுதிகளில் 5 ஏக்கர் தமது இராணுவ முகாம் அமைப்பதற்கு தேவை என்று அவர்கள் விடாப்பிடியாக நின்றனர்.

"நாங்கள் கொட்டில் போடுறதுக்கு எல்லை போட்ட பிறகு ஆமி வந்து இந்த இடத்தில தங்கிட காம் வரப்போகுது என்றாங்கள். எங்கள் எல்லாரையும் முகாம் மதிரி பக்கத்தில பக்கத்தில கொட்டில போட்டிட்டு இருக்கச் சொன்னாங்கள். நாங்கள் அப்பிடி போடேலாது எண்டு சொல்ல, உங்கள் எல்லோரையும் கொட்டிலோட சேர்த்து எரிச்சுப் போடுவம் எண்டு வெருட்டினாங்கள்.

அதுக்கும் நாங்கள் மசியேல. ஒரு நாலைஞ்சு தரம் வந்து கேட்டாங்கள். இப்ப வாறதில்லை. அவங்கள் அங்கால காணி கேட்கிறாங்கள் " என்கிறார் அந்தப் பகுதியைச் சேர்ந்த ஒருவர். தனது பெயரை வெளிப்படுத்த அவர் விரும்பவில்லை.

மக்கள் காணியைப் பிடித்துக் கொட்டில் போட்டிருந்தாலும் இதுவரையில் அவர்களுக்கு குறித்த காணிகள் பங்கிட்டுக் கொடுக்கப்படவில்லை. இதனால் அவர்களுக்கு வீட்டுத் திட்டம் என்று ஓர் உதவியும் கிடைக்கவில்லை.

> "எங்களுக்கு காணியில்லை. நாங்கள் எங்க போய் இருக்கிறது. நாங்களும் சொந்தக்காரர் தெரிஞ்சவை என்று எல்லோரோடையும் இருந்து பார்த்தம். கடைசியா ஒண்டும் செய்யேலாக் கட்டத்தில இதுக்க வந்து கொட்டில போட்டுட்டு இருக்கிறம். இயக்கம் இருக்கேக்க இந்தப் பக்கம் தலை காட்டேலாது. எங்களுக்கு அப்ப காணி பிரச்சினையில்லை. ஆனா இப்ப நாங்கள் தனிக் குடும்பம். எங்களுக்கு வாழுறதுக்கு காணி வேணும்."

**நடுத்தெருவில்**

"நாங்கள் வந்து ஒரு வருசமாய் போகுது. எங்களுக்கு ஓர் உதவியும் இல்லை. இஞ்ச பெரும் சுகாதார சீர்கேடாக இருக்கிறது. எங்களுக்கு குடிக்கிறதுக்கு, என்னதுக்கு தண்ணி எடுக்கிற தெண்டாலும் அரை கிலோமீற்றர் தூரம் போகவேணும். ஒரு 'ரொய்லட்' இல்லை. கறண்ட் இல்ல, ஏன் இருக்கிறதுக்கு ஒரு வீடே இல்லை. நாங்கள் எதுவுமில்லாமல் காட்டுக்குள் இருந்து கஸ்டப்படுகின்றோம்" என்கிறார் ரமா.

"எங்களுக்கு பிள்ளை குட்டி இருக்குது. அதுகளோட இந்த காட்டுக்க வந்து இருக்கேலாது. பாம்பு, புச்சி கடிச்சா யார் பொறுப்பு. இஞ்ச ஒரு வசதியும் இல்லாததால், நாங்கள் கொட்டில மட்டும் போட்டுட்டு அங்கால சொந்தக்காரர் வீட்டில இருக்கிறம்.

வேற இடங்களில இருக்கிறதுக்கு ஏலாது எண்ட குடும்பங்கள் வேறு வழியில்லாமல் இதுக்க வந்திருக்கின. எங்களையும் எழுப்பி கலைச்சா நாங்களும் வசதியில்லாமல் இதுக்கதான் இருக்க வேணும் " என்கின்றார் ஒருவர்.

இந்தப் பகுதியில் இருக்கின்ற தமிழ் மக்கள் அனைவரும் அன்றாட கூலித் தொழிலை நம்பி வாழ்பவர்கள். தற்போது கூலித் தொலிலுக்கும் பெரும் நெருக்கடி. இதனால் தங்களது அன்றாட உணவுக்கே அந்தப் பணம் செலவழிவதால் வீட்டுக்கு சிமெந்து தரை போடவோ, கொட்டிலுக்கு கிடுகு வேயவோ முடியாத நிலைமை இருப்பதாகக் குறிப்பிடுகின்றனர்.

இந்த நிலையில் கடந்த ஜனவரி மாதம் திடீரென வந்த வன பரிபாலன திணைக்கள அதிகாரிகள் - சிங்கள அதிகாரிகள் - இந்தப் பகுதி மக்கள் 4 பேரை கைது செய்ததுடன் அவர்களது கத்தி, கோடாரி, மண்வெட்டி என்பவற்றையும் பறித்துச் சென்றுள்ளனர்.

தமது அனுமதியில்லாமல் தேக்கங்காட்டை வெட்டியதாகத் தெரிவித்தே அவர்களை கைது செய்துள்ளனர். அவர்களில் யாழ்ப்பாணத்திலிருந்து தமது உறவினரை பார்க்கச் சென்ற ஒருவரையும் கைது செய்து சென்றிருக்கின்றனர். அவர் மீதே காடழிப்பு வழக்கு தொடுக்கப்பட்டிருக்கின்றது. தமது வறுமையான சூழ்நிலையில் நீதிமன்றுச் சென்று வரமுடியாது என்றும் அவரை விடுவிக்க யாராவது உதவுவார்களா என்று கேட்கின்றார் உலகேஸ்வரி.

மக்கள் இவ்வளவு துன்ப துயரங்களை எதிர்நோக்கிக் கொண்டிருக்கையிலேயே இரண்டாவது வில்லங்கம் அரச ஆதரவு அமைச்சரின் வடிவில் வந்தது.

**அமைச்சரின் குள்ளநரித்தனம்**

தமிழ் மக்கள் குடியிருக்கும் மேற்படி காணிகளில் காடுகளை முற்றாக அழித்து முஸ்லிம் மக்களை குடியேற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 1600 ஏக்கர் தேக்கங்காடு அழிக்கப்பட்டு அதில் 1400 முஸ்லிம் குடும்பங்களை குடியேற்றுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதனை எதுவித வசதியுமில்லாமல் அந்தக் காணிகளில் வசித்த 78 குடும்பங்கள் எதிர்த்தன. "எங்களுக்கு முதலில் இஞ்ச ரோட்டுக் கரையோட காணியை தந்திட்டு வேணுமெண்டா அவங்களுக்கு காணியை குடுக்கட்டும் என்று சொன்னார். இதாலதான் காணியை அளக்க வந்தவையையும் நாங்கள் விடேல. எங்களுக்கு காணியை முதல்ல தாங்கோ.

நாங்களும் சண்டையில ஒண்டுமில்லாமல்தான் தப்பிப் போனனாங்கள். இப்ப எதுவுமில்லாமல் வந்திருக்கிறம். அவை புத்தளத்தில எல்லாம் வசதியாய் இருந்து போட்டு இப்ப வந்து காணி வேணும் என்று கேக்கிறது எந்த வகையில நியாயம் ? அங்க அவைக் காணி இருக்கு. அதை வச்சுக்கு கொண்டு இஞ்ச

(22ஆம் பக்கம் பார்க்க)

# ஒரு குற்றம் இரு தண்டனைகள்

■ தகனன்

சட்டம் சிலவேளைகளில் அதன் சொற்களால் கடுந்தன்மையானதாகக் காணப்படுகின்றது. இதனால் நீதிமறுக்கப்படவும் வாய்ப்பு ஏற்படுகின்றது. இவ்வாறான சட்டத்தின் கடுந்தன்மையைக் குறைத்து நீதியை உறுதிசெய்ய கொண்டு வரப்பட்டவையே இயற்கை நீதிக் கோட்பாடுகளாகும். இயற்கைநீதிக் கோட்பாடுகளை மீறி எடுக்கப்படும் எந்தத் தீர்ப்பும் வெற்று வெறிதாகிவிடும் என்பது நியதியாகும்.

இயற்கை நீதிக் கோட்பாடுகளில் உள்ள விடயமொன்றாக உள்ளதே எவெ பொருவரும்ஒரேதவறொன்றுக்காக இருமுறை தண்டிக்கப்படக் கூடாது என்பதாகும்.

**முக்கியமான தீர்ப்பு**

கடந்த வெள்ளிக்கிழமை இந்திய உயர் நீதிமன்றத்தினால் மிக முக்கிய தீர்ப்பு ஒன்று வழங்கப்பட்டது. 1993 ஆம் ஆண்டு டெல்லியில் நடந்த குண்டு வெடிப்பு தொடர்பான வழக்கில் காலிஸ்தான் விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த தேவீந்தர் பால் சிங் புல்லர்' என்பவருக்கு 2002 இல் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. தூக்குத் தண்டனையை குறைக்கக் கோரி புல்லர் சார்பாக 2003 இல் கருணைமனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. சுமார் 8 ஆண்டுகளாக இந்திய குடியரசுத் தலைவர்கள் கருணை மனுவை பரிசீலித்து ஈற்றில் பிரதீபா பட்டேல் கடந்த 2011 ஆம் ஆண்டு கருணை மனுவைநிராகரித்திருந்தார்.


'கருணை மனு மீது முடிவு எடுப்பதில் நீண்ட தாமதம் ஏற்பட்டதால் மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைக்க வேண்டும்' என்ற கோரிக்கை மனு புல்லர் சார்பாகதாக்கல் செய்யப்பட்டிருந்தது. புல்லரின் மறு ஆய்வு மனுவை விசாரித்திருந்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள் ஜி.எஸ். சிங்வி, சூரியன் ஜோசப் அடங்கியநீதிபதிகள் குழாம், மனுவை நிராகரித்து தீர்ப்பு வழங்கியது.

புல்லரின் தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்க முகாந்திரம் இல்லை என்றும், கருணை மனு தள்ளுபடி செய்யப்பட்டதற்கு கால தாமதத்தை காரணம் காட்ட முடியாது என்றும் நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில் தெரிவித்தனர்.

**இதேபோன்ற இன்னொருவழக்கு**

இந்த தீர்ப்பு ஏன் முக்கிய தீர்ப்பாகக் கருதப்படுகிறது என்றால் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள முருகன், சாந்தன் மற்றும் பேரறிவாளன் ஆகியோர் தொடர்பிலும் இத்தகைய ஒரு வழக்கு உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதனாலேயேஆகும்.

இந்தியப் பிரதமராக இருந்த ராஜீவ் காந்தி 1991-ம் ஆண்டு மே 21-ம் திகதி தமிழகத்தின் ஸ்ரீபெரும்புதூரில் படுகொலை செய்யப்பட்டார். இச் சம்பவம் தொடர்பாக 8 வருடங்களாக தடா சிறப்புச் சட்ட நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கில் ஆண்டு 26 பேருக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. இதில் ஏனையோர் இந்திய உச்சநீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்ய அவர்களின் தூக்குத் தண்டனை ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது. ஆனாலும் முருகன், சாந்தன், பேரறிவாளன், நளினி உள்ளிட்ட நால்வருக்கும் 1999 இல் உச்சநீதிமன்றத்தினால் தூக்குத் தண்டனை உறுதி செய்யப்பட்டது. பின்னர் தமிழக ஆளுநரால் நளினிக்கு ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது.



எனவே முருகன்,சாந்தன்,பேரறிவாளன் மூவரும் தண்டனையை குறைக்கக் கோரி இந்தியகுடியரசுத் தலைவருக்கு 1999 இலே கருணை மனுத்தாக்கல் செய்திருந்தனர். அப்போது கே. ஆர்.நாராயணன் குடியரசுத் தலைவராக இருந்தார். பின்னர் அப்துல் கலாம் வந்தார். இவர்கள் இருவரும் 8 வருடங்களாக கருணை மனுவை பரிசீலித்த போதும் அதனை நிராகரிக்காமல் இருந்துவந்தனர். பின்னர் 2007 இல் பிரதீபா பட்டேல் குடியரசுத் தலைவரானார். இவரும் 4 வருடங்கள் ஆய்வு செய்து கடந்த 2011 இல் கருணை மனுவை நிராகரித்தார். அதாவது கருணை மனுத் தாக்கல் செய்யப்பட்டு 12 வருடங்களின் பின்னரே அது நிராகரிக்கப்பட்டுள்ளது. கருணை மனு ஒன்றை பரிசீலிக்க 12 ஆண்டுகள் எடுத்துக் கொண்ட வரலாறு இந்தியாவில் மட்டுமே நடந்திருக்கிறது எனலாம்.

**இரட்டைத்தண்டனைக்கு எதிராக வழக்கு**

ராஜீவ் காந்தி கொலைச் சம்பவத்துடன் கைதுசெய்யப்பட்ட மூவரும் விசாரணை நடந்த காலப்பகுதி மற்றும் கருணை மனு பரிசீலனையில் இருந்த காலப்பகுதி என்று சுமார் 20 வருடங்களுக்கு அதிகமாக சிறையிலேயே கழித்து வருகின்றனர். குறிப்பாகச் சொல்வதானால் அவர்கள் ஏற்கனவேஒரு 20 வருட சிறைத் தண்டனையைஅனுபவித்துவருவதால் இயற்கைநீதிக் கோட்பாட்டிற்கு அமைய அவர்களுக்கு மற்றுமொரு தண்டனை வழங்கப்பட முடியாது என்பதே சிலரின் வாதமாக இருக்கின்றது.

மூவர் சார்பிலும் ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ உச்ச நீதிமன்றத்தில் மறு ஆய்வு மனு தாக்கல் செய்திருந்தார். இந்தவழக்கின்தீர்ப்புவழங்கப்படும் வரைகைதிகளுக்குத் தூக்குத் தண்டனை நிறைவேற்றஉச்சநீதிமன்றம் தடைவிதித்திருந்தது.

இதற்கிடையே,வீரப்பன் கூட்டாளிகள் சைமன், ஞானப்பிரகாஷ், மாத்தையன், பலவேந்திரன் ஆகிய நான்கு பேரின் கருணை மனுக்களை குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி கடந்த பெப்ரவரியில் நிராகரித்தார். இவர்களும் உச்ச நீதிமன்றத்தில் தங்களுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கக் கூடாது என்று கோரி மறு ஆய்வு மனுக்களைத் தாக்கல் செய்தனர்.

இவர்களின் கோரிக்கை தேவீந்தர் பால் சிங் புல்லர்" விடுத்த கோரிக்கையை ஒத்து இருப்பதால், முருகன், சாந்தன், பேரறிவாளன் மற்றும் வீரப்பன் கூட்டாளிகள் ஆகியோரின் வழக்குத் தீர்ப்புகளிலும் புல்லர் வழக்குத் தீர்ப்பு செல்வாக்குச் செலுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நீதியை நிலைநாட்டும் கடப்பாடுடைய நீதிமன்று இந்த இரு வழக்குகளின் தீர்ப்புகளிலும் இயற்கைநீதியை கருத்தில் எடுக்குமா? அல்லது ஆளும் காங்கிரஸ் தரப்பின் கொள்கைகளை தனது தீர்ப்பில் வலியுறுத்துமா? என்பதைப் பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.

# முள்ளியவளை முடியாத முடிவு...

(21 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எங்கட இடத்தில காணி கேக்கினம் '' என்கிறார் அங்குள்ள ஒரு பெண்மணி.

**எதிர்ப்பால் மாறிய இடம்**

மக்களின் எதிர்ப்பைத் தொடர்ந்து குறித்த 78 குடும்பங்கள் வசிக்கும் பகுதிக்குரிய காணிகளை அவர்களுக்கே வழங்குவதென்றும் இவர்களின் குடியிருப்புப் பகுதியிலிருந்து 200 மீற்றர் தொலைவில் காட்டின் நடுவே ஒரு பாதை வெட்டப்பட்டுள்ளது. அந்தப் பாதையின் மறுகரையில் முஸ்லிம் மக்களை குடியேற்றுவதென்று அரச உயர் அதிகாரிகள் தீர்மானித்தனர்.

இதற்குரிய நடவடிக்கைகளை குறித்த மக்களை குடியேற்றுவதற்கு முயற்சிக்கும் அரச அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தொடக்கி வைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்த மாதம் 6 ஆம் திகதி மேற்படி நடவடிக்கைகள் தொடக்கி வைப்பதற்காக 5 பெரிய 'பைக்கோ' இயந்திரங்களும் முள்ளியவளைப் பகுதிக்கு கொண்டு வரப்பட்டிருந்தன.

''முஸ்லிம் சனத்துக்கு காணி குடுக்கப் போறாங்கள் எண்டதை அறிஞ்ச எங்கட ஏரியா காணியில்லாத சனம் முழுக்க அந்த இடத்தில குவிஞ்சிட்டுது. இந்தக் காணியில இருக்கிற 78 குடும்பத்தில கொஞ்சப் பேர் போனாங்கள். கிட்டத்தட்ட தொள்ளாயிரம் பேருக்கு எங்கட ஏரியாவில மட்டும் காணியில்லை. அதுகள் தங்களுக்கு காணியைத் தந்திட்டுத்தான் முஸ்லிம் சனத்துக்கு குடுக்கலாம் எண்டதுல விடாப்பிடியாக நிண்டதுகள்.

இதை மீறி 'பைக்கோவை' எடுத்தா வீண் சண்டை வரும் எண்டு போட்டு சனம் நிண்டதுகள். சனத்திண்ர விடாப்பிடியால கடைசியில அவை காணிக்க கை வைக்கேல '' என்றார் யசோ.

**உண்ட வீட்டுக்கே வஞ்சகம்**

''எங்கட சனத்துக்கு வேணும். எங்கட யாக்கள் வோட்டுப்போட்டுத்தான்ரிஷாத் அமைச்சரானவர். அவர் தனிய முஸ்லிமுக்கு மட்டும் அமைச்சரில்லைதானே. எங்கட வோட்டாலதான் அவர் அமைச்சரானவர். இப்ப எங்கட யாக்களுக்கே சேட்டை காட்டுறார். எங்களுக்கு காணியை தராது விட்டிட்டு தன்ர ஆக்களுக்கு காணி குடுக்க வெளிக்கிடுறார் '' என்று தங்கள் ஆதங்கத்தை வெளிப்படுத்தினர்.

அந்தப் பகுதிக்குள் குடியேறவுள்ள முஸ்லிம் மக்கள் தற்போது முல்லைத்தீவில் இல்லை. அவர்கள் புத்தளம் திரும்பி விட்டதாக நீராவிப்பிள்ளை, கீச்சாபுரத்திலுள்ள முஸ்லிம் மக்கள் தெரிவிக்கின்றனர்.

மக்களின் தொடர்ச்சியான எதிர்ப்பினால் முள்ளியவளையில் முஸ்லிம்களை குடியேற்றும் நடவடிக்கைகள் தற்போது கிடப்பில் போடப்பட்டுள்ளன. இந்த விடயங்கள் தொடர்பில் கரைத்துறைப்பற்று பிரதேச செயலர் குகநாதனிடம் கேட்ட போது, காணிக் கச்சேரி நடத்தி காணியில்லாதவர்களுக்கு காணி பகிர்ந்தளிக்கப்படும் என்ற ஒற்றை வரியுடன் தனது பேச்சை நிறுத்திக் கொண்டார்.


இதேவேளை மேற்படி அமைச்சருக்கு சாதகமாக காணி தொடர்பில் ஜனாதிபதி விசேட செயலணி சுற்றறிக்கை வெளியிட்டிருந்தது. அந்தச் சுற்று நிருபம் தவறென்றும், முள்ளியவளைப் பிரச்சினையைத் தொடர்ந்து காணி தொடர்பில் புதிய சுற்றறிக்கை வெளியிடுவதற்கும் காணி அமைச்சு நடவடிக்கைஎடுத்துவருவதாககாணி ஆணையாளர் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

**திட்டமிட்ட பிரிவினைவாதம்**

''தமிழ் பேசும் மக்களிடையே பிரிவினைவாதத்தை தோற்றுவிப்பதற்காக அரசு இந்த நடவடிக்கைகளை திட்டமிட்டு மேற்கொள்கிறது. முஸ்லிம் மக்களை முஸ்லிம் அமைச்சர் சார் அரசியல் கட்சியின் பின்புலத்துடனும், தமிழ் பேசும் மக்களை தமிழ் அமைச்சர் ஒருவரின் அரசியல் கட்சியின் ஆதரவுடனும் தூண்டிவிடுவதாகவும் '' முல்லையைப் பிறப்பிடமாகக் கொண்டு யாழ். நகரில் அரச திணைக்களம் ஒன்றில் பணியாற்றுபவர் தெரிவித்தார். இலங்கையில் சிறுபான்மை இனங்களாக இருக்கின்றவர்கள் தங்களுக்குள் மோதிக் கொண்டு மேலும் பலவீனப்பட்டுக் கொள்வது ஆட்சியாளர்களுக்கு வேண்டியதொன்றே. இதனை நன்குணர்ந்து சிறுபான்மை மக்கள் செயற்பட வேண்டும்.

மேலும் உண்மை - நியாயம் என்பவற்றை மதித்து தமிழ் பேசும் முஸ்லிம் மக்களுக்கு காணிகளை வழங்க வேண்டும். வெறுமனே தனது வாக்குக்காக முஸ்லிம் மக்களை குடியேற்றுவதை விட்டு பாதிக்கப்பட்ட மக்களை மாத்திரமே குடியேற்ற வேண்டும்.

# திசைமாறும் உண்மைகள்



தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்குமிடையே பாரம்பரிய மொழி உறவு மட்டுமன்றி வாழ்வியல் பொருளாதார கலாசார இலக்கிய உறவுகள் நிலவி வந்துள்ளன.

■ சந்திரசேகர ஆஷாத்

பல்வேறு அரசியல் சக்திகளும் பல்வேறு அரசியல் கொள்கைகளுடன் அரசியல் களத்தில் செயற்படுவதுண்டு. அவை வர்க்க விடுதலை, தேசிய விடுதலை, இன விடுதலை, சமூக விடுதலை, ஒடுக்குமுறை மேலாதிக்கம் என ஒவ்வொரு பிரிவினரும் தாங்கள் அடைய நினைக்கும் இலக்குகளுக்கு அமைவாகக் கொள்கைகளை வகுத்துச் செயற்படுவதுண்டு. ஆனால் இலங்கையில் பல்வேறு தரப்பினரும் ஒருவருடன் ஒருவர் போட்டியிட்டு ஒரு புதிய கொள்கையை பின்பற்றி வருகின்றன. அது ஆட்சியிலுள்ள அதிகாரபீடங்களைத் திருப்திப்படுத்தும் கொள்கையாகும். இந்த அதிகார பீடங்களைத் திருப்திப்படுத்தும் மூன்றாம் தர அரசியலின் முன்பு வர்க்க, இன, மத நலன்கள் அத்தனையும் புறந்தள்ளப்பட்டு விடுகின்றனர்; காலம் காலமாகப் பேணிப் பாதுகாக்கப்பட்ட உண்மைகள் திரிபுபடுத்தப்படுகின்றன. மனித குல தர்மங்கள் அனைத்தும் மழுங்கடிக்கப்படுகின்றன. அண்மையில் அரச வானொலியொன்றில் ஜனாதிபதியின் முஸ்லிம் விவகார ஆலோசகரும் சர்வமத பீடத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவருமான மௌலானா குறிப்பிட்ட ஒரு கருத்து மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

அதாவது அரபு முஸ்லிம் வர்த்தகர்களுக்கும் சிங்கள மன்னர்களுக்குமிடையே மிகுந்த நல்லுறவு நிலவியதாகவும் அதன் காரணமாக சிங்களப் பெண்களை முஸ்லிம் வர்த்தகர்களுக்கு மணம் முடித்துக் கொடுத்ததாகவும் அவர்களின் வழித்தோன்றல்களே இலங்கை முஸ்லிம்கள் எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

அந்தக் கருத்தின் மூலம் அவர் சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே இரத்த உறவு உண்டு எனசொல்ல முனைகிறார்.

இலங்கை முஸ்லிம்கள் சிங்களத் தாய்மாரின் வழித்தோன்றல்கள் என்றால் எப்படி அவர்கள் தாய் மொழி தமிழ் ஆனது. அரபு மொழி பேசும் தந்தையர்களுக்கும் சிங்கள மொழி பேசும் தாய்மாருக்கும் பிறந்த பிள்ளைகள் என்றால் அவர்கள் எப்படித் தமிழைத் தாய்மொழியாகக் கொள்ள முடியும்.

மேற்கு வங்காளத்திலும் பங்களாதேஷ் நாட்டிலுமுள்ள முஸ்லிம்கள் வங்காள மொழியையும் உத்தரப் பிரதேசத்திலுள்ள முஸ்லிம்கள் ஹிந்தியையும் பாகிஸ்தானிலுள்ள முஸ்லிம்கள் உருது மொழியையும் தமிழகத்திலுள்ள முஸ்லிம்கள் தமிழையும் தாய் மொழியாகக் கொண்டுள்ளனர். இலங்கையில் வாழும் முஸ்லிம்கள் மட்டும் சிங்களத் தாய்மாரின் வாரிசுகள் என்றால் அவர்கள் ஏன் சிங்களத்தைத் தாய் மொழியாகக் கொள்ளவில்லை.

வடக்குக் கிழக்கில் மட்டுமன்றி தென்னிலங்கையிலும் கூட முஸ்லிம்களின் தாய் மொழியாகத் தமிழ் எப்படி இருக்க முடியும்? மௌலானா வம்சம் கூட எவ்வித சிங்கள தமிழ் கலப்புமற்ற அரபுத் தந்தையருக்கும் அரபுத் தாய்மாருக்கும் பிறந்தவர்களின் வாரிசுகள் என அறிய முடிகிறது.

ஏனைய இலங்கை முஸ்லிம்கள் அரபு வர்த்தகர்கள் தமிழ் பெண்களைத் திருமணம் செய்த காரணத்தால் தோன்றியவர்கள் என்பது தெளிவான விடயம்.

சங்க காலம் தொட்டு இன்று வரை தமிழ் இலக்கியத்துக்கு முஸ்லிம்கள் ஆற்றிய பங்கு அளப்பரியது. தமிழ் இலக்கியப் பரப்பில் சுவாமி விபுலானந்தருக்கு எவ்வளவு கௌரவம் கொடுக்கப்படுகிறதோ அவ்வளவு கௌரவம் உமறுப்புலவருக்கும் உண்டு. ஆண்டாள் பாசுரங்கள் போல் தேவார திருப்பதிகங்கள் போல் தேம்பாவணி போல் சீறாப்புராணமும் தமிழ் மொழிக்குக் கிடைத்த அரிய பொக்கிஷமே. சங்க காலத்தில் வாழ்ந்த ஈழத்துப் பூதர் தேவனார் என்ற புலவர் எருக்கலம்பிட்டியைச் சேர்ந்த ஒரு முஸ்லிம் எனச் சில ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அதைவிட புத்தளம், மட்டக்களப்பு பகுதிகளைச் சேர்ந்த பல புலவர்கள் இந்தியாவிலேயே பெரிதும் மதிக்கப்படுமளவுக்குத் தமிழ்ப் புலமையும் கவித்துவமும் பெற்று விளங்கினர்.

முஸ்லிம்களின் நாட்டார் பாடல்கள் தமிழ், முஸ்லிம் மக்களிடையே இன்றும் பெருமையுடன் வலம் வருகின்றன. தமிழ், முஸ்லிம் மக்கள் கலாசார உறவின் ஆவணப் பதிவுகளாக இன்றும் அவை விளங்கி வருகின்றன.

நவீன சிறுகதை, கவிதை, குறுநாவல், இலக்கியப் பரப்பிலும் முஸ்லிம் படைப்பாளிகள் ஒப்பற்ற சாதனைகளை நிலை நாட்டியுள்ளனர். அவர்கள் இலங்கையில் மட்டுமன்றி தமிழகத்திலும் மதிக்கப்படும் படைப்பாளிகளாகத் திகழ்கின்றனர்.

மௌலானா கூறுவது போன்று முஸ்லிம்கள் சிங்கள தாய்மாரின் வாரிசுகள் என்றால் அவர்கள் ஏன் சிங்களத்தில் இப்படியான சாதனைகளை நிலைநாட்டவில்லை. மட்டக்களப்பு மாவட்டத்தில் 1990 இற்கு முன்பு பல கிராமங்களில் கண்ணகை அம்மன் கோவில்களில் வழுந்து எனப்படும் அடுப்பில் பொங்கல் பானை ஏற்றுவது ஒரு முஸ்லிம் குடும்பஸ்தவராகவே இருப்பார். இவ்வாறே முஸ்லிம்களின் முதல் கந்தூரி பெறுபவர் ஒரு தமிழராகவே இருப்பார். அப்படியான ஒரு கலாசார உறவு இரு இனங்கள் மத்தியிலும் நிலவி வந்தது.

இப்படியாக தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்குமிடையே பாரம்பரிய மொழி உறவு மட்டுமன்றி வாழ்வியல் பொருளாதார கலாசார இலக்கிய உறவுகள் நிலவி வந்துள்ளன.

ஆனால் மௌலானா உட்பட ஒரு சிலர் சிங்கள ஆட்சியாளரை மனம் குளிர வைக்கவும் முஸ்லிம்களுக்கு எதிராகச் சிங்கள இனவெறியர் செய்யும் அநீதிகளுக்கெதிரான முஸ்லிம் மக்களின் கோபத்தைத் திசை திருப்பவும் முஸ்லிம்கள் சிங்களத் தாய்மாரின் பிள்ளைகள் என நிறுவ முயல்கின்றார். இப்படியான திருப்திப் படுத்தும் அரசியலில் உறுதியாக நின்று உரக்கக் குரலெழுப்பும் இன்னொருவர் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் அஸ்வர் அவர்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இலங்கையில் முஸ்லிம்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளைக் கண்டித்து நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்திய போது அஸ்வர் கொதித்தெழுந்து அடிக்கடி குறுக்கீடு செய்தார். அது மட்டுமன்றி அந்த உரைக்கு எதிராக ஒரு காட்டமான பதிலுரையையும் வழங்கி ஆட்சியாளர்களையும் சிங்கள இன வெறியரையும் திருப்திப்படுத்திக் கொண்டார்.

ஞாயிறு காரம்

விடுதலைப் புலிகள் காத்தான்குடி பள்ளிவாசலில் முஸ்லிம்களைப் படுகொலை செய்த போதும் வடக்கிலிருந்து முஸ்லிம்களை விடுதலைப் புலிகள் வெளியேற்றிய போதும் கண்டிக்காத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு முஸ்லிம்களின் பள்ளிவாசல் தாக்கப்படும்போதும் முஸ்லிம்களின் வர்த்தக நிலையங்கள் தாக்கப்படும்போது கண்டிக்க என்ன உரிமை இருக்கிறது என்பதுதான் அவரின் கேள்வி.

1990 ஆம் ஆண்டில் வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற ஒரு கட்சி இருக்கவில்லை. ஏறக்குறைய 10 ஆண்டுகளின் பின்பே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. சம்பவம் நடந்தபோது பிறப்பெடுக்காத ஒரு கட்சி எப்படி சம்பவத்தைக் கண்டிக்க முடியும்? ஒரு நாடாளுமன்ற உறுப்பினரால் இதைக் கூடப் புரிந்துகொள்ள முடியாதா? அப்போது வேறு அமைப்புகளில் இருந்து பின் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இணைந்த சிலர் கூட விடுதலைப் புலிகளுக்குப் பயந்து வெளிநாடுகளுக்கு ஓடியிருந்தனர் என்பது அஸ்வருக்குத் தெரியாதா? அப்படியானால் என்ன அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக் கண்டிக்க முடியும்?

ஆனால் இன்றுவரை காத்தான்குடி பள்ளிவாசல் சம்பவத்தையும் வடக்கிலிருந்து முஸ்லிம்களை வெளியேற்றியதையும் சொல்லிச் சொல்லி தமிழ் முஸ்லிம் மக்களிடையே பிளவுகளை ஏற்படுத்தி அதில் அரசியல் பிழைப்பு நடத்தி வருகின்றனர் சில அரச சார்பு முஸ்லிம் அரசியல்வாதிகள்.

முஸ்லிம்களின் பரமவைரியான இஸ்ரேல் நாட்டின் உளவுப் பிரிவான மொசாட்டால் பயிற்றுவிக்கப்பட்ட முஸ்லிம் ஊர்காவல் படையினர் சிறப்பு அதிரடிப் படையினருடன் இணைந்து தமிழ் மக்கள் மீது நடத்திய பெரும் கொலை வெறியாட்டம் வரலாற்றில் மறைக்கப்படக் கூடியதா? வந்தாறுமூலை, சந்துருக்கொண்டான், புதுக்குடியிருப்பு, வீரமுனை, கொக்கட்டிச்சோலை, உடும்பன் குளம் எனத் தமிழ் கிராமங்களில் தமிழ் மக்கள் மீது பெண்கள், குழந்தைகள், முதியோர் என எல்லோர் மீதும் நடத்தப்பட்ட கூட்டுக் கொலைகளை இல்லையென்று சொல்லிவிட முடியுமா?

விடுதலைப் புலிகள் முஸ்லிம்களுக்கு எதிராக இழைத்த அநீதிகள் போன்றே முஸ்லிம்கள் ஊர்காவற் படை தமிழர்களை ஆயிரக்கணக்கில் கொன்று குவித்ததமையும் கண்டிக்கப்பட வேண்டியதே. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுதலைப் புலிகளைக் கண்டிக்கவில்லை எனக் குற்றம் சாட்டும் அஸ்வரும் அதுரும் தமிழ் மக்கள் மீது முஸ்லிம் ஊர்காவற் படை நடத்திய படுகொலைகளை ஏன் கண்டிக்கவில்லை. அவர்கள் அப்போது நாட்டில் தானே இருந்தார்கள். ஏன் இன்றுவரை கண்டிக்க மனம் வர வில்லை. முஸ்லிம் ஊர்காவற் படையும் விடுதலைப் புலிகளும் ஆயுதம் ஏந்திய குழுக் கள். அவர்களின் நடவடிக் கை களுக்கு ஜனநாயக அரசியல் வாதிகளோ அல்லது தமிழ் முஸ்லிம் மக்களோ எப்படிப் பொறுப்பேற்க முடியும்.

இன்று அரச சார்பு முஸ்லிம் அரசியல்வாதிகள் இந்த உண்மைகளையெல்லாம் புறந்தள்ளி விட்டு ஒரே மொழியைப் பேசும் சிறுபான்மை மக்களாக அடக்கி ஒடுக்கப்படும் தமிழ், முஸ்லிம் மக்களிடையே குரோதங்களை வளர்க்கத் திட்டமிட்டும் செயற்பட்டு வருகின்றனர். இவர்களின் ஒரே நோக்கம் சிங்கள, பௌத்த இனவெறி ஆட்சியாளர்களின் தேவைகளை நிறைவு செய்து அவர்களைத் திருப்திப்படுத்துவதாகும்.

இந்தப் பணியில் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் கூட சற்றும் சளைத்தவர் அல்ல. மன்னார் முல்லை மாவட்டங்களில் ஏற்கனவே தமிழ் மக்கள் குடியிருந்த காணிகளில் முஸ்லிம் மக்களைக் குடியேற்ற முயல்வதும் அதைத் தமிழர்கள் எதிர்த்தால் உடனே வடபகுதியில் முஸ்லிம்கள் மீளக் குடியமர்வதைத் தமிழர்கள் எதிர்க்கிறார்கள் எனவும் பிரசாரம் செய்து வருகிறார்.

அதாவது இன்று அரசுடன் இணைந்துள்ள பல முஸ்லிம் அரசியல்வாதிகள் தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்குமிடையே முரண்பாடுகளையும் மோதல்களையும் உருவாக்கி அரசின் சிறுபான்மை மக்களைப் பிரித்தாளும் கொள்கைக்கு துணை போகின்றனர். ஆட்சியாளர்களைத் திருப்திப்படுத்தும் இவர்களின் கடைகெட்ட அரசியலை மக்கள் புரிந்துகொண்டு விழிப்பாயிருப்பது அவசியமாகும்.★

# பொஸ்டன் குண்டுவெடிப்பு: பின்னணியில் யார்?

உலக நடப்புகள் ஒரு பார்வை

■ ரெங்கன்



அமெரிக்காவின் பொஸ்டன் நகரில் நடந்துள்ள குண்டுவெடிப்பு அமெரிக்க மக்களை மட்டுமல்ல உலக நாடுகள் யாவற்றையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

அமெரிக்க அதிகாரிகள் மிகவும் கவனமாக இருந்து வந்துள்ளனர். என்றாலும் எல்லாவற்றையும் மீறி இந்தக்குண்டு வெடிப்பு நடத்தப்பட்டுள்ளது.

பொஸ்டனில் வழக்கமாக வருடந்தோறும் நடைபெறும் பிரபல்யமான மரதன் ஓட்டத்தின் இறுதிக்கட்டத்தில் இந்த குண்டு வெடிப்பு நடத்தப்பட்டுள்ளது.

இந்தக் குண்டுவெடிப்பினை உடனடியாக பயங்கரவாதச் செயல் என்று அறிவிக்க அதிகாரிகள் மறுத்திருந்தார்கள். ஆனால் ஊடகங்கள் பயங்கரவாத செயல் என்று குறிப்பிடுவதற்கு தயங்கவில்லை.

அதிபர் ஒபாமாவும் கூட மக்களை அவசரப்பட்டு ஒரு முடிவுக்கு வந்துவிட வேண்டாம் என்று கேட்டுக்கொண்டிருந்தார். எல்லாவித ஆதாரங்களும் நமக்கு கிடைக்கும் வரை எந்த வித முடிவிலும் அவசரப்பட்டு இறங்கிவிடக்கூடாது என்று கூறியிருந்தார். சம்பந்தப்பட்டவர்கள் இனிமேல்தான் அடையாளம் காணப்பட வேண்டும் என்று கூறிய அதிபர் குற்றம் புரிந்தவர்களுக்கு நீதியின் தண்டனை கிடைத்தே தீரும் என்றும் சொன்னார். இது ஒரு புத்தியில்லாத செயல், நீதியின் முழுத் தாக்கத்தையும் இதில் சம்பந்தப்பட்டவர்கள் உணரவேண்டி வரும் என்றும் சொன்னார் ஒபாமா.

கடுமையான அல்லது கறுப்பு நிறமுள்ள ஒரு மனிதன் மீது கவனம் எடுக்கும்படி புலனாய்வுத் தகவல்கள் எச்சரித்துள்ளன. மரதன் ஓட்டம் முடிவுற ஐந்து நிமிடங்கள் இருந்தபோது முதுகில் கறுப்புப் பையுடன் ஒரு மனிதன் தடை செய்யப்பட்ட பகுதிக்குள் நுழைவதற்கு எத்தனித்ததாகவும் அந்த மனிதனையே சம்பவத்துடன் தொடர்புபடுத்தி அதிகாரிகள் தேடத் தொடங்கியுள்ளார்கள் என்றும் கூறப்படுகின்றது.

மரதன் ஓட்டம் முடிவுறும் தறுவாயில் இருந்தபோது ஆரவாரம் செய்து கொண்டிருந்த மக்கள் மத்தியில் ஒன்றன்பின் ஒன்றாக இரண்டு குண்டுகள் வெடித்ததாகவும் குறைந்தது மூன்று பேர் கொல்லப்பட்டு 180 பேருக்கு மேல் காயமுற்றதாகவும் முதலில் கிடைத்த செய்திகள் கூறின. 42 கிலோமீற்றர் தூரம் கொண்ட மரதன் ஓட்ட வீதியை ஓடி முடித்து முடிவுக் கோட்டை வீரர்கள் அண்மித்த வேளை, ஆயிரக்கணக்கான மக்கள் வரிசை வரிசையாக நின்று உற்சாகமூட்ட ஆரவாரித்துக் கொண்டிருந்தார்கள். பக்கத்து நடைபாதையில் குண்டுகள் வெடித்தன. இது ஒரு பயங்கரவாத செயலாகவே கருதப்பட்டு அதற்கேற்ப அணுகப்படுவதாக அமெரிக்க அரசு அறிவித்துள்ளது. ஆனால் யார் செய்தார்கள் என்பது இன்னமும் நிர்ணயிக்கப்படவில்லை. புலனாய்வுகளின் மூலம் இது பயங்கரவாத குழுவினாலா, உள்ளூர் குழுவினாலா , வெளிநாட்டு குழுவினாலா என்பதெல்லாம் நிர்ணயிக்கப்படும் என்று வெள்ளை மாளிகை பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

வேறு இரு இடங்களிலும் இரண்டு வெடிக்காத குண்டுகளை அதிகாரிகள் கண்டெடுத்துள்ளார்கள். அதே சமயம் அமெரிக்காவினுள் முக்கிய பெரிய நகரங்களில் எல்லாம் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. நியூயோர்க், லொஸ் ஏஞ்சலஸ், சிக்காக்கோ மற்றும் வாஷிங்டன் ஆகிய நகரங்கள் இதில் அடங்கும்.

பிரஷர் குக்கர்களை குண்டுகளாக சம்பந்தப்பட்டவர்கள் பயன்படுத்தியுள்ளார்கள். அவைகளில் இருந்து இரும்பு ஆணிகளும் , உலோகத் துண்டுகளும் மரதன் ஓட்டத்தைக் கண்டு களித்துக் கொண்டிருந்த இரசிகர்கள் மீது விசிறியடிக்கப்பட்டு 180 பேருக்கு மேல் காயமுற்றும் மூன்று பேர் உயிரிழந்துள்ளனர் என்று அதிகாரிகள் கூறினார்கள்.

### 1000 புலனாய்வாளர் களத்தில்

அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகள் நாட்டிலுள்ள சகல புலனாய்வு அமைப்புகளையும் இதில் ஈடுபடுத்தியுள்ளார்கள். பொஸ்டனில் மாத்திரம் 1000 புலனாய்வு அதிகாரிகள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அரச புலனாய்வு அமைப்பின் தலைவர் றிக்டெஸ் வாரியர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

இது உலகம் முழுவதிலுமான ஓர் புலனாய்வாக இது இருக்கப் போகின்றது. இந்தக் குற்றச் செயலில் ஈடுபட்ட நபர் அல்லது அமைப்பைக் கண்டுபிடிப்பதற்கு உலகின் எல்லை வரைக்கும் கூட போவதற்கு நாங்கள் தயங்கப் போவதில்லை என்றார் அவர்.

பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படும் பிரஷர் குக்கர்களின் சிதறிய துண்டுகளும் ஆணிகளும் உலோகத்துண்டுகளும் கிடைத்துள்ளன. இவை போன்று இலகுவாக உருவாக்கக்கூடிய குண்டுகள் பாதையோரங்களில் ஈராக்கிலும், ஆப்கானிஸ்தானிலும் முன்னர் பயன்படுத்தப்பட்டுள்ளன என்று லாரியர்ஸ் கூறினார்.

காயமடைந்தவர்களுக்கு அந்த இடத்திலேயும், மருத்துவமனையிலும் மருத்துவர்கள் அவசர சிகிச்சையளித்தனர். இறந்தவர்களில் எட்டு வயதான மார்ட்டின் றிச்சர்ட் என்ற பையனும் ஒருவர். தன் குடும்பத்தோடு பந்தயத்தை பார்த்துக்கொண்டிருந்துள்ளான். பையனின் தாயார் மூளையில் பலத்த காயமுற்றார். அவனுடைய சகோதரி ஒரு காலை இழந்தார். பொஸ்டன்ஸ் பல்கலைக்கழகத்தில் பயிலும் சீன மாணவி ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

பொஸ்டன்குண்டுவெடிப்பின் சூத்திரதாரியின் தோற்றமாதிரிகளை அமெரிக்க புலனாய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளதாக அறிவித்துள்ளார்கள். எவரும் நேற்று வரை கைது செய்யப்படவில்லை . ஆனால் புலனாய்வு கமராக்களிலும் மற்றும் படங்களிலிருந்தும் குண்டு வைத்தவரின் தோற்ற மாதிரிகள் கிடைத்துள்ளன.

### தொழிற்சாலையில் வெடி விபத்து

பொஸ்டன்குண்டுவெடிப்பின் தாக்கத்திலிருந்து அமெரிக்க அதிகாரிகள் மெதுவாக மீண்டு கொண்டிருக்கும் வேளையில் டெக்ஸாஸ் மாகாணத்தில் வாகோவுக்கு வெளியில் வெஸ்ட் என்ற சிறிய நகரில் உரத் தயாரிப்பு தொழிற்சாலையொன்றில் ஏற்பட்ட குண்டு வெடிப்பு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தொழிற்சாலையின் அருகில் இருந்த பல வீடுகள் தரைமட்டமாகியுள்ளன. பலபேர் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் அஞ்சப்படுகின்றது.

ஒரு குடியிருப்பு கட்டடத் தொகுதி தாதிகள் விடுதியும் அழிக்கப்பட்டுவிட்டதாகச் செய்திகள் கூறின. அணுகுண்டு வெடித்தது போல் சத்தம் இருந்ததாகவும் தொழிற்சாலை கொழுந்துவிட்டு எரிந்ததாகவும் அதிகாரிகள் கூறினார்கள்.

### வடகொரியாவின் கடும் நிபந்தனை

பேச்சு வார்த்தைக்கு வருமாறு அமெரிக்கா விடுத்த அறிவுறுத்தலை ஏற்றுக் கொண்டுள்ள வடகொரியா அதற்கென கடுமையான நிபந்தனைகளையும் அறிவித்துள்ளது.

தென்கொரியாவிடுத்த அழைப்பை நிராகரித்து அமெரிக்காவின் அழைப்பை வட கொரியா ஏற்றுக் கொண்டிருப்பதை சுமூக நிலை உருவாக உதவக்கூடும் என்று கருதப்பட்ட போதிலும் வடகொரியாவின் நிபந்தனைகளை அமெரிக்கா ஏற்றுக்கொள்ளுமா அல்லது நிராகரிக்குமா என்பது தெரியவில்லை என்று விமர்சகர்கள் தெரிவிக்கிறார்கள்.

வடகொரியா விதித்துள்ள நிபந்தனைகளில் தென்கொரியாவுடனோ அமெரிக்காவுடனோ பேச்சு வார்த்தை எதனையும் நடத்துவதானால் தென்கொரியாவும் அமெரிக்காவும் நடத்தி வரும் காட்டு பயிற்சிகளை நிறுத்த வேண்டும்.

ஐ.நா. விதித்துள்ள பொருளாதாரத் தடைகளை உடனடியாக திரும்பப் பெறவேண்டும் என்பவற்றுடன் ஒரு நிபந்தனை பட்டியலையே வெளியிட்டுள்ளது.

இதுவரை காலமும் வடகொரியாவுக்கு எதிராக எல்லாவித ஆத்திரமூட்டும் செயல்களுக்கும் பொது மன்னிப்புக் கோர வேண்டும் என்பது இன்னொரு நிபந்தனை. ஆனால் இந்தவித நிபந்தனைகளை அமெரிக்காவோ தென்கொரியாவோ ஏற்றுக் கொள்ளும் நிலையில் இல்லை. ஏனென்றால் அவைகளும் வடகொரியாவுடனான பேச்சுக்களுக்கு முன் நிபந்தனைகளை அறிவித்துள்ளன. எந்தவித பேச்சானாலும் அணு ஆயுதம் வைத்திருப்பதில்லை என்று உத்தரவாதம் வழங்கப்படவேண்டும் என்பது அவர்களின் நிபந்தனை. இன்றைய நெருக்கடிகள் யாவற்றுக்கும் பொருளாதாரத் தடைகளே முக்கிய காரணம் என்று வடகொரியா கூறிவந்துள்ளது.

இன்னொரு முக்கிய நிபந்தனை என்னவென்றால் தென் கொரியா அமெரிக்க இராணுவ பயிற்சிகள் நிறுத்தப்படவேண்டும் என்பதாகும். இந்தப் பயிற்சியில் அணுகுண்டை காவிச் செல்லும் பி 52, மற்றும் பி 2 குண்டு வீச்சு விமானங்களும் இடம்பெறுகின்றன. இந்தமாதிரி அணு ஆயுத பயிற்சிகளை இந்த நாடுகள் இனி ஒரு போதும் மேற்கொள்ள மாட்டாதென்பதற்கான சர்வதேச உத்தரவாதங்களை வழங்க வேண்டும் என்பதும் நிபந்தனையாகும். பேச்சு வார்த்தைகளும் போர் விளையாட்டுக்களும் ஒரே சமயத்தில் நடைபெற முடியாது என்று வடகொரியா தெரிவித்துள்ளது.

> “உலகம முழுவதிலுமான ஓர் புலனாய்வாக இது இருக்கப் போகின்றது. இந்தக் குற்றச் செயலில் ஈடுபட்ட நபர் அல்லது அமைப்பைக் கண்டுபிடிப்பதற்கு உலகின் எல்லை வரைக்கும் கூட போவதற்கு நாங்கள் தயங்கப் போவதில்லை என்றார் அவர்.

### முஷாராவின் கனவு பலிக்காது

முன்னாள் பாகிஸ்தான் அதிபர் பர்வேஸ் முஷாரப்பின் அதிபர் தேர்தலில் போட்டியிடும் கனவு பலிக்கப்போவதில்லை என்பது இப்பொழுது தெரியவந்துள்ளது. அண்மையில் வெளிநாட்டிலிருந்து நாடு திரும்பிய முஷாரப் குழப்பகரமாகவுள்ள நாட்டைக் காப்பாற்றுவதற்காக அதிபர் தேர்தலில் போட்டியிடப் போவதாக அறிவித்திருந்தார். 2007 ஆம் ஆண்டு முன்னாள் பிரதம மந்திரி பெனாசீர் பூட்டோ கொலை தொடர்பான அவர் மீதான வழக்கு நிலுவையில் இருப்பதுடன் அவரும் பிணையில் இருந்து வருகின்றார். பலுகீஸ்தான் புரட்சித் தலைவர் ஒருவர் கொல்லப்பட்டது தொடர்பாகவும் , 2007 ஆம் ஆண்டு அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தி நீதிவான்கள் பலரை சிறையில் அடைக்கும் வழக்கும் நிலுவையில் உள்ளது.

நீதிபதிகளைச் சிறை வைத்த வழக்கு அண்மையில் முஷாரப் பிணை கேட்டு மனு செய்திருந்தமை தொடர்பான விசாரணை இஸ்லாமாபாத் உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. விசாரணையின் போது முஷாரப்பும் நீதிமன்றுக்கு வந்திருந்தார். பிணை நீடிப்பை நீதியரசர் தள்ளுபடி செய்தார். முஷாரப்பை கைது செய்யும்படி உத்தரவிட்டார். தீர்ப்பைக் கேட்டு அதிர்ச்சியுற்ற முஷாரப் உடனடியாக அவசரமாக நீதிமன்றிலிருந்து பாதுகாவலர்களின் ஆதரவுடன் வெளியேறினார். என்றாலும் அவர் நீதிமன்ற உத்தரவின்படி கைது செய்யப்படலாம் என்று கருதப்படுகின்றது.